விலை : 20.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுகள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 24 ஞாயிற்றுக்கிழமை (07.05.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 139

# நம்பி ஏமாறுகிறோம் விழிப்படைய வேண்டும்

## ரெலோ - சிறிகாந்தா சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

புதிய அரசியலமைப்பு விவகாரம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் "பழைய குருடி கதவைத் திறவடி" என்ற சிந்தனையில்தான் சிங்கள பெரும்பான்மையினரின் சிந்தனைகள் அமைந்திருக்கின்றன. இதற்கு நாங்கள் நம்பி ஏமாந்த பல வரலாறுகளை குறிப்பிட முடியும் என தெரிவித்த தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான என்.சிறிகாந்தா, தமிழர்கள் அரசியலில் தாம் தீர்மானித்த இலக்கை நோக்கி உறுதியாக நகர வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார். (10-ம் பக்.)

## சிறுவனுக்கு மர்ம ஊசி!

(கிண்ணியா)

திருகோணமலை கிண்ணியா மகரூப் நகரைச் சேர்ந்த சிறுவனுக்கு அடையா 15

## அக்கினி நாள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

அக்கினி நட்சத்திரம் அல்லது கத்திரி வெயில் எனப்படும் காண்டாவ 02

## அரசை கவிழ்க்க விடோம்

(கொழும்பு)

மக்கள் ஆணை ஊடாக அமை 15

## வாள்வெட்டு; இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மூன்று மோட்டார் சைக்கிளில் வந்திறங்கிய இனந்தெரியாத 5பேர் கொண்ட குழு வாளால் வெட்டியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 4.45 மணியளவில் சுதுமலை அம்மன் கோவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது. 15

## ஆலயங்களை உடைத்து தொடர் கொள்ளை

### பெண் உட்பட மூவர் கைது

(திருக்கோயில்)

அம்பாறை திருக்கோயில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள ஆலயங்களின் கதவுகளை உடைத்து நீண்ட நாட்களாக நகைகளைக் கொள்ளையடித்து வந்த பெண்ணொருவர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக திருக்கோயில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 15

## அரசின் வருமானம் அதிகரிக்க வேண்டும்

### உலக வங்கியின் உபதலைவர் கருத்து

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் வருமானத்தினை அதிகரிக்க வேண்டியது அவசியம் என உலக வங்கியின் உபதலைவர் கூறியுள்ளார்.

இருநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நாட்டுக்கு வருகை தந்த சந்தர்ப்பத்தில் அவர் இவ்விடயத்தை குறிப்பிட்டார்.

அரசாங்கம் வரி வருமானத்தினை அதிகரிக்க வேண்டும் எனவும் உலக வங்கியின் உபதலைவர் கூறியுள்ளார்.

நாட்டில் நிதி நிலை 15

## இலங்கை வருகிறார் நேபாள ஜனாதிபதி



(கொழும்பு)

நேபாள ஜனாதிபதி பித்யா தேவி பண்டாரி, கொழும்புக்கு விஜயம் செய்ய 16

## படகுகளை விடுவிக்க வலியுறுத்த வேண்டும்

### ஸ்டாலின் கோரிக்கை

(சென்னை)

இலங்கை செல்லும் பிரதமர் நரேந்திர மோடி அந்நாட்டு அரசிடம் பேசி தமிழக மீனவர்களின் 134 படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக தி.மு.க 02



## சாகர, நந்திமித்ர சிங்கப்பூர் பயணம்

(கொழும்பு)

சிங்கப்பூரில் நடைபெறவுள்ள சர்வதேச கடல் பாதுகாப்பு கண்காட்சியில் பங்குபற்றுவதற்காக இலங்கை கடற்படைக்குச் சொந்தமான ஆழ்கடல் கண்காணி 15

## போர்க்குற்ற விசாரணை இலங்கையில் நடைபெறும்

### அமைச்சர் மனோ நம்பிக்கை



(கொழும்பு)

நாட்டின் இறுதிகட்ட போரின் போது நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடைபெறும் என்று அமைச்சர் மனோ கணேசன் நம்பிக்கை தெரிவி 16

## 22கிலோ கஞ்சா மீட்பு

(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு உடுத்துறை கடற்கரையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 22 கிலோ கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை கடற்படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து கடற்படையினர், புதைத்து வைக்கப்பட்டிருந்த 22 கிலோ கேரள கஞ்சாவை மீட்டு பளை பொலிஸாரிடம் 15



## சுவர் வீழ்ந்து குழந்தை பலி

(அம்பாறை)

அம்பாறையில் வீட்டின் சுவர் உடைந்து வீழ்ந்ததில் ஒன்றரை வயது பெண் குழந்தை ஒன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

இந்த அனர்த்தம் நேற்று மிஹிந்து 15

## வடக்கிலிருந்து படையினரை வெளியேற்ற மாட்டோம்!

### அமைச்சர் மகிந்த சமரசிங்க உறுதி

(கொழும்பு)

பயங்கரவாதத்துக்கு எதிராக சர்வதேச மட்டத்திலான சட்டத்தை கொண்டு வருவதைப் போன்று, பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கும் அபாயம் காணப்படு 15



## வடக்கு மீனவர் விசனம்!

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்கள மீனவர்களுக்கு சார்பாக கடற்தொழில் நீரியல்வள 15

## இலங்கை வரும் இந்திய பிரதமர் மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும்

### வடக்கு கடற்தொழிலாளர் இணையம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு இரு நாள் விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கை- இந்திய மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என வடக்கு மாகாண கடற்தொழிலாளர் இணையம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடமாகாண கடற்தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக வடமா 15

## படகுகளை விடு...

செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

எதிர்வரும் 12ஆம் திகதி தொடக்கம் 14ஆம திகதி வரை இலங்கையில் நடைபெறும் வெசாக் நிகழ்வில் பங்கேற்க பிரதமர் நரேந்திர மோடி இலங்கை செல்லவுள்ளார்.

பிரதமரின் இந்த பயணம் வெசாக் நிகழ்விற்காக என்று இலங்கை தரப்பிலிருந்து கூறப்பட்டாலும், நீண்டகாலமாக தீர்வு காணப்படாமல் இருக்கும் தமிழக மீனவர்களின் படகுகள் பிரச்சினைக்கு நல்லெண்ண அடிப்படையில் தீர்வுகாண இந்திய அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இதுவரை இலங்கை அரசாங்கத்திடம் இந்திய மீனவர்களின் 134 படகுகள் இருக்கின்றன. அதில் பல படகுகள் பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றன.

வடக்கு மாகாண மீனவர்கள் அனுமதித்தால் மட்டுமே இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிக்க முடியும் என்று இலங்கை அரசின் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர அந்நாட்டு பாராளுமன்றத்தில் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அனைத்து தரப்பு பிரதிநிதிகளுடன் இந்திய அரசின் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்று படகுகளை விடுவிப்பது பற்றி பரிசீலிக்கப்படும் என்று இலங்கை அரசின் சார்பில் உத்தரவாதம் அளித்த பிறகு, இவ்வாறு கூறுவது வியப்பாக இருக்கிறது.

ஆகவே இலங்கை செல்லும் பிரதமர் நரேந்திர மோடி தமிழக மீனவர்களின் 134 படகுகளை உடனடியாக விடுவிக்க இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என்று மு.க.ஸ்டாலின் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார். (செ-11)


## காணி விற்பனைக்கு

யாழ்.நகரை அண்மித்த
கந்தர்மடத்தில் 01 பரப்பு
கர்ணி விற்பனைக்கு. (8956)

தொடர்பு:-
077 710 6112

## மலிவு விற்பனை

அனைத்து வகையான கையடக்கத் தொலைபேசிகளுக்கும் விலை குறைக்கப்பட்டுள்ளது. (C-8506)

வணக்கம் போன் சிற்றி
இல. 07, KKS வீதி, யாழ்ப்பாணம்.
077 248 7847


## அக்கினி நாள்...

னம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 21 தினங்கள் நீடிக்கும் காண்டாவனம் மே 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முடிவடைகின்றது.

காண்டாவனம் வருடாந்தம் சித்திரை மாதம் வசந்த காலத்தையொட்டி வருவதும் தமிழ் இந்துக்களிடையே சுப காரியங்களுக்கு விலக்களிக்கப்பட்ட காலமாகவும் இந்நாட்கள் விளங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-11)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல சுற்றுலா விடுதிக்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய ரூம் போய் மற்றும் தோட்ட பராமரிப்பாளர் உடன் தேவை.

தொடர்புகளுக்கு: (8953)
Treatooo Beach Resort
Allaipiddy, Jaffna.
0772537125, 0775562545

IELTS கற்பதுடன் எங்களது
கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றுங்கள்

கல்வி கற்க மற்றும் குடியேற

Now prepare for your Academic / General
IELTS
Full time / Part time

இலங்கையில் IELTS பரீட்சை நிலையமாக
அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரே ஒரு தனியார் கல்வி நிறுவனம்

சர்வதேச மொழிக் கற்கைநெறிகள்

| | |
|---|---|
| ஜெர்மன், சுவிஸ் மொழிப் பாடநெறி | Deutsch |
| நெதர்லாந்து மொழிப் பாடநெறி | Dutch |
| பிரான்ஸ் மொழிப் பாடநெறி | French |

BRITISH COLLEGE of Education
More information 0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124
(C-8507)

ஊர்க் கோழிகள்
## விற்பனைக்கு

6 மாத ஊர்க் கோழிகள்
விற்பனைக்கு உண்டு. (8946)
077 245 3673

## விஸ்வம் கம்பஸ்

IELTS (General & Academic) IELTS LIFE SKILLS For UK Family Visa, Advanced and Spoken English அனைத்து நிலையத்தினருக்கும் Modera, Wellawatte, Kotahena, Nawala, Jaffna, Trinco, Amparaவில் உள்ள எமது கல்வி நிலையங்களில் கற்பிக்கப்படுகின்றன. Guaranteed 7.5 in IELTS
viswamcampus@gmail.com
(8930) 072 799 1708

## விஸ்வம் கம்பஸ்

BBA, B.Com, B.A, M.Com, B.Sc, M.Sc, MBA (INDIA/LATIN AMERICA/USA/UK) பட்டப்படிப்புக்களை தொடர்வதற்கு உடன் அழையுங்கள் viswamcampus@gmail.com
072 799 1705/8

மாதம் 50,000/= சம்பாதிக்க வேண்டுமா?
கவலை வேண்டாம் உடன் அழையுங்கள்.
viswamcampus@gmail.com
072 799 1705/8 (8930)

## முக்கிய அறிவித்தல்

திருமணம் முடித்து UK செல்லவுள்ளவர்கள் தற்போது A2 பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்று ஒரு பிழையான தகவல் இலங்கையிலும், UK இலும் பரவியுள்ளது. அது முற்றிலும் தவறான தகவல் என அறியத்தருகின்றோம். அதன் உண்மைத்தன்மை என்னவெனில் ஏற்கனவே UK இல் வசிக்கும் partner அவரது விசா காலத்தினை நீடிப்பதாயின் A2 பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்பதே உண்மையாகும். ஆகவே புதிதாக Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு இப் புதிய நடைமுறை தேவையற்றது. அவர்கள் வழமை போன்று A1 பரீட்சைக்கு தோற்றினால் போதுமானது.

British College of Educatin - IELTS பரீட்சை நிலையம்

திருமணம் முடித்து Spouse
விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு

IELTS Life Skills A1 B1

ஒரே தடவையில் மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்

BRITISH COLLEGE of Education
More information 0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124
(C-8507)


## மரண அறிவித்தல்



திருமதி
### தேவகி அம்மா வேலும்மயிலும்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தேவகி அம்மா வேலும்மயிலும் 06.05.2017 (சனிக்கிழமை) அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வே.வயித்திலிங்கம் தம்பதிகளின் இளைய மகளும், காலஞ்சென்ற செ.வயித்தியலிங்கம்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், வேலும்மயிலும் (முன்னாள் உதவி அரசாங்க அதிபர் - பருத்தித்துறை, முன்னாள் பிரதேச செயலாளர் - திருகோணமலை) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி மலர் சந்திரலிங்கம் (பிரான்ஸ்), முரளி (கனடா), கலைவாணி பிறேம்குமார் (கனடா), குமுதினி கஜேந்திரன் (பிரதம கணக்காளர், வட மாகாண் திறைசேரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சங்கரலிங்கம் (பிரான்ஸ்), திருமதி வனிதா முரளி (கனடா), பிறேம்குமார் (கனடா), கஜேந்திரன் (பிரதம கணக்காளர், வட மாகாண சுகாதார அமைச்சு) ஆகியோரின் அன்பு மாமியாரும் கணேஸ்; மிர்ணாளினி, ஹரிஹரன், அனன்யன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மானாங்கானை, நெடியகாடு, பொலிகண்டி, வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நாளை (08.05.2017) திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மானாங்கானை, நெடியகாடு,
பொலிகண்டி, வல்வெட்டித்துறை.
(8950)
தகவல்: வ.வேலும்மயிலும் (கணவன்)
தொ.இல: 0778084017


## வேலைவாய்ப்பு

இலங்கையில் 83 வருடங்களுக்கு மேலாக ஆர்பிகோ நிறுவனம் தனது சேவையினை வழங்கி வருகிறது. தற்போது தனது கிளை நிறுவனமான ஆர்பிகோ காப்புறுதி நிறுவனத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவி அதனை விஸ்தரிக்கும் முகமாக புதிய உத்தியோகத்தர்களை நிரந்தர வருமானத்துடன் சேவையில் ஈடுபடுத்த எண்ணியுள்ளது.

தகைமை:- க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உட்பட ஆறு பாடங்கள் சித்தி அடைந்திருத்தல் மற்றும் மேலதிக தகைமைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

பதவி வெற்றிடங்கள் :-
- Agency Managers
- Executives
- Officers
- Consultants

ARPICO Insurance
INSURANCE FOR THE LIVING

அனுகூலங்கள்:-
- அடிப்படைச் சம்பளம்.
- போக்குவரத்துச் செலவு
- ஊழிய நம்பிக்கை நிதி. (சேமலாபநிதி) (EPF, ETF)
- இலவச மருத்துவசாலைக் கொடுப்பனவு.
- விசேட கொடுப்பனவுகள்.
- வெளிநாட்டுச் சுற்றுலா.
- இலவச குடும்ப காப்புறுதி



காலம்:- (10.05.2017) புதன்கிழமை.(10.00 AM)
இடம்:- இல.86, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
(தேசிய சேமிப்பு வங்கிக்கு மேல்)
தொடர்பு:- 075 295 5270
(8936)

# மத்திக்கும் மாகாணத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பு சீர்செய்யப்பட வேண்டும்

## அபிவிருத்தி இலக்குகளை அடைய அதுவே வழி என்கிறார் ஜனாதிபதி



(கொழும்பு)
நாட்டின் தேசிய அபிவிருத்தி இலக்குகளை எட்டுவதற்கு மாகாண சபை செயற்பாடுகள் முறைப்படியாக இருக்க வேண்டியதுடன், மத்திக்கும் மாகாண சபைகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பும் சீர் செய்யப்பட வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முற்பகல் ஹபரண சினமன் லொஜ் விருந்தகத்தில் நடைபெற்ற 33 ஆவது முதலமைச்சர்கள் மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒன்பது மாகாண சபைகளும் ஒன்பது விதமாக செயற்படுவதனால் நாட்டின் பொது அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் பெரும் சிக்கல் நிலவுவதாக சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, பொதுவான உடன்பாட்டுடன் இந்த நிறுவனங்களை இயக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார்.

வினைத்திறனான மக்கள் சேவையை வழங்க முடியாதிருப்பதனால் மக்கள் மிகுந்த அழுத்தத்துக்கு உள்ளாவதனால் மக்கள் பிரதிநிதிகளாக பொறுப்புகளை நிறைவேற்றுவது அனைவரினதும் கடப்பாடாகும் என்றும் ஜனாதிபதி அரசியலமைப்பு, சட்டம் மற்றும் அதிகாரம் எப்படியிருந்தாலும், அவற்றை அமுல்படுத்துவோரின் நடத்தைப் பாங்குக்கமையவே செயற்றிறன் இருக்குமென தெரிவித்த ஜனாதிபதி, அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் நாம் எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளோம் என்பதனை தெளிவு படுத்தக்கூடிய அண்மைக்கால உதாரணமாக மீதொட்டமுல்ல குப்பை மேட்டு அனர்த்தத்தைக் குறிப்பிடலாமென வும் தெரிவித்தார்.

34 ஆவது மாநாடு நடைபெறவுள்ள வடமேல் மாகாணத்துக்கு முதலமைச்சர்கள் மாநாட்டின் தலைமைத்துவம் வழங்கப்பட்டது.

தற்போது தலைமை வகிக்கும் வடமத்திய மாகாண முதலமைச்சர் பேஷல ஜயரத்ன ஜனாதிபதி முன்னிலையில் வட மேல் மாகாண முதலமைச்சர் தர்மசிறி தசநாயக்கவிடம் தலைமைத்துவத்தை ஒப்படைத்தார். (இ-7)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

காலி, இமதுவெவ திக்கும்புர சந்திக்கு அருகில் நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த துப்பாக்கி பிரயோகத்துக்கு இலக்காகி உயிரிழந்தவர் கம்மன்பில வத்த அந்துகொட பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய நபர் என தெரிவிக்கப்படுகின்றது.

தனது பிள்ளை மற்றும் அருகிலுள்ள வீட்டைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகள் ஆகியோரை ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு தனியார் வகுப்புக்கு அழைத்துச்சென்ற போது இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். இரண்டு தரப்பினருக்கு இடையிலான விரோதமே இந்த கொலைக்கு காரணம் என பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. சந்தேக நபர்களை கைதுசெய்ய காலி மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தலைமையில் விசேட பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (இ-7)

# எல்லை மீறினால் அடக்குமுறையை கையிலெடுப்போம்

## பொன்சேகா எச்சரிக்கை



(கொழும்பு)
சிலர் ஜனநாயகத்தை மீறி அராஜகமாக போராட்டங்களை முன்னெடுக்கும் போது நாமும் ஜனநாயகத்தை வழங்க முடியாது. எல்லை மீறும் சந்தர்ப்பங்களில் அடக்குமுறையை கையிலெடுக்க வேண்டிவரும். ஆனால் அதற்காக மகிந்த காலத்தைப் போல் செயற்படமாட்டோம் என அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எச்சரிக்கையுடன் அரசின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்.

களனிபிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதை கூறியுள்ளார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில், மகிந்த காலத்தை போல் நடந்துகொள்வதை விடவும் அரசியலிலிருந்து விலகி வீட்டில் இருப்பது சிறந்தது.

சிலர் ஜனநாயகத்தை மீறி அராஜகமாக போராட்டங்களை முன்னெடுக்கும் போது நாமும் ஜனநாயகத்தை வழங்க முடியாது.

எல்லை மீறும் சந்தர்ப்பங்களில் அடக்குமுறையை கையிலெடுக்க வேண்டி வரும். ஆனால் அதற்காக மகிந்த காலத்தை போல செயற்பட மாட்டோம். மேலும், தற்போது கூட்டு ஆட்சியாக செயற்படுகின்றோம். இதேபோல் அடுத்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தனி அரசாங்கத்தை உருவாக்கி ஆட்சியை பலப்படுத்துவோம் எனவும் அமைச்சர் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## பணிஸ் தொண்டையில் சிக்கி பச்சிளம் குழந்தை உயிரிழப்பு

சிலாபத்தில் பணிஸ் தொண்டையில் சிக்கியதால் மூன்று வயது குழந்தையின் உயிர் பிரிந்துள்ளது. குறித்த சம்பவம் நேற்றுக்காலை வேளையில் நடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குழந்தைக்கு காலை உணவாக பணிஸ் வழங்கப்பட்டுள்ளது. பணிஸின் சிறு பகுதி தொண்டையில் சிக்கியதால் குழந்தை சுவாசிப்பதற்கு சிரமம் ஏற்பட்டுள்ளது. பின்னர் குழந்தையை பெற்றோர், சிலாபம் பொது வைத்தியசாலையில் அனுமதித்துள்ள நிலையில் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# முஸ்லிம்களின் வயிற்றிலடிக்கும் நல்லாட்சி அரசாங்கம் - நாமல்



(கொழும்பு)
முஸ்லிம்களின் வாக்குகளை கொள்ளையடித்து ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் அவர்களின் வயிற்றில் அடிக்க ஆரம்பித்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்ட களுத்துறை மாவட்ட முஸ்லிம்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை களுத்துறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"என்றும் இல்லாதவாறு இம்முறை ஹஜ்ஜுக்கு செல்பவர்களிடம் 25000ரூபா பதிவுக் கட்டணம் அறவிடப்படுகிறது. இனவாதிகள் எவற்றையெல்லாம் செய்யவேண்டுமெனப் பல வருடங்களாக கூவித் திரிந்தார்களோ அவைகள் அத்தனையையும் இன்று நன்கு திட்டமிட்டு அரச அங்கீகாரத்துடன் செயற்படுத்துகின்றனர்.

முஸ்லிம்கள் நோன்பு காலங்களில் பேரீச்சம்பழம் முக்கியமான ஓர் உணவுப் பொருளாகும். இக்காலங்களில் பேரீச்சம்பழங்களை அரசாங்கமானது மக்களுக்கு தேவையான அளவு குறைந்த விலையிலேயே வழங்கவேண்டும். ஆனால் இன்று அரசாங்கம் பேரீச்சம் பழத்திற்குக்கூட வரி விதித்திருக்கின்றது.

இந்த ஆட்சியில் சில இனவாத செயற்பாடுகள் தலைதூக்கிய போது மௌனமாக இருந்த முஸ்லிம் அமைச்சர்கள் இப்போதும் மௌனமாக இருப்பது வேடிக்கையானது" என நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# நான் ஆட்சி செய்திருந்தால் வேலைநிறுத்தம் இடம்பெற்றிருக்காது - மகிந்த கூறுகிறார்



தாம் நாட்டை ஆட்சிசெய்திருந்தால் வேலைநிறுத்தம் இடம் பெற்றிருக்காது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மாத்தறை, மாகந்துர, ரன்சேகொட விகாரையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற சமய நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் வழங்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஹைதராபாத்தை 12 ஓட்டங்களால் வென்று பிளேஓஃப் சுற்று வாய்ப்பை அதிகரித்தது புனே



ஹைதராபாத்தில் நடைபெற்ற போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை வீழ்த்தி ரைசிங் புனே சுப்பர்ஜெயன்ட் அணி பிளேஓஃப் சுற்றுக்கான வாய்ப்பை பிரகாசப்படுத்திக் கொண்டது.

ஐ.பி.எல். தொடரின் நேற்றைய முதல் ஆட்டம் ஹைதராபாத்தில் நடைபெற்றது. இதில் ரைசிங் புனே சுப்பர்ஜெயன்ட் அணிக்கெதிராக சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி நாணயச் சுழற்சியில் வென்று முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

தொடக்க வீரர்களாக ரகானேயும், திரிபதியும் களம் இறங்கினார்கள். அதிரடி வீரர் திரிபாதி ஒரு ஓட்டம் எடுத்த நிலையில் ரன்அவுட் மூலம் ஆட்டம் இழந்தார். அத்துடன் ரைசிங் புனே சுப்பர்ஜெயன்ட் அணியின் ஓட்டவேட்டையில் தொய்வு ஏற்பட்டது. பென் ஸ்டோக்ஸ் மட்டும் அதிரடியாக விளையாடி 25 பந்தில் 3 சிக்ஸ், ஒரு பவுண்டரியுடன் 39 ஓட்டங்கள் எடுத்தார். ஸ்மித் 34 ஓட்டங்களும், ரகானே 22 ஓட்டங்களும் சேர்த்தனர். 5-வது வீரராக களம் இறங்கிய தோனி 21 பந்தில் 31 ஓட்டங்கள் சேர்க்க ரைசிங் புனே சுப்பர்ஜெயன்ட் அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 148 ஓட்டங்கள் எடுத்தது.

பின்னர் 149 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி களம் இறங்கியது. புனே அணி வீரர்கள் நேர்த்தியாக பந்து வீசினார்கள். இதனால் தொடக்க வீரர்களான தவான் மற்றும் வோர்னர் ஆகியோரால் அதிரடியாக விளையாட முடியவில்லை. தவான் 12 பந்தில் 19 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த கேன் வில்லியம்சன் 4 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வெளியேறினார். இந்த இரண்டு விக்கெட்டுக்களையும் பென் ஸ்டோக்ஸ் ஒரே ஓவரில் வீழ்த்தினார்.

அடுத்து வோர்னர் உடன் யுவராஜ் சிங் ஜோடி சேர்ந்தார். 34 பந்தில் 40 ஓட்டங்கள் சேர்த்திருந்த நிலையில் வோர்னர் ஆட்டம் இழந்தார். அத்துடன் ஹைதராபாத் அணிக்கு நெருக்கடி ஏற்பட்டது.

கடைசி மூன்று ஓவரில் 32 ஓட்டங்கள் தேவைப்பட்டது. 18-வது ஓவரை உனத்கட் வீசினார். இந்த ஓவரில் யுவராஜ் சிங், நமன் ஓஜா ஆகியோரை வெளியேற்றினார். 43 பந்தில் 47 ஓட்டங்கள் எடுத்த நிலையில் யுவராஜ் சிங் ஆட்டம் இழந்தார்.



கடைசி இரண்டு ஓவரில் 22 ஓட்டங்கள் தேவைப்பட்டது. பென் ஸ்டோக்ஸ் வீசிய 19-வது ஓவரில் ஹைதராபாத் அணி 9 ஓட்டங்கள் சேர்த்தது. இதனால் கடைசி ஓவரில் 14 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இந்த ஓவரை உனத்கட் வீசினார். 2வது, 3-வது மற்றும் 4-வது என தொடர்ச்சியாக மூன்று பந்தில் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தி ஹட்ரிக் சாதனை படைத்தார்.


கடைசி இரண்டு பந்திலும் ஓட்டம் ஏதும் அடிக்காததால், ஹைதராபாத் அணியால் 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 136 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. இதனால் ரைசிங் புனே சுப்பர்ஜெயன்ட் அணி 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் புனே 8 வெற்றிகளுடன் பிளேஓஃப் சுற்றுக்கான வாய்ப்பை பிரகாசப்படுத்தியுள்ளது.

## பாகிஸ்தான் இளையோர் அணியின் ஆலோசகராகிறார் யூனிஸ் கான்

ஐ.சி.சி.யின் 19 வயதிற்குட்பட்டோருக்கான பாகிஸ்தான் அணியின் ஆலோசகராக யூனிஸ் கான் நியமிக்கப்பட இருக்கிறார். டெஸ்டில் இருந்து ஓய்வு பெறுவதற்கு முன்பே வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.


பாகிஸ்தான் டெஸ்ட் கிரிக்கெட் அணியில் கடந்த 17 ஆண்டுகளாக விளையாடி வருபவர் யூனிஸ் கான். 10ஆம் திகதி தொடங்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக மூன்றாவது டெஸ்டுடன் யூனிஸ் கான் சர்வதேச அணியில் இருந்து ஓய்வு பெறுகிறார். இவர் 10 ஆயிரம் ஓட்டங்களை தாண்டிய முதல் பாகிஸ்தான் வீரர் என்ற பெருமையையும், சர்வதேச அளவில் 13-வது வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.



இவர் சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெற்றதும், 19 வயதிற்குட்பட்டோருக்கான பாகிஸ்தான் அணியின் ஆலோசகராக பணியாற்ற பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கேட்டுக்கொண்டுள்ளது. நியூசிலாந்தில் நடைபெற இருக்கும் இளையோர் உலகக் கோப்பை தொடரில் பாகிஸ்தான் அணி சிறந்து விளங்க இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 2018ஆம் ஆண்டு தொடக்கத்தில் யூனிஸ் கான் ஆலோசகராக பணியில் இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சகல துறைகளிலும் கலக்கிய மும்பை 146 ஓட்டங்களால் டெல்லியை வீழ்த்தியது

ஐ.பி.எல் இருபது - 20ல் டெல்லி டேர்டெவில்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் 146 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அபார வெற்றி பெற்றுள்ளது. ஐ.பி.எல் இருபது - 20 நேற்றைய ஆட்டத்தில் டெல்லி டேர்டெவில்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் எதிர்கொண்டன. முதலில் நாணயச் சுழற்சியில் வென்ற டெல்லி டேர்டெவில்ஸ் அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. இதை தொடர்ந்து மும்பை இந்தியன்ஸ் அணி களமிறங்கியது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் டெல்லி அணியின் பந்து வீச்சை துவம்சம் செய்து மும்பை அணி அபாரமாக ஆடியது. இதை அடுத்து மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 212 ஓட்டங்கள் எடுத்தது. இதை தொடர்ந்து களம் இறங்கிய டெல்லி டேர்டெவில்ஸ் அணி 13.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 66 ஓட்டங்கள் எடுத்து படுதோல்வி அடைந்தது. மும்பை இந்தியன்ஸ் அணியில் அதிகபட்சமாக லென்டில் சிம்மன்ஸ் 66 ஓட்டங்கள் எடுத்தார்.




## மரண அறிவித்தல்



### சின்னத்துரை பிள்ளையம்மா

'குமரன் கோட்டம்' அல்வாய் வடமேற்கினைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை பிள்ளையம்மா அவர்கள் 06.05.2017 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வார் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகர் சின்னத்துரையின் (முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர், கல்வியமைச்சு) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகர் - முத்து தம்பதிகளின் மருமகளும், தெய்வநாயகி, தர்மவதி, காலஞ்சென்றவர்களான கணேசமூர்த்தி, விநாயகமூர்த்தி ஆகியோரின் சகோதரியும் தவேந்திரராஜா மதிவதனியின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.05.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் அல்வாய் பங்கு வேம்படி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலினை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

'குமரன் கோட்டம்'
அல்வாய் வடமேற்கு

தகவல் :
த.தவேந்திரராஜா (மருமகன்)
(ஓய்வுநிலை கோட்டக் கல்வி அதிகாரி, கரவெட்டி)

(C-8508)

## ஜேம்ஸ் ரோட்ரிக்ஸ் மான்செஸ்டர் யுனைடெட் அணிக்கு செல்கிறார்

ரியல் மாட்ரிட் அணிக்காக விளையாடி வரும் கொலம்பியாவின் நட்சத்திர வீரரான ஜேம்ஸ் ரோட்ரிக்ஸ் மான்செஸ்டர் யுனைடெட் அணிக்கு செல்ல இருக்கிறார். இதற்கான ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாக இருக்கிறது.

கொலம்பியாவின் நட்சத்திர வீரர் ஜேம்ஸ் ரோட்ரிக்ஸ். இவர் லா லிகாவின் முன்னணி கால்பந்து அணியான ரியல் மாட்ரிட்டில் இடம் பிடித்துள்ளார். ரொனால்டோ, பென்சிமா போன்ற வீரர்கள் இருப்பதால் முன்கள வீரரான இவருக்கு அதிக அளவில் வாய்ப்பு கிடைப்பதில்லை. யாராவது ஒரு வீரர் வெளியேறினால் மட்டுமே, துணை வீரராக களம் இறங்க வாய்ப்பு கிடைக்கிறது.

இதனால் ரியல் மாட்ரிட் அணி அவரை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது. இதனால் ரோட்ரிக்ஸை வாங்குவதற்கு மான்செஸ்டர் யுனைடெட், செல்சியா, யுவான்டஸ் அணிகள் விரும்பியது. இதில் மான்செஸ்டர் அணி மட்டும் அதிக அளவில் ஆர்வம் காட்டியது.

ரியல் மாட்ரிட் அணிக்கும், மான்செஸ்டர் யுனைடெட் அணிக்கும் இடையில் ரோட்ரிக்ஸின் டிரான்ஸருக்கான பெரும்பாலான வேலைகள் முடிந்து விட்டதாக கூறப்படுகிறது. இந்த மாற்றத்திற்கு ரோட்ரிக்ஸ் தனது ஏஜென்ட் மூலம் சம்மதம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

இதனால் ரோட்ரிக்ஸ் அடுத்த சீசனில் மான்செஸ்டர் யுனைடெட் அணிக்காக விளையாடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ரியல் மாட்ரிட் அவரை 60 மில்லியன் யூரோவிற்கு விற்பனை செய்ய இருப்பதாக கூறப்படுகிறது.

15 வருட நிறைவை முன்னிட்டு விசேட கட்டணக்கழிவு 50%
Only 50 Students

Diploma in Spoken English

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மாணித்தியாலங்கள் நடைபெறுவதுடன், பகுதிநேர வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களிலும் நடைபெறும்.

Spoken English - Course Fee : 15250/= Offer Fee : 7625/=
Diploma in English - Course Fee : 21000/= Offer Fee : 10500/=

BRITISH COLLEGE of Education
More information 0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124

# ஐ.நா.சபை கூட இஸ்ரேலின் அநீதிகளை கண்டு கொள்வதில்லை - முஜிபுர் கவலை



இஸ்ரேல், பாலஸ்தீனம் மீது தொடுக்கும் அநீதிகளைக் ஐக்கிய நாடுகள் சபை கண்டுகொள்வதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கவலை வெளியிட்டுள்ளார்.

பாலஸ்தீன சிறைக் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து,கொழும்பு பாலஸ்தீன தூதகரத்தில் இடம்பெற்ற கையெழுத்து வேட்டையில் நேற்று கையெழுத்திட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரிவித்த அவர், "இஸ்ரேலிய சிறைகளிலுள்ள ஆயிரத்து 500 கைதிகள் கடந்த ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி குறித்த உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பித்தனர். மே மாதம் 3ஆம் திகதி பாலஸ்தீனின் முக்கிய அரசியல்தலைவர்கள் பலரும் இந்த உண்ணாவிரதத்தில் இணைந்துள்ளனர். இந்நிலையில், இஸ்ரேலின் அராஜகத்தை உலகுக்கு எடுத்துக் காட்டி அங்கு இடம் பெறும் அநீதிக்குத் தீர்வுகாணும்முயற்சியில் இரங்கமுஸ்லிம்நாடுகள் முன்வர வேண்டும்.

1948ஆம்ஆண்டு முதல் ஒரு மில்லியன் பாலஸ்தீனர்கள் இஸ்ரேலிய இராணுவத்தால் கைது செய்யப்பட்டிருப்பதாக தரவுகள் கூறுகின்றன. இஸ்ரேல், சர்வதேச சட்டங்களை துச்சமாக மதித்தே இவ்வாறான அராஜகங்களை நடத்தி வருகிறது. சிறுவர்கள், பெண்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான கைதிகள் இஸ்ரேலிய சிறைகளில் வாடிவருகின்றனர்.

முஸ்லிம் உலகின் ஒற்றுமையே இந்த அநீதிகளை அழிக்கக் கூடிய ஆயுதமாகும். பாலஸ்தீன மக்களின் துன்பங்களிலும் துயரங்களிலும் பங்கு கொண்டு அவர்களின் உண்மையான விடிவுக்கு உழைப்பது மனிதநேயத்தைவிரும்பும் அனைவரினதும் கடமையாகும்" எனத் தெரிவித்தார். (இ-7)

# அரசாங்கத்திற்கு 3700 கோடி இழப்பு

அரசாங்கம் 3700 கோடி ரூபாய் வரி வருமானத்தை இழக்கும் நிலையில் உள்ளதாக உள்நாட்டு வருமான திணைக்களத்தின் தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

கடந்த நவம்பர் மாதம் நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்காக வரி யோசனைகள் செயற்படுத்த முடியாமல் போனமையினால் இந்த நிலைமை ஏற்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரி யோசனையை செயற்படுத்த வேண்டுமாயின் அதனை வர்த்தமானியில் உள்ளடக்கி சட்டமாக அறிவிக்க வேண்டும். அதன் பின்னரே வரி சேகரிக்கும் செயற் பாட்டிற்காக உள்நாட்டு வருமான திணைக்களத்திற்கு அதிகாரம் கிடைக்கும்.

நிதிவருடம் ஆரம்பமாகி ஒரு மாதம் நிறைவடைந்துள்ள போதிலும் இன்னமும் வரி யோசனை வர்த்தமானியில் உள்ளடக்கப் பட வில்லை எனவும், இவ்வாறான நிலையொன்று நீண்டகால வரலாற்றில் ஏற்படவில்லை என்றும் குறித்த தொழிற்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

# வடகொரிய ஜனாதிபதியைக் கொல்ல அமெரிக்கா - தென்கொரியா திட்டம்



(சியோல்)

அமெரிக்காவும் தென்கொரியாவும் இணைந்து வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங்-உன்னை கொலை செய்ய திட்டமிட்டுள்ளனர்.

வடகொரியாவின் அணு ஆயுத பரிசோதனைக்கு எதிராக அமெரிக்கா தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. கொரிய தீபகற்ப பகுதிக்கு அமெரிக்கா தனது 2 போர்க் கப்பல்களை அனுப்பியுள்ளது. இதனால்கொரிய தீபகற்பத்தில் போர் பதற்றம் நிலவு கிறது.

இந்த நிலையில் அமெரிக்காவும் தென்கொரியாவும் இணைந்து வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங்-உன்னை கொல்ல சதித்திட்டம் தீட்டியிருப்பதாக வடகொரியாவின் கே.சி.என்.ஏ. செய்தி நிறுவனம் பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளது.

சிஐ.ஏ. உளவு நிறுவன இயக்குநர் மைக் மெம்பியோ இந்த வாரத்தில் தென் கொரியா வர இருப்பதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

அவர் தென் கொரியாவின் 'என்.ஐ.எஸ்' உளவு நிறுவன தலைவரை சந்திக்கிறார். அப்போது அவர்கள் இருவரும் வடகொரிய ஜனாதிபதியை கொல்ல சதித்திட்டம் தீட்ட உள்ளனர்.

அமெரிக்காவின் சிஐ.ஏ. உளவு நிறுவனத்தினர் வடகொரியாவுக்குள் தீவிரவாதிகளை ஊடுருவ செய்யவுள்ளனர். அவர்கள் மூலம் இரசாயன ஆயுதங்கள் மற்றும் பொருட்கள் மூலம் அவரை கொலை செய்ய திட்டமிட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## முதியவரைத் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்

யாழ்.கைதடி முதியோர் இல்லத்தில் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக தங்கியுள்ள தென் பகுதியைச்சேர்ந்த வயோதிபரைத் தெரிந்தவர்கள்அல்லது உறவினர்களைத்தொடர்பு கொள்ளுமாறு முதியோர் இல்ல அத்தியட்சகர் கிருபாகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கும் 60 வயது மதிக்கத்தக்க அபே யேசுந்தர திசாநாயக்க என்ற சிங்கள இனத்தைச் சேர்ந்த முதியவரே கைதடி அரச முதியோர் இல்லத்தில் இணைக்கப்பட்டுள்ளார்.

நடந்து யாழ்ப்பாணத்தை வந்தடைந்த இவர் மந்திகை வைத்தியசாலையில் 4 மாதங்கள் சிகிச்சை பெற்ற பின் அங்கிருந்தே கைதடி முதியோர் இல்லத்தில் இணைக்கப்பட்டுள்ளார். குறித்த வயோதிபர் வீரக்கோன் திசாநாய்க்க என்ற சகோதரர் மட்டுமே இருப்பதாக தெரிவித்துள்ளார். இவரை அறிந்தவர்கள் கைதடி அரச முதியோர் இல்லத்துடன்தொடர்புகொள்ளுமாறு அத்தியட்சகர் கிருபாகரன் கேட்டுள்ளார். (இ-89)

# வில்லூன்றியில் சித்திரா பூரணை

யாழ்.வில்லூன்றி விநாயகர்ஆலயபுனித தீர்த்தத்தில் சித்திரா பூரணை நிகழ்வுகள் எதிர்வரும்புதன்கிழமை வழமை போல் சிறப்பாக நடைபெறவுள்ளது. வில்லூன்றிவிநாயகராலயத்தில் அதிகாலைவிசேட அபிஷேகம்,பூசைகளும்காலை ஏழு மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறும். காலை எட்டு மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்றபின்பொது மக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள்செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ

# பகவத்கீதை விளக்கவுரை

யாழ். சின்மயா மிஷனில் பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 7.45 மணி முதல் 8.45 மணி வரை யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஸ்ரீமத் பகவத்கீதை வாராந்த விளக்க வுரை நடத்தப்பட்டு வருகிறது.

இதில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை, 07.05.2017அன்று ஸ்ரீமத் பகவத்கீதையின் ஏழாம் அத்தியாயமான "ஞான விக்ஞான யோகம்" பகுதியில் "தாண்ட முடியாததைத் தாண்டுதல் எப்படி" என்ற தலைப்பில் விரிவுரை நடைபெறும். (இ-7)

# மரண அறிவித்தல்

## திருமதி. சிவகுருநாதபிள்ளை அரியரெத்தினம்



**தோற்றம் 20.12.1925**

**மறைவு 05.05.2017**

வல்வெட்டித்துறைச் சந்தி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டித்துறை உலகுடைய பிள்ளையார் கோவில் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட

திருமதி. சிவகுருநாதபிள்ளை அரியரெத்தினம்

05/05/2017 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி சிவகுருநாதபிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தசாமி - சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற கந்தசாமி - வள்ளியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும்

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் (வடிவேல் ), காலஞ்சென்ற சபாரத்தினம் (சேர்மன்), காலஞ் சென்ற முருகுப்பிள்ளை (கடவுள் அப்பா), காலஞ்சென்ற பாலசுப் பிரமணியம் மற்றும் நவரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும்

அன்னார் காலஞ்சென்ற குமர குரு (வாத்தியார்), காலஞ்சென்ற பவளக்கண்டு, காலஞ்சென்ற கிருஷ்ணவேனியம்மா, காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் புஸ்பவதியம்மா ஆகியோரின் மைத்துனியும் இராஜேஸ்வரி (அரி அக்கா), புவனேஸ்வரி (துக்கினி அக்கா), இரத்தினேஸ்வரி (ரெத்தினா), அமரர் உலகராசா (மூத்த உறுப்பினர் - தமிழீழ விடுதலை இயக்கம்) மற்றும் உலகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற பொன்னம்பலம், சபாரத்தினம், சிவநாதன் மற்றும் செல்வசிகாமணி, சுபாஜினி ஆகியோரின் மாமியாரும் மற்றும் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், பாட்டப்பிள்ளைகளின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 07/05/2017 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு வல்வெட்டித்துறை ஊரணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(சி- 8503)

தொடர்புகளுக்கு
உலகேஸ்வரி (மகள்-இலங்கை) 0094-750892606
சந்திரன் (பேரன்-இலங்கை ) 0094-767399785
தவகுமார (பேரன் -லண்டன்) -0044-7984355124
உதயன் (பேரன் -லண்டன் ) -0044-7415294535
மணிவண்ணன் (பேரன் -லண்டன்) -0044-7440602618

தகவல்:
குடும்பத்தினர்
வல்வெட்டித்துறை.

# சிறி சபாரத்தினத்தின் நினைவஞ்சலி நிகழ்வு


(படங்கள்:-உ.சாளின்)



(யாழ்ப்பாணம்)

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) மறைந்த தலைவர் சிறி சபாரத்தினத்தின் 31ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு அவர் கொல்லப்பட்ட இடமான கோண்டாவில் அன்னங்கை கோகிலா வீதி தோட்டவெளியில் நேற்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ரெலோவின் தலைமைக்குழு உறுப்பினரும் நிதிச்செயலாளருமான கே. என். விந்தன் கனகரத்தினத்தின் ஏற்பாட்டிலும் தலைமையிலும் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக ஈகச் சுடர் ஏற்றப்பட்டு, மறைந்த தலைவர் சிறி சபாரத்தினத்தின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தப்பட்டு, மறைந்த தலைவர் சிறி சபாரத்தினத்துடன் 1986 ஆம் ஆண்டு சித்திரை 29 முதல் வைகாசி 6 வரை கொல்லப்பட்ட 350 இற்கும் மேற்பட்ட போராளிகள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் அனைவருக்குமாக அகவணக்கம் செலுத்தப்பட்டு தொடர்ந்து அஞ்சலியுரைகள் நடைபெற்றன.

அஞ்சலியுரைகளை கட்சியின் செயலாளர் நாயகமும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான என். சிறீகாந்தா, கட்சியின் உப தலைவர் கே. ஹென்றி மகேந்திரன், கட்சியின் தேசிய அமைப்பாளரும் வட மாகாணசபை உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம், வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவரும் தமிழரசு கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவருமான சீ.வீ.கே.சிவஞானம் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எப்.கட்சியின் உறுப்பினருமான க.சர்வேஸ்வரன் ஆகியோரும் ஆற்றியிருந்தனர்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர். (இ-4)

# மரண அறிவித்தல்

## திருமதி கந்தையா அன்னம்மா



அராலி மத்தியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா அன்னம்மா அவர்கள் 06.05.2017 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் செல்லமுத்துவின் அன்பு மகளும் காலஞ்சென்ற முத்து கந்தையாவின் அன்பு மனைவியும் சந்திரசேகரன் (ஓய்வு நிலை அதிபர்), ஞானகுலசேகரன் (கணக்காளர் - பெற்றா எசன்ஸ் சப்லையர்ஸ்), விமலராணி (நூலகர், பிரதேசசபை, வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்பு தாயாரும் கமலாவதி, யோகரஞ்சிதம், காலஞ்சென்ற குணசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜசிகரன் (தாதி உத்தியோகத்தர்- போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஜசிந்தன் (SLAS), தினோஜ், நிலோஜன், றேணுகா (லண்டன்), சோபிகா (BOC-சங்கானை), சிந்துஜா (பல்கலைக்கழகம்), ஜிந்துஷா (தாதி உத்தியோகத்தர் யாழ்.போதனா வைத்தியசாலை), தாரகா, பிரசாத் (லண்டன்), கோணாத் (சிறைச்சாலை உத்தியோகத்தர் மகா) ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் சஞ்சனா, பிரித்திஷா, கவின், தமிரன் ஆகியோரின் அன்புப் பீட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 07.05.2017 ஞாயிற்றுக்கிழமை இன்று காலை 8 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி.

தகவல் : க.சந்திரசேகரன் (மகன்)

(8945)

## அந்தியேட்டி
## வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

அன்னையின் மடியில் 28 04 1937

ஆண்டவன் அடியில் 08 04 2017



## அமரர் திருமதி. வீரவாகு இந்திரா

கடந்த மாதம் 08.04.2017 சனிக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது பெரிய தாயார் அமரர் திருமதி வீரவாகு இந்திரா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 08.04.2017 திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் தெனியம்மன் அந்தியேட்டி மடத்தில் இடம்பெற்று பின்னர் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிராத்தனையிலும் பங்கேற்று தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு :- இவ் அழைப்பினை சகலரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் : திரு. வீரவாகு ஈஸ்வரானந்தன் (பெறாமகன்)

பருத்தித்துறை, தம்பசிட்டி.

(C-8504)

# இராசி பலன்

07.05.2017

(சித்திரை24, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு

துவாதசி முன்னிரவு 11.31 மணிவரை

உத்தரம் முற்பகல் 9.51 மணிவரை

சுபநேரம் 8.55- 10.25 மணிவரை

இராகுகாலம் 4.25- 5.55 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் புத | சூரி | செவ் | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சதயம் | | |
| | | | ராகு |
| | சனி | . | குரு சந் |

**மேடம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**இடபம்** பிள்ளைகளின் தேவையறிந்து செயற்படுவீர்கள், தொழில் நலனில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ளும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்** பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்

**கடகம்** உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**சிம்மம்** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், வெளியூர் தொடர்புகளால் நன்மையுண்டு.

**கன்னி** பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள்.

**துலாம்** அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், மனச்சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள் காரிய அனுகூலமுண்டு.

**தனுசு** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்ப ஒற்றுமை கூடும், ஆரோக்கியமான நாள்.

**மகரம்** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும்.

**கும்பம்** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், குடும்பப் பொறுப்புக்கள் கூடும்.

**மீனம்** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், உறவினர்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

# கைதுசெய்த போது இவர்தான் பிரபாகரன் என்று தெரியாது

## பெருமைப்படுகிறார் இந்தியத் துணை ஆய்வாளர்





(டில்லி)

அன்று நான் கைதுசெய்த போது, இவர்தான் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் என்று எனக்குத் தெரியாது. அதனை உயர் அதிகாரி தெரிவித்த போதே எனக்கு கடும் அச்ச உணர்வு ஏற்பட்டது என இந்தியத் துணை ஆய்வாளர் நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தமிழகத்தில் வைத்து கைது செய்யப்பட்ட போது அப்போதைய இந்தியதுணை ஆய்வாளராக இருந்த நந்தகுமார் அன்றைய நாளில் நடந்தவற்றை ஊடகம் ஒன்றுக்கு விபரித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

1982 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி சென்னை பாண்டி பஜாரில் இரு தரப்பினர்களுக்கு இடையில் துப்பாக்கிச் சண்டை இடம்பெறுவதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சில பொலிஸாரை அழைத்துக்கொண்டு சென்றேன். அந்த இடத்தில் இருந்தவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின்போது சண்டையிட்டவர்கள் அருகில் மறைந்திருப்பதாக கூறினார்கள். இந் நிலையில், சண்டையிட்டவர்களை பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்தவுடன் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காது உடனே பொலிஸ் நிலையத்திற்கு வந்தனர்.

அவர்களை கைதுசெய்து அழைத்து வந்த சில மணி நேரத்தில், தமிழக தலைமை பொலிஸ் அதிகாரியிடம் இருந்து அழைப்பு வந்தது. இதன் போது "நீங்கள் கைதுசெய்து அழைத்து வந்தவர்கள் யார் என்று தெரியுமா" என தலைமை காவல் அதிகாரி கேட்டார்.

"ஏதோ இலங்கை தமிழர்கள் என்று கூறினார்கள்" என நான் பதில் கூறினேன். எனினும், அதன் பின்னர் தலைமை பொலிஸ் அதிகாரி கூறியதை கேட்ட போது எனக்கு அச்ச உணர்வே வந்தது.

"நீங்கள் கைதுசெய்து அழைத்து வந்திருப்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்" என தலைமை பொலிஸ் அதிகாரி என்னிடம் தெரிவித்தார்.

இதைக் கேட்ட எனக்கு அச்ச உணர்வுஏற்பட்டது. இதனையடுத்து அவர்களிடம் ஆயுதம் எதுவும் உள்ளதா? என கேட்டேன். அவர்களும் கையில் வைத்திருந்த துப்பாக்கியை அமைதியாக கொடுத்தார்கள்.

அதனை பெற்றுக்கொண்ட பின்னர் யோசித்து பார்த்தோம் துப்பாக்கியினை கொண்டு எம்மீது தாக்குதல் நடத்தயிருந்தால் அவர்களை நாங்கள் கைது செய்யாமல் திரும்பவும் ஓடி வந்திருப்போம்.

எனினும் அவர்கள் நடந்து கொண்ட விதத்தை பார்க்கும் போது இன்றும் பெருமையாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 39 செவ் 2 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: BSc/ அரசதொழில்
தொ.இ: B/6145

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 34 செவ் 2 இல்
தகைமை/தொழில்: A/L லண்டன் PR
தொ.இ: B/6146

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 57 சூரிசெவ் 7 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: O/L/தனியார் தொழில்.
தொ.இ: B/6147

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 27
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L/அரசதொழில்
தொ.இ: B/6149

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 57 செவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: MBBS அவுஸ்ரேலியா
தொ.இ: G/5828

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 20செவ் 12 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: B.COM/ ஆசிரியர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/5829

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 23சூரி செவ் 12 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSc
தொ.இ: G/5832

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 6 சூரி செவ் 11 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/5842

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# நீதிமன்றத்தில் துப்பாக்கிச்சூடு

## சந்தேகநபர் கைது

(கொழும்பு)

பாதாள உலகத் தலைவரான சமயங் என்ற அருண தமித் உதயங்க என்பவர் மீது கடுவலை நீதிமன்றத்தில் வைத்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்ட மற்றுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தலங்கம பொலிஸ் நிலையத்தின் மேல்மாகாண புலனாய்வுப்பிரிவின் அதிகாரிகள் இந்த சந்தேகநபரை கொஸ்வத்த பிரதேசத்தில் வைத்து நேற்றுக் கைது செய்துள்ளனர். தொலவத்தகே சமிந்த பிரசாத் சபரமாது என்ற 35 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். களுத்துறை துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் இந்த நபருக்கு தொடர்பு இருக்கின்றதா? என்பதை அறிய விரிவான விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த 2015 ஆம்ஆண்டு செப்டெம்பர் 23 ஆம் திகதி கடுவலை நீதவான் நீதிமன்றத்தில் நடந்த வழக்கு விசாரணை ஒன்றில் ஆஜர்ப்படுத்தப் பட்ட சமயங் என்ற பாதாள உலக தலைவரை குறிவைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அன்று சிறுகாயங்களுடன் அவர் உயிர் தப்பியிருந்தார்.

இருப்பினும் களுத்துறை சிறைச்சாலை பேருந்து மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தின் போது சமயங் உட்பட சிலர்கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி குகேந்திரா தர்சிகா
(3A, மாவட்ட நிலை -48)
கலைப்பிரிவு



செல்வி இராசேந்திரம் டிலக்ஷியா
கலைப்பீடம், கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை



செல்வி பாலராசா தர்மிளா
(3B, மாவட்ட நிலை - 205)
கலைப்பிரிவு

க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த எமது சங்கானை ஐக்கிய நலன்பரிச் சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளான செல்வி **குகேந்திரா தர்சிகா** (3A, மாவட்ட நிலை - 48) மற்றும் செல்வி **பாலராசா தர்மிளா** (3B, மாவட்ட நிலை-205) அவர்களையும் க.பொ.த. உயர்தர பரீட்சை யில் சித்தியடைந்து கிழக்கு பல் கலைக்கழக கலைப்பீடத்திற்கு தெரிவான செல்வி **இராசேந்திரம் டிலக்ஷியா** அவர்களையும் எமது சங்கானை ஐக்கிய நலன்புரிச் சங்கம் சார்பில் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ஐக்கிய நலன்புரிச் சங்கம்,*
*சங்கானை.*

(8931)

# COMPUTER COURSES

**Diploma in Computerized Accounting** — Tally, Quick Book, Accpack, M.Y.O.B

**Diploma in Video Editing** — Premiere Pro CS6, Adobe Photoshop, Adobe AfterEffet, Pinnacle Studio,

**Diploma in AutoCAD** — 2D & 3D Modeling

**Advanced Diploma in Hardware & Networking**

C++, JAVA

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Hotline:0777 173517

DMI COMPUTER EDUCATION

முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (TVEC REG.NO P25/0056)

## DMI COMPUTER EDUCATION

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | No.113, [illegible] Tel:.021 222 4403 |
| நெல்லியடி | M. M. V [illegible] Tel:.021 226 2470 |
| சாவகச்சேரி | No.174, [illegible] (HNB [illegible]) Tel:.021 227 0775 |
| சுன்னாகம் | No.130, K.K.S [illegible] (NSB [illegible]) Tel:.021 224 1970 |
| கிளிநொச்சி | No.19 [illegible] Tel:.021 228 5655 |

ஓம்
நியந்த்ரீ

# அறிவித்தல்

2016 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தர சாதாரணதர மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகளில் சித்தியடைந்த அந்தண மாணவர்கள் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியுடன் தங்கள் விண்ணப்பங்களை 27.05.2017 க்கு முன்னதாக பின்வரும் முகவரியில் சமர்ப்பிக்கவும்

செயலாளர்
நியந்த்ரீ
சிவன் கோவில்
நல்லூர், யாழ்ப்பாணம்

சிவன் கோவில்
நல்லூர்.

செயலாளர்

(8502)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

## VACANCY

Applications are invited by me up to 16.06.2017 from suitably qualified persons for the following post.

### BURSAR

**Qualifications:**

1.(a). Should possess the Membership of the Institute of Chartered Accountants of Sri Lanka(CASL) or its equivalent.

**AND**

(b). Should possess at least six (06) years of experience in accounting and/or auditing in an executive capacity after acquiring the qualifications at 1(a) above.

**OR**

2.A holder of the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor in the University Grants Commission or Higher Educational Institution/Institute with the following;

- Confirmed in that post with three(03) years of satisfactory service in that post of which one (01) year should be after acquiring the qualification at 1(a) above.

**OR**

3.A holder of the post of Senior Assistant Accountant/Senior Assistant Bursar/Senior Assistant Internal Auditor in the University Grants Commission or Higher Educational Institution/Institute with all of the following;

- Confirmed in that post with ten (10) years of experience in accounting and/or auditing in an executive capacity;
- At least eight (08) years of satisfactory service of above ten (10) years should be in the post of Senior Assistant Accountant/Senior Assistant Bursar/Senior Assistant Internal Auditor in the University System;
- Three (03) years of above eight (08) years of experience should be after acquiring the qualification at 1(a) above.

**OR**

4.A holder of the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor in the University Grants Commission/Higher Educational Institution/Institute with all of the following;

- Confirmed in that post;
- Possesses the intermediate qualification of the Institute of Chartered Accountants of Sri Lanka (CASL) or its equivalent;
- Possess a Masters' Degree in Accountancy/Finance/ Management* from a recognized University/HEI;
- Twelve (12) years of experience in accounting and/or auditing in an executive capacity after successful completion of the Intermediate qualification of the CASL or its equivalent;
- Ten(10) years of above experience should be in the post of Senior Assistant Accountant/Senior Assistant Bursar/Senior Assistant Internal Auditor or above in the University system.

**OR**

5.A holder of the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor in the University Grants Commission/Higher Educational Institution/Institute with all of the following;

- Confirmed in that post with three (03) years of satisfactory service in that post;
- Possess a Bachelor's Degree from a recognized University/ HEI;
- Possess Intermediate qualification of the institute of Chartered Accountants of Sri Lanka (CASL) or its equivalent

**Or**

Higher National Diploma in Accountancy (HNDA) conducted by the Sri Lanka Institute of Advanced Technological Education (SLIATE) or its predecessor;

- Fourteen (14) years of experience in accounting and/or auditing in an executive capacity after obtaining the above Intermediate Qualification/HNDA stated above;
- At least five (05) years of such experience should be in the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor and/or Senior Assistant Accountant/Senior Assistant Bursar/Senior Assistant Internal Auditor in the University system carrying the salary scale denoted by salary code U-EX2 (I)

**OR**

6.A holder of the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor in the University Grants Commission/Higher Educational Institution/Institute with all of the following;

- Confirmed in the post;
- Possess a Bachelor's Degree from a recognized University/HEI;

**or**

the Intermediate qualification of the Institute of Chartered Accountants of Sri Lanka (CASL) or its equivalent

**or**

Higher National Diploma in Accountancy (HNDA) conducted by the Sri Lanka Institute of Advanced Technological Education (SLIATE) or its predecessor;

- Not less than eighteen (18) years of experience in accounting and/or auditing in the University system;
- Three (03) years above experience should be in the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor in the University system

**OR**

7.A holder of the post of Accountant Grade II of the Sri Lanka Accountants' Service with the following;

- Should possess the Membership of the Institute of Charted Accountants of Sri Lanka (CASL) or its equivalent;

**OR**

- Master's Degree in Accountancy/Finance/Management* from a recognized University/HEI.

**NOTE**: **'Accounting and/or Auditing'** experience means, experience gained in an executive capacity in Accounting and/or Auditing in a State or Reputed Private Sector Organization.

*Term **'Management'** means a Degree in Management/ Public Administration/Business Administration with major component in Accounting & Finance.

**Salary Scale**: U-EX 3(II) Rs.91,830-7X2,020;11X2,520-133,690/-p.m. as at 01.01.2020.

Rs.65,439-7X1,438;11X1,794-95,239/- p.m. as at 01.01.2017

**Selection** :By Structured Interview

**Sabbatical Leave entitlement**: The holder of the above post will be eligible for Sabbatical Leave as per the regulation of the University Grants Commission.

**STATUTORY BENEFITS**

1.Allowances approved by the University Grants Commission Additional monthly allowance – 20% of the basic salary Cost of living allowance of Rs. 7,800.00 p.m.
35% Research Allowance based on research activity. (If applicable)
Limited monthly fuel allowance.(If applicable)
2.Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3.Gratuity payment
4.Employment Trust Fund benefits
5.Free medical care

Applications should be on **specified forms** issued by the University. Application forms and particulars for the above post should be obtained from the Office of the Senior Assistant Registrar / Establishments [Non –Academic] of this University on a payment of Rs. 100/- for each application form at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post are requested to send a Money Order / Postal Order to the value of Rs. 100/- drawn in favour of the Bursar, University of Jaffna together with self addressed Rs.10/- Stamped envelope of 23X10 c.m in size. Only Applications sent on the **specified** form will be accepted. **(Please annexed copies of relevant documents)**. The envelope containing the dully filled application form must bear **"the name of the post applied for"** on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of the Registrar **on or before 16.06.2017**

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected.

REGISTRAR,
University of Jaffna, 05.05.2017. (C-8481)

# அரசாங்கத்தின் பயமே கீதாவுக்கான தீர்ப்பு

## கூட்டு எதிரணி கூறுகிறது

நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ள தீர்ப்பினை மேன்முறையீட்டு நீதிமன்றமும் அங்கீகரிக்குமாக இருந்தால், தற்போது நாடாளுமன்றத்தில் இரட்டை பிரஜாவுரிமை வகிக்கும் அனைவரினதும் பெயரினையும், வெளியிடுவதற்கு தீர்மானித்துள்ளதாக கூட்டு எதிரணியின் மேல் மாகாணசபை உறுப்பினர் லலித் ஹெல்லாவல தெரிவித்துள்ளார்.

பத்திரமுல்லயில் அமைந்துள்ள கூட்டு எதிரணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றிருந்த கீதா குமாரசிங்க, நாடாளுமன்றத்தில் பதவி வகிப்பதற்கு தகுதியற்றவர் என, நீதிமன்றம் தீர்ப்பளித்தமைக்கு எதிராக, அவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஊடாக தீர்வினை பெற்றுக்கொள்ள தீர்மானித்துள்ளார்.

குறித்த பிரச்சினை தொடர்பில் ஆராயும்போது, கடந்த மே முதலாம் திகதி கூட்டு எதிரணியான எங்களுக்கு பெருந்திரளான மக்கள் ஆதரவளித்துள்ளமையினால், நல்லாட்சி அரசாங்கம் எங்கள் மீது கொண்டுள்ள பயத்தினை இது வெளிப்படுத்துகின்றது.

இதனால் தான் நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்கவுக்கு, இந்த தீர்ப்பினை வழங்கியுள்ளது. இவர் இரட்டை பிரஜாவுரிமை வைத்துள்ளமையினால், மக்கள் இவருக்கு ஆதரவு அளிக்காமல் இருக்கவில்லை. இரட்டை பிரஜாவுரிமை வைத்திருப்பது அவரது தனிப்பட்ட உரிமை.

அதாவது இலங்கை ரூபாவில் கையெழுத்திடும் மத்திய வங்கி ஆளுனரின் இரட்டை பிரஜாவுரிமை கருத்திற்கொள்ளப்படுவதில்லை. மக்கள் சேவையினை மேற் கொள்பவருக்கு மட்டும் ஏற்பட்டுள்ள இந்த நிலைமை உண்மையில் கவலை அளிக்கின்றது.

இதேபோன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு படைப்பிரிவை சேர்ந்த 42 பாதுகாப்பு அதிகாரிகள் அரசாங்கத்தினால் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளனர். அரசாங்கம் இவ்விடயம் தொடர்பில், பொறுப்புடன் நடந்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறான நிலைமைகள் நீடிக்குமாக இருந்தால், இனிவரும் காலங்களில் கூட்டு எதிரணியில் அங்கம் வகிக்கும்' அனைவரும் சிறைக்கு செல்ல வேண்டிய சூழ் நிலை உருவாகும். இது அரசாங்கம் எம்மீது கொண்டுள்ள பயத்தினை வெளிப்படுத்துகின்றது.

உண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ள தீர்ப்பினை மேன்முறையீட்டு நீதிமன்றமும் அங்கீகரிக்குமாக இருந்தால், நாடாளுமன்றத்தில் இரட்டை பிரஜாவுரிமை வைத்துள்ள அனைவரது பெயர் பட்டியலையும் வெளியிட்டு, நாடாளுமன்ற உறுப்புரிமையை இரத்து செய்யுமாறு அழுத்தம் கொடுப்போம் என, கூட்டு எதிரணியின் மேல் மாகாணசபை உறுப்பினர் லலித் ஹெல்லாவல மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையில் இந்தியப் பிரதமரின் பாதுகாப்புக்கு 6,000 பொலிஸார்



(கொழும்பு)

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கான சிறப்பு பாதுகாப்பில், 6000 பொலிஸார் ஈடுபடுத்தப் படவுள்ளனர்.

இது குறித்து பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தகவல் வெளியிடுகையில்,

'ஐ.நா வெசாக் நிகழ்வில் பங்கேற்க இலங்கை வரவுள்ள இந்தியப்பிரதமருக்கு சிறப்பு பாதுகாப்பு வழங்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தியப் பிரதமர் மற்றும் ஐ.நா வெசாக் நிகழ்வு ஆகியவற்றின் பாதுகாப்புக்கு 6000 பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இதில் சாதாரண பொலிஸ் துறையினர், சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் மிக முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடும் சிறப்பு பயிற்சி பெற்ற அதிகாரிகள் உள்ளடங்குகின்றனர்.

கொழும்பு, கண்டி மாவட்டங்களில், கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அத்துடன் நாடெங்கும் வெசாக் நிகழ்வுகள் நடைபெறும் விகாரைகளுக்கும் சிறப்பு பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

இந்தியப் பிரதமரின் வருகையின் போது எந்த நாச வேலைகளையும் மேற்கொள்ள முடியாது. இந்த விடயத்தில் சிறப்பு கவனம் செலுத்த காவல் துறையினருக்கு உத்தரவிட்டுள்ளது. என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# தேர்தல் பதிவேட்டில் திருத்தங்கள்

2017ம் ஆண்டு தேர்தல் பெயர் பதிவேட்டில் திருத்தங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

விரைவில் முக்கியமான இரண்டு தேர்தல்கள் மற்றும் மக்கள் கருத்துக்கணிப்பு என்பன இடம்பெற இருப்பதால் இந்த சீர்திருத்த நடவடிக்கை தொடர்பில் அதிக அவதானம் செலுத்துமாறு அனைத்து அரசியல் கட்சிகளிடமும் கேட்டுக் கொள்வதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராட்சி கூறினார்.

தேர்தல் காலத்தில் மீண்டும் திருத்தம் செய்வது கடினமாக இருக்கும் என்பதால் இந்த சந்தர்ப்பத்திலேயே இது தொடர்பில் அவதானம் செலுத்துமாறு ரோஹண ஹெட்டியாராட்சி மேலும் தெரிவித்தார். (இ-7)

# நல்லிணக்க கொள்கை வரைபு அமைச்சரவையால் ஏற்பு

## சந்திரிகா வரவேற்பு



இலங்கையின் முதலாவது தேசிய நல்லிணக்கக் கொள்கை வரைபை அமைச்சரவை ஏற்றுக்கொண்டதை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வரவேற்றுள்ளார்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கக் கொள்கை அலுவலகத்தின் இந்த வரைபை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ் வாரம்சமர்ப்பித்திருந்தார். இதை அமைச்சரவை ஏற்றுக்கொண்டது.

நல்லிணக்கத்துக்கான தேசியக் கொள்கையொன்றை அறிமுகப்படுத்தும் முயற்சி 2015ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஆரம்பமானது. அது முதல் சுமார் ஒரு வருட காலம் வரைவுக்கான ஆலோசனைகள் சம்பந்தப்பட்ட அமைச்சுகள் மற்றும் பல்வேறு தரப்புகளிடம் இருந்து பெறப்பட்டன.

மேலும், கற்றுக்கொண்டபாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கைகள், உடலகம ஆணைக் குழு அறிக்கைகள், பரணகம ஆணைக் குழு அறிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு ஆவணங்களும் இந்த வரை வுக்காக சீர்தூக்கி ஆராயப்பட்டுள்ளது. (இ-7)

## தினம் ஒரு தகவல்

# அச்சம் அறியாதவர்

சம்பரானிலுள்ள அவுரித் தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் உரிமையைக் கோரிப் போராட்டம் நடத்திக்கொண்டிருந்தார்கள். தொழிலாளர்களுக்கு எதிராய் பல அநீதிகளும் அட்டூழியங்களும் நடந்தன.

காந்தியடிகள் சம்பரானுக்கு வந்து இதை விசாரணை நடத்தினார். விசாரணையால் மக்கள் விழிப்படைந்தார்கள். தொழிலாளர்கள் எழுச்சி பெற்றனர். அவர்கள் துன்பத்துக்குக் காரணமாக இருந்த வெள்ளையன் நீலியின் நிலை நெருக்கடியாயிற்று.

சம்பரானில் தங்கியிருந்த காந்தியடிகளிடம் யாரோ ஒருவர் வந்து , இந்தக் கொடியவன் நீலி , உங்களைக் கொல்வதற்கு ஆட்களை அமர்த்தி வைத்திருக்கிறான் எனக் கூறினார்.

இதைக் கேட்ட அடிகள் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. செய்தியைத் தெரிவித்தவரிடம் அவர் ஒன்றுமே பதில் சொல்லிக் கொள்ள வில்லை.

ஒரு நாள் இரவு காந்தியடிகள் யாருக்கும் தெரியாமல் தனியாக வெள்ளைக்காரன் நீலியின் பங்களாவுக்குச் சென்றார். அவன் அருகே போய் நின்று, நீங்கள் என்னைக் கொல்ல ஆட்களை அமர்த்தியிருப்பதாக அறிந்தேன். எனவே யாரிடமும் தெரிவிக்காமல் தனியாக இங்கே வந்திருக்கிறேன் என்று கூறினார்.

அந்த வெள்ளையன் நீலி திகைப் புற்று அப்படியே கல்லாய்ச் சமைந்து நின்றான்.

கவிஞர் தே.ப.பெருமாள்

# இந்தியப் பிரதமரின் இலங்கைப் பயணம்

இலங்கைக்கு எதிர்வரும் 11ஆம் திகதி விஜயம் செய்யவுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் பயண நிகழ்ச்சி நிரல் குறித்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

எதிர்வரும் 11ஆம் திகதி பிற்பகல் 5.30 மணிக்கு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி கட்டுநாயக்க சர்வதேச வானூர்தி நிலையத்தை வந்தடையவுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து, 12ஆம் திகதி காலை 9 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேசமாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ள சர்வதேச வெசாக் பண்டிகை நிகழ்வில் பங்கேற்கவுள்ளார்.

பின்னர் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலை திறப்பு விழா முற்பகல் 11.15 அளவில் மோடி பங்கேற்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கண்டியில் இடம் பெறும் நிகழ்வொன்றிலும் மோடி பங்கேற்கவுள்ளார்.

இவ்வாறாக தமது இரண்டு நாட்கள் இலங்கை விஜயத்தில் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, 12ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் இந்தியா நோக்கி புறப்பட உள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது. (இ-7)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 90 | 100 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 90 | 110 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 100 | 160 | 160 | 100 |
| தக்காளி | 80 | 120 | 120 | 120 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 60 | 80 | 80 | 60 |
| கோவா | 150 | 200 | 120 | - | 160 | 120 |
| கரட் | 200 | 250 | 140 | 200 | 240 | 200 |
| பூசணி | 50 | 50 | 30 | 50 | 80 | 60 |
| புடோல் | 80 | 120 | 50 | 100 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 60 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 240 | 220 | 150 | 170 | 240 | 200 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 80 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 160 | 200 | 100 | 160 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 100 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | - | - | 120 | 80 |
| பயற்றங்காய் | 80 | 160 | 100 | 100 | 160 | 100 |
| லீக்ஸ் | 80 | 120 | 50 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 140 | 140 | 100 | 160 | 160 | 140 |
| கறிமிளகாய் | 100 | 160 | 80 | 160 | 160 | 140 |
| முருங்கைக்காய் | 130 | 150 | 150 | 160 | 300 | 200 |
| போஞ்சி | 160 | 200 | 120 | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 70 | - | 80 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 30 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 50 | 40 | 40 | 60 | 50 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 60 | 60 | 50-60 | 70 |
| இராசவள்ளி | 200 | 300 | 200 | - | 200 | 200 |
| வெங்காயப்பூ | 250 | - | - | - | - | 300 |
| முள்ளங்கி | 80 | - | - | 80 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 10 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | - | 60 | - | - | - | - |

## சிங்களவர்களை நம்பினால் நடுக்கடலில் தத்தளிக்க விட்டுவிடுவார்கள்

# தமிழ் மக்கள் தாம் தீர்மானித்த இலக்கு நோக்கிப்பயணிக்க வேண்டும்

## சிரேஷ்ட சட்டத்தரணி சிறிகாந்தா சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

புதிதாகக் கொண்டுவரப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் பழைய குருடி கதவைத் திறவடி என்ற சிந்தனையில்தான் சிங்கள பெரும்பான்மையினரின் சிந்தனைகள் அமைந்திருக்கின்றன என்பதனை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது என தெரிவித்துள்ள தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ)பொதுச் செயலாளர் நாயகமும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான என்.சிறிகாந்தா, ஆட்சிக்கு வருவதற்கு தமிழ் மக்களுடைய வாக்குகள் தேவைப்படும். ஆட்சிக்கு வந்த பின்னர் தமிழ் மக்களுடைய கோரிக்கைகளை நிராகரித்து நடுக்கடலில் தத்தளிக்க விட்டு விடுவார்கள். இது தான் வரலாறு எமக்குச் சொல்லி தந்துள்ளது.

ஆகவேதான் சிங்கள ஆட்சியாளர்களை நம்ப வேண்டிய தேவை எமக்கில்லை. தமிழ் மக்கள் தங்களைத் தாமே நம்ப வேண்டும். தாம் தீர்மானித்த இலக்கு நோக்கிப் பயணிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) மறைந்த தலைவர் சிறீ சபாரத்தினத்தின் 31 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு அவர் கொல்லப்பட்ட இடமான கோண்டாவில் அன்னங்கை கோகிலா வீதி தோட்ட வெளியில் நேற்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ரெலோவின் தலைமைக்குழு உறுப்பினரும் நிதிச் செயலாளருமான கே.என்.விந்தன் கனகரத்தினத்தின் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் நினைவுப் பேருரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலை இயக்கத்திற்கு இரண்டு பேரிடிகள் காத்திருந்தன. முதலாவது வெலிக்கடை படுகொலை, இரண்டாவது தம்பி சிறீசபாரத்தினமும் ரெலோ போராளிகளும் படுகொலை செய்யப்பட்ட தொடர் நிகழ்வுகள். இருந்தாலும் நாங்கள் இன்றும் 31 வருடங்களின் பின்னரும் எமது இயக்கம் தமிழீழ மண்ணிலே தலை நிமிர்ந்து நின்று தனது தலைவனையும் தோழர்களையும் நினைவுகூருகின்றது. சிறிசபாரத்தினம் கொல்லப்படுவதற்கு முன்னர் ரெலோ மீதான தாக்குதலை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தீவிரப்படுத்தி கொண்டுள்ளது என்ற தகவல் வெளியான போது, வடக்கு - கிழக்கில் இருந்த இலங்கை இராணுவத் தளபதிகள், ரெலோ போராளிகள் தமது இராணுவ முகாம்களில் சரணடையலாம் என அறிவித்தல் விடுத்தனர்.

ஆனால் போராளிகளில் ஒருவர் கூட சரணடையவில்லை. ரெலோவின் அரசியல் பாரம்பரியம் எவ்வாறானது என்பதற்கு இதுவொரு எடுத்துக்காட்டு. நாங்கள் என்ன நடவடிக்கை எடுத்தாலும் ஒளிவுமறைவின்றி பகிரங்கமாக எடுத்துள்ளோம். அந்த நடவடிக்கைகள் சில சரியானவையாக இருக்கலாம். சில ஏற்றுக்கொள்ள முடியாதவையாக இருந்திருக்கலாம். இதுபோன்ற முடிவுகளுக்கு வேறு தமிழீழ விடுதலைப் போராட்ட இயக்கங்களும் விதிவிலக்கல்ல. எந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ரெலோ இயக்கத்தை தடை செய்ததோ, அதே ரெலோ இயக்கத்தையும் உள்ளடக்கி தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் பின்னர் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டிய கூட்டமைப்பு உறுப்பினர்களை தமிழீழ விடுதலை புலிகளின் தலைவர் தம்பி பிரபாகரன் சந்தித்த போது.

ரெலோ இயக்கம் எங்களுக்காக பல சந்தர்ப்பங்களில் கதைத்ததாக கூறியிருந்தார். ஒரு ஆயுதப் போராட்டத்தில் திருத்தி எழுத முடியாத தீர்ப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கலாம். பல தவறான முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கலாம். அதற்கு தம்பி பிரபாகரனும் தம்பி சிறிசபாரத்தினமும் விதிவிலக்கல்ல. சிறிசபாரத்தினம் மீதும் பல விமர்சனங்கள் உண்டு. அவரும் பல தவறான முடிவுகளுக்கு தள்ளப்பட்டிருந்தார்.

அவை திருத்தப்பட முடியாத தீர்ப்புக்களாக இருந்தன. அவை பலருடைய மனங்களில் காயங்களை ஏற்படுத்தியிருந்தன. இப்பொழுதும் அந்தக் காயங்கள் இருக்கின்றன. இதேபோன்று புலிகள். புளொட். ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய ஆயுதப் போராட்ட இயக்கங்கள் சில சந்தர்ப்பங்களில் எடுத்த முடிவுகள் பல்லாயிரக் கணக்கானவர்களின் மனங்களில் ரணங்களை விதைத்திருந்தன.

ஆனால் அவை எல்லாவற்றையும் மீறி ஒரு கட்டத்தில் நாம் அனைவரும் ஒன்றுபட்டோம். கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதிலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவோடும் அங்கீகாரத்தோடும். ஆமோதிப்போடும் அனுசரணையோடும் தொடர்ந்தும் செயற்பட்டுக் கொண்டு வருகின்றது. இந்த ஒற்றுமை கட்டிக்காக்கப்பட வேண்டும். ஒற்றுமையை உதட்டளவிலே கட்டிக்காப்பதில் அர்த்தமில்லை. ஒற்றுமை என்பது செயற்பாடுகளிலே வெளிப்பட வேண்டும். ஐந்து விரல்களும் இணைந்திருந்தால்தான் எதிரியை தாக்க முடியும். தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் நான்கு விரல்கள் ஒன்று சேர்ந்துள்ளன. ஐந்தாவது விரல் தனித்து வெளியே நிற்கின்றது. அந்த ஐந்தாவது விரலும் கூட்டமைப்பிற்குள் வந்தால் கூட்டமைப்பு மேலும் பலம் பெறும்.

எவ்வாறு கௌரவர்களை குருஷேத்திர களத்தில் பாண்டவர்கள் ஒன்றுசேர்ந்திருந்து எதிர்த்தார்களோ அதேபோன்று நாமும் எதிர்க்க வேண்டும். ஆயுதப் போராட்ட இயக்கங்கள் என்றால் தகாதவர்கள், சமூக விரோதிகள் என்ற எண்ணம் இருக்கின்றது. அது தவறானது. துரதிஷ்டமானது. எமது போராட்டத்தின் பின்னர் எமக்கு மிஞ்சியுள்ளது மாகாண சபை அமைப்பு முறைகள் தான். இதனை வென்றெடுத்தவர்கள் அந்நாள் ஆயுதப் போராட்ட இயக்கங்களே என்பதை வரலாறு பதிவு செய்துள்ளது. இன்று எமக்கு கிடைத்த பல சந்தர்ப்பங்களை இழந்துள்ளோம். 2005 இல் தனிப்பட்ட காரணங்களுக்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் மறைந்த அரசியல் துறைப் பொறுப்பாளர் பரராஜசிங்கத்தை சந்தித்த போது, ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் எங்களுடைய கருத்துக்களை தலைவரிடம் சொல்வதாகக் கூறியிருந்தார். தேர்தலில் யார் வரவேண்டும் என்பதல்ல பிரச்சினை, யார் வரக்கூடாது என்பதுதான் பிரச்சினை.

மகிந்த வந்தால் என்னவெல்லாம் நடக்கக் கூடாதோ அத்தகையவை எல்லாம் நடக்கும் என தலைவரிடம் கூறுங்கள் என நான் கூறினேன். விவேகமான முடிவுகள் என நாம் எடுத்த முடிவுகள் விபரீதங்களுக்கு இட்டுச் சென்றன. இதனை நான் குறையாகக் கூறவில்லை. இவற்றிலிருந்து நாங்கள் பாடங்களை கற்க வேண்டும். இன்று நிலைமை என்ன? மகிந்தவின் மேதினத்திற்கு சனம் திரண்டுள்ளது. இது அரசாங்கத்திற்கு அழுத்தத்தை வழங்கும்.

எனவே அரசியல் தீர்வுக்கு இது பின்னடைவாக அமையும் என ஒரு கருத்து எங்களுடைய தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வட்டாரங்களில் இருந்து வந்துள்ளது. கூட்டங்களுக்கு ஆட்சேர்ப்பது கலை. மகிந்தவின் கூட்டம் எவ்வாறு சேர்க்கப்பட்டிருக்கும் என்று எங்களில் பலருக்கு அனுபவ ரீதியாகத் தெரியும்.

பெரும்திரளாக சனத்தைக் கூட்டியவர்கள் எல்லாம் ஆட்சியைப் பிடிப்பார்கள் என்ற பொய்யான கருத்தை வரலாற்று ரீதியாக எம்மால் அறிந்து கொள்ள முடியும். இதனை காரணம் காட்டி எமது அரசியல் தீர்வு பாதிக்குமா? இதனை ஒரு அழுத்தமாக அரசாங்கம் காட்டி தனது சொந்த இலாபங்களுக்காக தீர்வு முயற்சியை தாமதிக்க வைக்குமா? என்று சிந்திக்க விரும்புகின்றோம். ஜனாதிபதி நல்லவர், நேர்மையானவர். ஆனால் சமநிலை பேணுகின்ற அரசியல் நிர்ப்பந்தத்தில் அவர் இருந்து கொண்டுள்ளார். குறிப்பாக போர்க்குற்ற விசாரணை தொடர்பில் என்ன கூறி வருகின்றார் என்று தெரியும். யுத்த வீரர்களை வெளிநாட்டு அழுத்தத்துக்கு பணிந்து சர்வதேச நீதிபதிகளின் விசாரணைக்கு உட்படுத்த மாட்டேன் என திட்டவட்டமாக கூறி வந்திருக்கின்றார்.

காணி விடுவிப்பு விவகாரத்தில் எமது கூட்டமைப்பின் தலைவரே இராணுவத்தினை சந்தித்துப் பேச வேண்டிய நிர்ப்பந்தத்தை அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கின்றது. அடிப்படை பிரச்சினைகளில் கடந்த நான்கு மாதங்களில் எந்த மாற்றங்களையும் காணவில்லை. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில், பலர் வெளிநாடு சென்றிருக்கலாம் என வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவது போன்று பிரதமர் ரணில் கூறியுள்ளார். முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் சிந்தனையில் தான் தற்போதும் ஐக்கிய தேசியக் கட்சி சென்றுகொண்டிருக்கின்றது. ஒற்றையாட்சியை விடாமல் பற்றி பிடிப்பதற்கும் பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்குவதையும் தான் அந்தக் கட்சி விரும்புகின்றது.

வடக்கு - கிழக்கு இணைப்பை பற்றி நினைத்துக் கூடப்பார்க்கவில்லை. இந்த நிலைமையில்தான் நாங்கள் நின்று கொண்டிருக்கின்றோம். நாங்கள் கனவுலகத்தில் சஞ்சரிப்பதில் பிரயோசனம் இல்லை. மகிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதற்காக வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள், மலையக தமிழ் மக்கள், முஸ்லிம் சகோதரர்கள் இணைந்து புதிய ஜனாதிபதியை கொண்டுவந்திருந்தோம். கிட்டத்தட்ட 55 வீதமான சிங்கள மக்களுடைய வாக்குகள் மகிந்த ராஜபக்ஷவுக்குத்தான் கிடைத்திருந்தன. தமிழர் வாக்குகளால் தான் மைத்திரிபால சிறிசேனஜனாதிபதியாகியிருந்தார். இந்தப் பின்னணியில் தான் சில வித்தியாசங்களை நாங்கள் சிந்திக்க வேண்டியுள்ளது.

ஜே.வி.பி. தமிழ் மக்கள் தொடர்பான கோரிக்கையில் தீவிரமான ஒரு மாற்றத்திற்கு உள்ளாகி வருகின்றதை காண முடிகின்றது. இவ்வாறு ஒவ்வொரு அரசாங்கங்கள் மீதும் நம்பிக்கை வைத்திருப்பதில் எந்த பிரயோசனமும் இல்லை. முள்ளிவாய்க்கால் கொள்ளி வைப்பிற்கு மகிந்தவோடு கைகோர்த்த முன்னாள் இராணுவத் தளபதி அமைச்சராக இருக்கும்பொழுதே பாதுகாப்பு அமைச்சில் முக்கிய பொறுப்பு வழங்கப்படும் அளவிற்கு ஜனநாயக விரோத சிந்தனைகள் இந்த நாட்டில் வளர்ந்து கொண்டிருக்கின்றன. இன்னொரு புறத்தில் தம்பி சுமந்திரன், பயங்கர வாத எதிர்ப்புச் சட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சமர்ப்பித்த நான்கு விடயங்களில் மூன்று விடயங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார். முதலாவதாக பயங்கரவாதம் தொடர்பான வரைவிலக்கணம் சர்வதேச ரீதியில் அமைந்திருக்க வேண்டும் என்ற கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. ஆகவே வெளிநாடுகளில் பயங்கரவாதம் என்பது வேறாகவும் இலங்கையில் பயங்கரவாதம் என்பது வேறாகவும் இருக்கும்.

இரண்டாவதாக சட்டத்தரணிகள் கைதானவரை சந்திப்பது தொடர்பான அடிப்படை உரிமை கோரிக்கை முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மூன்றாவது பயங்கரவாத தடைச்சட்டத்தின் பயங்கரமாக இருக்கும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் பெறுதல். இந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சித்திரவதைகளின் மூலம் பெறப்படுகின்ற போதிலும், இவை சுதந்திரமாக வழங்கப்பட்டது என நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால் அதனை வைத்தே சிறைக்கு அனுப்ப முடியும். இதற்கு புதிதாக வந்துள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் வழி ஏற்படுத்தி கொடுத்துள்ளது. சிறைகளில் அடைபட்டுள்ள ஆயிரக்கணக்கான இளைஞர்களின் கோரிக்கை இதன் மூலம் நிராகரிக்கப்பட்டுள்ளது. குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் ஒரு பலமான ஆயுதமாக, வழக்கு தொடுநரின் அடிப்படை ஆதாரமாக நீடிப்பதற்கு இந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வழி ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

பழைய குருடி கதவை திறவடி என்ற சிந்தனையில்தான் சிங்கள பெரும்பான்மையினரின் சிந்தனைகள் அமைந்திருக்கின்றன என்பதனை நாங்கள் தெட்டத்தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் நம்பி ஏமாந்த வரலாறுகள் பல உள்ளன. இந்த நிலையில்தான் தமிழீழ விடுதலை இயக்கம் ஒன்றை அழுத்திக் கூற விரும்புகின்றது. அழுதும் பிள்ளையை அவளே பெறவேண்டும். பாலஸ்தீனியர்கள் எவ்வாறு தங்களை வருத்திப் போராடிக் கொண்டுள்ளார்களோ, அதேபோன்று நாங்களும் போராட வேண்டும். அரசியல் இராஜதந்திர விடயங்களில் தமிழர் தரப்பு ஒற்றுமையாகவும் உறுதியாகவும் இருக்க வேண்டும். எந்த ஒரு அரைகுறை அரசியல் தீர்வு திட்டமும் தமிழ் மக்களால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது.

ஒற்றையாட்சி என்பது இலங்கை அரசியலமைப்பில் இருந்து அகற்றப்பட்டு, எமது மரபுவழி தாயகம் அங்கீகரிக்கப்பட்டு அதிகாரப் பங்கீட்டிலே ஒரு தனி அலகாக அங்கீகரிக்கப்பட்டு, எங்களுக்கு திருப்திகரமான, நீதியான, சுயாட்சி வேண்டும். அத்தகைய ஒரு தீர்வுத் திட்டம் சிங்கள தரப்பிலிருந்து முன்வைக்கப்படவில்லை என்றால், நாங்கள் பல முடிவுகளை எடுக்க நேரிடும். 70 வீதமான நிலப்பரப்பை கொண்டிருந்த பாலஸ்தீனியர்கள் யூதர்களின் இஸ்ரேலியர்களின் குடியேற்றங்களால் தற்போது 17 வீதமான நிலப்பரப்பிற்குள் முடக்கப்பட்ட போதிலும் தமது போராட்டத்தை அவர்கள் கைவிடவில்லை.

ஆகவேதான் தமிழீழ விடுதலை இயக்கம் தமிழீழ விடுதலைக்காக, எமது மக்களுடைய விடுதலைக்காக ஆயுதம் ஏந்திய முதலாவது இயக்கம் என்ற வகையிலே, அரசியலுக்குள் அங்கம் வகிக்கும் ஜனநாயக இயக்கம் என்ற வகையிலே ஒரு விடயத்தை சொல்லிக்கொள்ள விரும்புகின்றது. நாங்கள் எங்கள் மக்களை நம்புகின்றோம். தங்கள் பிரச்சினைகளை தமிழ் மக்கள் தமது கைகளிலே எடுத்துக் கொள்ள வேண்டும்.

எங்களுக்கு யாரும் உதவுவார்கள் என்று எதிர் பார்ப்பது முட்டாள் தனம். இந்த யுத்தத்திற்கு நாங்கள் கேட்காமலே இந்தியா தமக்கு உதவியது என மகிந்த ராஜபக்ஷ கூறியிருக்கின்றார். ஆனால் இந்தியாவில் இன்று நிலைமை என்ன? தமிழ் நாட்டில் ஹிந்தி திணிக்கப்படுகின்றது.

இன்று எங்களுக்காக ஐக்கிய நாடுகள் சபையிலே போர்க்குற்றம் தொடர்பில் பெரிதாக பேசும் பல நாடுகள் நடந்து முடிந்த யுத்தத்தில் நான்கு இலட்சம் மக்கள் யுத்த பிரதேசத்திற்குள் முடக்கப்பட்டு உயிராபத்தை எதிர்நோக்கிய போதும் கூட, அன்றைய மகிந்த அரசாங்கத்திற்கு இராணுவ ரீதியாக உதவியவர்கள்தான் என்பதை நாங்கள் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. தங்கள் சொந்த காரணங்களுக்காக அவர்கள் குரல் எழுப்பி கொண்டுள்ளார்கள். நாங்களும் அதனை பயன்படுத்திக் கொள்ள தயாராக இருக்கின்றோம். ஆகவே உண்மையான நிலவரத்தை அறிந்து எமது ஒற்றுமையை பலப்படுத்தி ஒரு நீதியான தீர்வு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். அதனை நோக்கி விவேகமாகவும், துணிவோடும் பயணிக்க வேண்டிய கட்டத்தில் உள்ளோம். மைத்திரியை கொண்டு வந்தோம் என்பதற்காக அவர் அது செய்ய வேண்டும், இது செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பது எல்லாம் சிறுபிள்ளைத் தனமானது.

கடந்த கால வரலாறுகளை எடுத்துப் பார்த்தால் ஆட்சிக்கு வருவதற்கு தமிழ் மக்களுடைய வாக்குகள் தேவைப்படும். ஆட்சிக்கு வந்த பின்னர் தமிழ் மக்களுடைய கோரிக்கைகளை நிராகரித்து நடுக்கடலில் தத்தளிக்க விட்டு விடுவார்கள்.


ஆகவேதான் அவர்களை நம்ப வேண்டிய தேவை எமக்கு இல்லை. தமிழ் மக்கள் தங்களைத் தாமே நம்ப வேண்டும். பாலஸ்தீனம், ஈஸ்டிமோர் மக்களைப் போன்று நாங்கள் உறுதியாக இருந்திருந்தால் எங்கள் தலைவிதியை எங்களால் எழுத முடியும். நாம் கோருகின்ற தீர்வு கிடைக்காவிட்டால் எங்கள் தெரிவு என்ன என்பதனை நாங்கள் தீர்மானிப்பதற்கு பொதுவாக்கெடுப்பு ஒன்றைக் கோர முடியும்.

அதனை முன்வைத்து எமது போராட்டத்தை நகர்த்த முடியும். யார் தடம் புரண்டாலும் எமது இளைய தலைமுறை அந்த இலட்சியப் பாதை நோக்கி உறுதியாக செல்லும் என்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## 6ஆவது நாள்

# வளமாக வாழ்ந்த ஊருக்கு திரும்பிச்செல்ல வேண்டும்

## இரணைதீவு மக்கள் விருப்பம்



நல்லாட்சி அரசை ஏற்படுத்துங்கள். உங்களின் பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்துவிடும் என எங்களது பிரதிநிதிகள் சொன்னார்கள். ஆனால் எதுவும் நடக்கவில்லை . எங்களால் உருவான நல்லாட்சி அரசும் நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டது என இரணைதீவு மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நேற்று சனிக்கிழமை 6ஆவது நாளாகவும் தமது சொந்த நிலத்திற்கு செல்வதற்கான கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இரணைதீவு மக்கள் தாங்கள் மீண்டும் ஊருக்குச் செல்லும் வரை போராட்டத்தில் ஈடுபடப் போவதாகத் தெரிவித்துள்ளனர்.

இதன் போது கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களில் கணவனை இழந்த பெண் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,

தாங்கள் ஊரில் (இரணைதீவில்) இருந்த காலத்தில் காலையில் ஆறு மணிக்கு கடலுக்குச் சென்றால் ஏழு மணிக்கு வீட்டுக்கு வந்துவிடுவோம். அதற்கிடையில் எங்களுக்கு கிடைக்கின்ற வருமானம் வாழ்க்கைச் செலவை கொண்டு நடத்த போதுமானதாக இருக்கும். நான்கு வகையான



தொழிலை செய்து வந்தோம் ஆனால் இன்று அந்த நிலைமை மாறியுள்ளது. மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்கின்றோம். சாப்பாட்டுக்கே போராட்டம் நடத்த வேண்டிய நிலைக்கு தள்ளப் பட்டுள்ளோம் எனத் தெரிவித்த அவர்.

வளமாக வாழ்ந்த ஊருக்கு திரும்பி ( இரணைதீவுக்கு) செல்ல வேண்டும். மீண்டும் வளமான வாழ்க்கையை வாழ வேண்டும். எங்களது வாழ்க்கைதான் கடைசி காலத்தை எட்டிவிட்டது. எங்களது பிள்ளைகளின் வாழ்க்கையாவது நிம்மதியானதாக அமைய வேண்டும் அதற்கு நாங்கள் ஊருக்குத் திரும்ப வேண்டும் என்றார்.

இரணைதீவு மக்கள் 1992 ஆம் ஆண்டு தங்களின் சொந்த நிலத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு இன்று வரை இரணை மாதாநகர் உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களில் 340 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்கள் தங்கள் சொந்த நிலத்திற்குச் செல்லவும், தங்கி நின்று தொழில் செய்யவும் கோரியே கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் .

இதேவேளை போராட்டம் ஆரம்பித்த நாள் முதல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேரில் சென்று கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

6ஆவது நாளாக தொடர்ந்து முன்னெடுக்கப்படும் மேற்படி போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வ ராசா கஜேந்திரன் இரணை மாதா நகர் சென்று அம்மக்களின் போராட்டத்துடன் இணைந்திருந்தார்.(2-5-312)




## சர்வதேச குடும்பநல மாதுக்கள் தினத்தில்

# குடும்பநல மருத்துவ மாதுக்கள் சான்றிதழ் வழங்கி கௌரவிப்பு



(பரந்தன்)

உலகில் தாய்சேய் நலன்களைப் பேணிப் பாதுகாக்க உதவும் குடும்ப நல மாதுக்களின் சேவைக்கு மதிப்பளிக்கும் நோக்கில் 1992 ஆம் ஆண்டிலிருந்து வருடா வருடம் மே. மாதம் 5ஆம் திகதி சர்வதேச குடும்பநல மாதுக்கள்தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதற்கமைய நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டத்தின் சுகாதார வைத்திய அதிகாரிகளின் ஒழுங்கமைப்பில் கரைச்சி பொதுச் சுகாதார தாதிய உத்தியோகத்தரது நெறிப்படுத்தலில் சர்வதேச குடும்ப நல மாதுக்கள் தினம் கிளிநொச்சி பழைய வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் மகப்பேற்று நிபுணர் வைத்திய கலாநிதி பாபு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது சேவையாற்றும் குடும்பநல மாதுக்கள்,



மாவட்டத்தில் சேவையாற்றி ஓய்வு பெற்ற மற்றும் மாவட்டத்தில் சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற குடும்ப நல மாதுக்கள் என ஐம்பதிற்கு மேற்பட்ட குடும்ப நல மாதுக்கள் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சத்தியசீலன் கடந்த 2016ஆம்ஆண்டு தமது சேவைகளைத் திறம்பட வழங்கிய குடும்ப நல மருத்துவ மாதுக்களுக்கு சான்றிதழ் வழங்கி மதிப்பளித்தார்.

இதற்கமைய கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் திருமதி சந்திரகலா, திருமதி.சுமங்கலி, திருமதி. வளர்மதி, கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் திருமதி. அமிர்த சுலோச்சனா, திருமதி லோறன்ஸ்பவுல் மேரி அனற்றி, திருமதி கவிதா, பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் செல்வி சுஜீபா,திருமதி அருள்நிதி, திருமதி கவிதா சாந்தமூர்த்தி, பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் திருமதி வசந்தமதி, திருமதி சிவலோஜினி, திருமதி ஜெயபோதினி ஆகிய குடும்பநல மாதுக்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது. (2-5-312)

## கொக்கிளாய் மீனவர்களின் வழக்கு 18ம் திகதிக்கு மீண்டும் ஒத்திவைப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு, கொக்கிளாய் பாடுகளில் தென்னிலங்கை மற்றும் உள்ளூர் மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்ட இடைக்காலத்தடை உத்தரவை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் எதிர் வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது. நீரியல் வளத் திணைக்களத்தின் அரச அதிகாரிகளுடன் சென்று தமது மீன்பிடி உரிமை தொடர்பிலான பிரச்சினை விடயத்தில் சிங்கள மீனவர்களுடன் இணக்கப்பாட்டிற்கு வருவதில் தமக்கு நம்பிக்கையில்லை என முல்லைத்தீவு கொக்கிளாய் பிரதேச தமிழ் மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கொக்கிளாய் கடற்பரப்பில் தமிழ் -சிங்கள மீனவர்களுக்கு இடையிலான கரை வலைப்பாட்டு உரிமம் தொடர்பான வழக்கு கடந்த 4ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பிரச்சினையை சுமுகமாக தீர்க்குமாறு முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி எஸ்.எம். எஸ்.சம்சுதீன் கோரிக்கை விடுத்திருந்தார்.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது, கொக்கிளாய் பிரதேச தமிழ் மீனவர்கள், சிங்கள மீனவர்களுடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டிற்கு வர முடியும் என்பதில் நம்பிக்கை இல்லை எனக் குறிப்பிட்டனர்.

கொக்கிளாய் கடற்பிராந்திய கரைவலைப்பாட்டு உரிமம் தொடர்பான வழக்கு கடந்த 4ஆம் திகதி முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.எம்.எஸ் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தாம் விசாரணைகளுக்கு இதுவரை தயாராகவில்லை என நீரியல்வளத் திணைக்களம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்திற்கு தெரிவித்ததாக கொக்கிளாய் மீனவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்தார். இந்த வழக்கு விசாரணையின் போது மீன்பிடிப்பதற்கான அனுமதியை வழங்குமாறு நீதிபதியிடம் இரு தரப்பு மீனவர்களும் கோரிக்கை விடுத்தனர்.

இருதரப்பும் இணங்கும் பட்சத்தில் நீரியல் வளத் திணைக்களத்துடன் கலந்துரையாடி மீன்பிடி தொழிலில் ஈடுபட முடியும் என நீதிபதி குறிப்பிட்டார்.

அவ்வாறு இணங்கும் பட்சத்தில் நாளையதினம் நகர்த்தல் பத்திரத்தை தாக்கல் செய்து மீன்பிடிப் பதற்கான அனுமதியை பெற்றுக் கொள்ளுமாறும் நீதிபதி அறிவித்தார். அத்துடன் நீதிமன்ற தடையுத்தரவை மீறி சிங்கள மீனவர்கள் மீன்பிடிப்பது குறித்து கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் சார்பில் நீதிமன்றத்தில் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இது குறித்து ஆராயுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதிபதி, இந்த வழக்கை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்தி வைப்பதாக அறிவித்தார்.(2-5-281)

## வவுனியா விவசாயிகளின் பயிர்ச் சிகிச்சை முகாம்

(குருமன்காடு)

வவுனியாவில் விவசாயிகளின் நன்மை கருதி மரக்கறி மொத்த விற்பனை சந்தைக்கு முன்பாக பயிர்ச் சிகிச்சை முகாம் நேற்று முன்தினம் காலை இடம் பெற்றது.

அதிகாலை 5.30 மணிக்கு ஆரம்பமான பயிர்ச் சிகிச்சை முகாமில் பல விவசாயிகள் தமது விவசாய உற்பத்தி பொருட்களை நேரடியாக சிகிச்சை முகாமிற்கு கொண்டு வந்து அவற்றுக்கு ஏற்பட்டுள்ள நோய்த் தாக்கத்திற்கான தீர்வு மற்றும் பல்வேறு விடயங்கள் தொடர்பாக விவசாயத் திணைக்கள அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டனர்.

மரக்கறி மொத்த வியாபார சந்தைக்கு வரும் விவசாயிகளை அடிப்படையாக கொண்டு இடம்பெற்ற இப் பயிர்ச்சிகிச்சை முகாமானது நோய்த்தாக்கங்களால் விவசாயிகளுக்க ஏற்படும் பொருளாதார நட்டத்தினை குறைப்பதற்கு ஏதுவாக அமையும் என வவுனியா பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் தெரிவித்திருந்தார். (2-5-250)

# பாரம்பரிய இறங்குதுறையை கையளிக்காவிடின் தொடர் போராட்டங்களில் ஈடுபடவுள்ளோம்

## கொக்கிளாய் தமிழ் மீனவர்கள் எச்சரிக்கை



கொக்கிளாயில் தமிழ் மீனவர்களின் வாழ்வுடைமையை தட்டிப்பறித்து தாரை வார்க்க கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் துணையாக உள்ளதை அவதானிக்க முடிகின்றது என வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் துரைராசா ரவிகரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

1984 ஆம் ஆண்டு நாயாற்றுக்கு தெற்கே இருந்த கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அரசாங்கத்தின் வெளிப்படையான அறிவித்தல் மூலம் வெளியேற்றப்பட்டனர்.

இதன்போது கொக்கிளாய் ஊர்மக்களும் வெளியேற்றப்பட்டனர். இவ்வாறு தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டு மக்களற்ற வெற்று இடமாகக் காணப்பட்ட கொக்கிளாய் பிரதேசத்தில் சிங்களக் கரைவலை உரிமையாளர்கள் இராணுவத்தினதும் கடற்றொழில் நீரியல் வளத்துறைத்திணைக்களத்தின் இசைவுடனும் தமிழருக்கு சொந்தமான கரைவலைப் பாடுகளில் கரைவலைத்தொழிலில் ஈடுபட்டனர்.

இவர்கள் திருகோணமலை மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத்திணைக்களத்தினால் உத்தியோக பூர்வமாக நிர்வகிக்கப்பட்டனர்.

இவ்வாறு மக்களற்ற வெற்றிடமாக காணப்பட்ட கொக்கிளாயில் கரைவலை நடவடிக்கைகளில் ஈடுபட்ட சிங்கள கரைவலை உரிமையாளர்கள் படகுகளில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் தமிழ் மீனவர்களால் இறங்கு துறையாக பயன்படுத்தப்பட்டு வந்த இடத்திலும் அத்துமீறிய கரைவலை வளைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

2010 இல் தமிழ் மக்கள் கொக்கிளாயில் மீள்குடியேற்றப்பட்டனர். இந்நிலையில் இங்கு மீள்குடியேறிய தமிழ் மீனவர்கள் தங்கள் மீன்பிடி நடவடிக்கைக்காக தங்கள் பாரம்பரிய இறங்கு துறையை பயன்படுத்த முயன்றபோது இவ் இறங்குதுறையில் கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களத்தின் இசைவுடன் அத்துமீறி கரைவலையை வளைத்து வந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் இம்மக்களை அச்சுறுத்தி துரத்தியதால் இம்மக்கள் தங்கள் வாழ்வுடைமையை இழந்து தமது அன்றாட உணவிற்கு தவிக்கின்றனர்.

இதனை அவதானித்த கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் தமிழ் மக்களின் பாரம்பரிய இறங்குதுறைப் பிரதேசத்தை உத்தியோக பூர்வமாக மீன்பிடி இறங்கு துறையாக அறிவித்து கடிதம் ஒன்றை இத்தமிழ் மீனவர்களுக்கு வழங்கி இருந்தார்.

இதனால் தமிழ் மீனவர்களால் தமது வாழ்வுடைமைத்தொழிலை தொடர முடிந்தது. இதனைப் பொறுத்துக் கொள்ளமுடியாத பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நபர் கடற்றொழில் நீரியல் வளத்துறைத்திணைக்களத்தில் முறையிட்டார்.

இதனையடுத்துகடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பணிப்பின்படி தமிழ் மீனவர்களுக்கு எதிராக நீதிமன்றில் திணைக்களத்தால் வழக்குத் தொடரப்பட்டது.

இவ்வழக்கின் அடிப்படையில் கொக்கிளாயில் உள்ள பத்துப்பாடுகளையும் அளவிடுவதற்காக நீதிமன்றம் உத்தரவிட்டதன் அடிப்படையில் கடந்த மாதம் 18 ஆம் திகதியில் நில அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நடவடிக்கைகளின் போது இக் கரைவலைப் பாடுகளின் முன்னை நாள் உரிமையாளர்களான தமிழ் மக்கள் தமது பாடுகள் அமைந்திருந்த இடங்களை அடையாளம் காட்டினார்கள்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகப்பணியாளர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோரும் இவ்விடங்கள் என்பதை உறுதிப்படுத்தினார்கள்.

இருந்தபோதும் நீரியல் வளத்துறைத்திணைக்களம் இதனை கருத்தில் கொள்ளவில்லை. தமிழ் மக்களின் இறங்குதுறை அமைந்துள்ள இடம் உள்ளடங்கலான இடத்தையே கரைவலைப்பாடுகள் அமைந்துள்ள இடமென ஒரு தலைப்பட்சமாக சாதித்தனர்.

தமிழ் மீனவர்களின் இறங்கு துறையை பறித்து சிங்கள மீனவர்களுக்குக் கொடுக்க முனைகின்ற இத்திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு நல்லாட்சி அரசு ஒப்புதலளித்திருப்பது மிகவும் கவலை தருவதாக அமைகின்றது. ஆதலால் தமிழ் மக்களின் பாரம்பரிய இறங்குதுறை தமிழ் மக்களிடம் கையளிக்கப்படாவிட்டால் எதிர்வரும் காலங்களில் இது தொடர்பாக அந்த மக்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபடவுள்ளதாக ரவிகரன் தெரிவித்தார்.. (2-5)




# கிளிநொச்சி பிரதேச செயலக பிரிவுகளில் நடமாடும் சேவை

## 19 தொடக்கம் 31 வரை

(பூநகரி)

''நிலமெஹர'' ஜனாதிபதி மக்கள் சேவை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் ஏற்பாட்டில் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 31 ஆம் திகதி வரை நல்லாட்சி அரசின் வேலைத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பிரதேச செயலக பிரிவுகளில் நடமாடும் சேவையொன்று நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் பங்கேற்று பயன்பெறுமாறு சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சரினால் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இக் கடிதத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்தம் வழங்கப்படும் மூவாயிரம் ரூபா கிடைக்கப்பெறாதவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளதுடன் தேசிய ஆள் அடையாள அட்டை விண்ணப்பித்து உடன் பெற்றுக் கொள்ளல் , காணி உரிமைப் பத்திரம் இல்லாதவர்கள் உரிமைப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளல், இதுவரை விடுவிக்கப்படாத காணிகள் குறித்த முறைப்பாடுகள், வீட்டுத்திட்டம் கிடைக்காதவர்களுக்கு உடன் வீட்டுத்திட்டம் கிடைக்க நடவடிக்கை, கண் பரிசோதித்து மூக்குக் கண்ணாடி வழங்கல் ஆகியவை நடைபெறவுள்ளன.

மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர்- 011 218 6056, 011 218 7263 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு நடமாடும் சேவை இடம் பெறும் இடங்கள் பற்றி அறிந்து கொள்ள முடியுமென அவர் அறிவித்துள்ளார். (2-5-84)



கிளி/சோரன்பற்று சி.சி.த.க. பாடசாலையில் கல்வி பயின்று வருகின்ற நிமலராசா் பம்சிகா என்ற மாணவி கிளிநொச்சி மாவட்ட இளையோர் சதுரங்க கோட்டியில் மாவட்டத்தில் 8 வயதுப் பிரிவில் மூன்றாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்கு சென்றுள்ளார். (2-5)

## காணி உரிமையாளர்களினால்

# கடிதங்கள் எமக்கு கையளிக்கப்பட்டால் மட்டுமே அணைக்கட்டின் கீழாக பாதை அமைக்க முடியும்

## துணுக்காய் பிரதேச செயலாளர் தெரிவிப்பு

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள உயிலங்குளம், தென்னியன்குளம், கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம் ஆகிய கிராமங்களுக்கு செல்லும் துணுக்காய்- அம்பலப்பெருமாள் குளம் வீதியில் உயிலங்குளம் கிராமத்தின் ஊடாக செல்லும் உயிலங்குளம் அணைக்கட்டின் மீதான 750 மீற்றர் தூர வீதியானது மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதால், அணைக்கட்டின் கீழாக ஓர் பாதையை அமைத்துத் தர வேண்டும் என பாதிக்கப்பட்டுள்ள கிராம மக்கள், கிராமமட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இணைந்து கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள உயிலங்குளம், தென்னியன் குளம், கோட்டை கட்டிய குளம்,அம்பலப்பெருமாள் குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் 650 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 387 பேர் வாழ்கின்றனர்.

இந் நிலையில், எமது கிராமத்திற்கான போக்குவரத்தானது, பிரதான வீதியிலுள்ள உயிலங்குளத்தின் ஆணைக்கட்டின் மேலாகவே இடம்பெறுகின்றது.

மழை காலங்களில் இக் குளக்கட்டின் ஊடான வாகனப் போக்குவரத்து சேவைகள் எவையும் மேற்கொள்ள முடியாது.

இவ்வாறு பயணிப்பதும் ஓர் ஆபத்தான பயணமாகவே இருக்கும். ஏனெனில் அணைக்கட்டின் மீது குளத்திலுள்ள முதலைகள், விச ஜந்துகள் போன்றவை பாதையில் காணப்படும்.

இதனைத் தாண்டி பயணித்தால் ஒடுங்கிய அணைக்கட்டில் இருந்து சறுக்கி வீழ்ந்து விபத்துக்குள்ளாகும் சம்பவங்கள் அதிகம் நடைபெற்றுள்ளது.

இக் காலப்பகுதியில் முதியவர்கள், சிறுவர்கள், பெண்கள், பாடசாலை மாணவர்கள்எனப்பலரும் போக்குவரத்தை தவிர்க்கும் நிலைமையே ஏற்படுகின்றது.

எனவே எமது கிராமங்களின் நிலைமையைக் கருத்தில் கொண்டு இக் குளக்கட்டின் அருகில் ஓர் வீதியை அமைத்துத் தருவதற்கு துறை சார்ந்த அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த பிரச்சினை தொடர்பாக உயிலங்குளம், தென்னியன் குளம், கோட்டை கட்டிய குளம், அம்பலப்பெருமாள்குளம் ஆகிய கிராம மக்கள் விடுத்துள்ள கோரிக்கை தொடர்பில் துணுக்காய் பிரதேச செயலாளர் இ.பிரதீபனிடம் தொடர்பு கொண்டு வினவியபோது,

மேற்படி கிராமத்திற்கான பாதையானது உயிலங்குளம் அணைக்கட்டின் மீதாகவே நீண்டகாலமாக நடைபெற்று வருகின்றது.

இதனால் இந்தப் பகுதி மக்கள் பல இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பில் பல தடவை எமது பிரதேச மட்டத்திலான அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

இந்த அணைக்கட்டின் கீழாக ஓர் பாதையை அமைத்துக் கொடுப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்ட நிலையில், குளக்கட்டின் கீழ் உள்ள மக்களுக்குச் சொந்தமான வயல் நிலத்தின் ஊடாக ஓர் புதிய பாதை அமைப்பதற்கு 2015 ஆம் ஆண்டில் பூர்வாங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டது.

இருப்பினும் இந்தப் பகுதியில் காணப்படும் வயல் நிலங்கள் 27 பொது மக்களுக்குச் சொந்தமாக காணப்பட்டது. அவ்வாறு காணப்படும் வயல் நிலத்தின் 5 காணி உரிமையாளர்கள் தமது வயற் காணியில் குறிப்பிட்ட சில மீற்றர் தூரத்திற்கு விட்டுத்தர மறுத்து விட்டனர்.

இவ்வாறு விட்டுத்தர மறுக்கும் காணியை பிரதேச செயலாளர் என்ற வகையில் என்னால் கையகப்படுத்த முடியவில்லை. காரணம் அவை உறுதிக் காணிகளாக இருப்பதால் ஆகும்.

இதனால் இந்த காலப் பகுதியில் அந்த வேலைத் திட்டத்தினை செய்ய முடியாது தடை ஏற்பட்டுள்ளது.

தற்போது அந்தப் பணம் வேறு திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு விட்டமையினால் இனி மீண்டும் பணத்தைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

அவ்வாறு பணம் கிடைத்தாலும், உரிமையாளர்கள் நிலங்களை விடுவித்துத்தர சம்மதக் கடிதங்களை கையளித்தால் மட்டுமே இந்த பிரச்சினையைத் தீர்க்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-5-15)

மாமியாருக்கு பல்லு பிடுங்கிய அன்று மருமகள் முறுக்குச் சுட்டாளாம்.

– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பௌத்த மகாநாயக்கர்கள் ஒற்றுமைப்படுத்தி வைப்பர்

உலகில் ஓர் இனம்; இனத்தால், மதத்தால், நிறத்தால், மொழியால் பாதிக்கப்பட்டு உரிமையைப் பெற முடியாமல் தவிக்கிறது எனும் போது அந்த இனத்தில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதைக் காணமுடியும்.

குறிப்பாக அந்த இனத்தின் தலைமை பிரிவுபட்டு நிற்கும் அல்லது விலைபட்டுப் போயிருக்கும்.

தவிர அந்த இனத்துக்குள்ளேயே கருத்து மோதல்களும் உட்கட்சிப்பூசல்களும் தலைவிரித்தாடும். சரியான திட்டமிடல்கள், அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் எதுவும் இருக்காது.

கிடைத்த அதிகாரங்களையும் தக்கமுறையில் பயன்படுத்தாமல் எல்லாம் வீணடிக்கப்படும். மக்களை ஏமாற்றிப் பிழைப்பதில் ஒரு பகுதி ஆர்வத்தோடு செயற்படும். எங்கும் எதிலும் நிர்வாக மந்தம் தலைவிரித்தாடும்.

வளங்கள் உச்சப் பயனின்றி வீணாகிப் போகும், கலாசாரப் பண்பாட்டு விழுமியங்கள் சிதைந்து சின்னாபின்னமாகி இன அடையாளம் இல்லாததாகும்.

குறித்த இனத்துக்குள் இருக்கக்கூடிய மதங்கள் ஒன்றை ஒன்று விழுத்தி தத்தம் மதத்தை முன்னிலைப்படுத்தும் முயற்சி கடுமையாக நடக்கும்.

மதத் தலைவர்கள் ஒன்றுபட்டோ அல்லது ஒற்றுமைப்படுத்தவோ முயலாமல் தத்தம் மதக் கருத்துக்களை – மதமாற்றங்களை மேற்கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பர்.

இத்தகைய பலவீனங்களும் பாதிக்கப்பட்ட இனத்தை நிர்மூலமாக்கி சன்னதம் ஆடும்.

இந்நிலையில் அதிகாரம் செலுத்தும் இனத்திடமிருந்து உரிமை பெறுவதென்பது முடியாத காரியமே.

இவை உலக வரலாற்றில் உரிமையின்றி தத்தளிக்கும் மக்கள் குழுமத்திடம் இருக்கக்கூடிய அடிப்படை இயல்புகள்.

இந்த இயல்புகள் எங்கள் இனத்திடம் உள்ளதா? இல்லையா? என்பதைத் தமிழ் மக்களே தீர்மானிக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட குறைபாடுகள் இருந்தால் அதை நேர்மையோடு ஏற்று அக்குறைபாட்டை நிவர்த்திக்க முற்படுவதே பொருத்தம்.

எனினும் குறைபாட்டை நிவர்த்திப்பது யார்? அதை பொறுப்போடு நின்று செய்து முடிப்பது யார்? என்ற வினாக்கள் எழவே செய்யும்.

எதுவாயினும் எங்கள் இனம் பற்றி நாம் இவ்விடத்தில் எதனையும் குறிப்பிடாமல் விட்டாலும் பௌத்த சிங்கள ஆட்சி; அவர்களின் திட்டமிடல்கள் பற்றி நாம் ஒரு கணம் சிந்தித்தால்,

வட புலத்தில் இருக்கக்கூடிய படையினர் இப்போது வட மாகாணத்தில் வெசாக் பண்டிகைக்கான கூடுகள் மற்றும் பௌத்த மத வரலாற்றுத் தளங்களை காட்சிப்படுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

ஆயுதம் ஏந்தி நாட்டைப் பாதுகாக்கின்ற படையினர் சமயச் சடங்குகளில் தங்களை ஈடுபடுத்துகின்றனர் என்றால் அது இலங்கையில் மட்டுமே நடப்பதாக இருக்கும்.

ஆக, இங்குதான் பௌத்த ஆதிக்கம் சிங்கள மக்களை ஒன்றுபடுத்தி – ஒற்றுமைப்படுத்தி தனது இனம், தனது மதம் என்ற நினைப்போடு வியூகம் அமைக்கிறது.

இப்போது கூட; நல்லாட்சி பலவீனம் எனக் கண்டால், ஜனாதிபதி மைத்திரியும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் ஒற்றுமைப்படுத்துவதில் மகாநாயக்கர்கள் கடுமையாகப் பாடுபடுவர்.

ஏனெனில் இலங்கையின் வரலாற்றில் சிங்கள அரசர்களை ஒற்றுமைப்படுத்துவதில் மகாநாயக்கர்களே முக்கிய வகிபங்கை கொண்டிருந்தனர் என்பதை நாம் அறிய முடியும்.

# சட்டவிரோத மணல் வியாபாரிகளுடன் பொலிஸாருக்கு தொடர்புள்ளதாக பொலிஸ் அத்தியட்சகர் குற்றச்சாட்டு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கச்சாய், கெற்பேலி, பாலாவி போன்ற பகுதிகளில் சட்டவிரோத மணல் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களுடன் பொலிஸாருக்கு தொடர்புள்ளதாக தென்மராட்சி பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டி.எச்.எஸ்.துசிதகுமார தெரிவித்துள்ளார்.

மணல் அகழ்வு தொடர்பான கலந்துரையாடல் நேற்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கெற்பேலி வீரபத்திரர் சனசமூக நிலையத்தில் இடம் பெற்ற போதே இவ்வாறு தெரிவித்தார்.

இப்பகுதியில் தொடர்ச்சியாக மணல் அகழப்படுவது என்னால் அவதானிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளரினால் தன்னுடைய பிரதேச எல்லைக்குள் பொது மக்களின் அத்தியாவசிய தேவை கருதி கனிய வள கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதியை வழங்க முடியும்.

ஆனால் அவ்வாறு அனுமதி பெறாமல் இப் பகுதிகளில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் வியாபாரத்தில் ஈடுபடுவதாக நான்கு ஐந்து நபர்களுடைய பெயர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அவர்கள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

இப் பகுதிகளில் அனுமதியின்றி தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழப்படுகின்றது. பிரதேச செயலாளரால் வீட்டுத்திட்ட பயனாளிகளின் நலன் கருதி வழங்கப்படும் அனுமதிப் பத்திரத்தினைப் பயன்படுத்தியும் சட்ட விரோத மணல் வியாபாரத்தில் சிலர் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறான சட்டவிரோத மணல் வியாபாரிகளுடன் பொலிஸ் அதிகாரிகள் சிலர் இணைந்து செயற்படுகின்றனர். அவர்கள் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மூலம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவரகள் மீது சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும் சட்ட விரோதமாக மணல் அகழ்வில் யார் ஈடுபட்டாலும் பிரதேச செயலரிடமோ அல்லது மாவட்ட அரச அதிபரிடமோ முறையிடமுடியும்.

பொலிஸ் நிலையத்திலும் முறையிடலாம். இவ்வாறு முறையிட்டால் நீதிமன்றத்தினூடாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார். (இ-89)

# சித்திரா பௌர்ணமியன்று விடுமுறை வழங்குங்கள்

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் தொழிலாளர்களுக்கு சித்திரா பௌர்ணமியன்று விடுமுறை வழங்கும் படி மன்ற செயலாளர் கலாநிதி வை. சிவராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் சித்திரா பௌர்ணமி மற்றும் ஆடி அமாவாசை ஆகிய தினங்களில் தொழிலாளர்கள் தமது தாய் தந்தையர்க்கு பிதிர்க் கடன் ஆற்ற ஏற்ற விதத்தில் தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்கி ஒத்துழைக்குமாறு அவர் தெரிவித்தார்.(இ-7)

# மஹோற்சவம்

இருபாலை தென் கோவை அருள்மிகு கற்பகப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை 8 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சப்பறத்திருவிழா 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் தேர்த்திருவிழா 22 ஆம் திகதி திங்கட்கிழமையும் தீர்த்தத்திருவிழா 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் நடைபெறவுள்ளது. (இ

# நினைவுநாள்

(யாழ்ப்பாணம்)

மறைந்த அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவர் விசுவநாதர் கைலாசபிள்ளையின் நினைவு நாள் இன்று ஞாயிற்றுக்கிழமை அராலி சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று தொடர்ந்து அவரது உருவப் படம் சிந்தாமணி விநாயகர் ஆலயத்தின் அன்னதான மண்டபத்தில் வைக்கப்பட்டு தொடர்ந்து அராலி தெற்கு சைவத்தமிழ் இளைஞர் மன்றத்தினரால் விசேட அஞ்சலி கூட்டம் நடத்தப்படும். (இ

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக திங்கள் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5மணி வரை யாழ்.பிரதேசத்தில நாவற்குழி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, தனங்கிளப்பு, கோகிலாக்கண்டி, கேரதீவு வீதி, அறுகுவெளி ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் அடம்பனிலிருந்து பாப்பாமோட்டை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)




சென்றது இலங்கை மேல்
செல்வேதன் சீற்றத்தால்
கொன்றது இராவணனைக்
கூறுங்கால்- நின்றதுவும்
வேயோங்கு தண்சாரல்
வேங்கடமே விண்ணவர்தம்
வாயோங்கு தொல்
புகழான் வந்து
-பூதத்தாழ்வார்.

வானவர்களால் வணங்கப்படும் பெருமை மிக்க வேங்கடவன், இராமனாக அவதாரமஎடுத்த போது மாறு வேடத்தில் வந்து சீதையைக் கவர்ந்து சென்ற கபடன் இராவணனைப் போல அல்லாது மனித உருவில், நேர்வழியில் இலங்கைக்குச் சென்று மனைவியை மீட்கும் பொருட்டு மனித அவதாரத்துக்கே உரிய கோபத்துடன் இராவணனுடன் போரிட்டு அவனைக் கொன்றான்.

அப்படித் தான் எடுத்த அவதாரங்களின் போது தன்னைக் காணமுடியாதவர்களுக்காக, தான் வழங்கும் அருளை எல்லோரும் அடைந்து அனுபவிக்க வேண்டும் என்ற காரணத்திற்காக அவன் வந்து நிற்பதோ, மூங்கில்கள் ஓங்கி வளர்ந்து மிகவும் குளிர்ச்சி பொருந்திய திருமலையே ஆகும். (தொடரும்)

# மோதலின் பிரதான நபர் பொலிஸாரிடம் சரண்

## 14 நாட்கள் விளக்கமறியல்

துன்னாலையில் இடம் பெற்ற கோஷ்டி மோதலின் பிரதான சந்தேக நபர் பருத்தித்துறை நீதிமன்றில் சரணடைந்ததையடுத்து அவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் நளினி கந்தசாமி உத்தரவிட்டார்.

துன்னாலை வேம்படிப் பகுதியில் கடந்த மாதம் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் சிறுவர்கள் உட்பட 6 பேர் படுகாயம்டைந்தனர். இதில அப்பகுதியைச் சேர்ந்த பிரதான சந்தேக நபர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் தப்பியோடியிருந்தார். இதனையடுத்து பிரதிப் பொலிஸமா அதிபரின் பணிப் பிற்கமைய காங்கேசன்துறை பிராந்தியப் பொலிஸார் அழைக்கப்பட்டு துன்னாலைப் பகுதியில் தேடுதல் நடத்தப்பட்ட போதும் அவரின் மனைவியையே பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அச்சந்தேக நபர் சட்டத்தரணி மூலம் பருத்தித்துறை நீதிமன்றில் சரணடைந்தார். (இ-60)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**பெண்கள் ஏன் கால்மேல் கால்போட்டு அமரக் கூடாது?**




பெண்கள் என்றால் அடக்க ஒடுக்கத்துடன் இருக்க வேண்டும் என்று பழைய பாட்டிமார்கள் சொல்வார்கள். வாசற்படியில் உட்காரக் கூடாது, கால்மேல் கால் போட்டு உட்காரக்கூடாது போன்ற விடயங்களைப் பெண்கள் அறிந்திருக்க வேண்டும். கால்மேல் கால் போட்டு அமருவது அகங்காரத்தின் அடையாளமாகும்.

பெண்கள் அவ்வாறு அமர்ந்திருப்பதைப் பார்த்தால் அவளை திமிர் பிடித்தவள், அகங்காரி, அடக்க ஒடுக்கம் இல்லாதவள் என்றெல்லாம் கூறுவார்கள்.

பெண்கள் அவ்வாறு செய்வது நல்ல பழக்கமல்ல. அதனால் சில தீமைகளும் உண்டு.

தினமும் அவர்கள் கால் மேல் கால்போட்டு உட்காருவதால் அவர்களது கர்ப்பப்பை பாதிக்கும் வாய்ப்பு உண்டு என்பதை மறுக்க முடியாது. அடி வயிற்றில் வலி ஏற்பட்டு வாயுத் தொல்லையும் உண்டாகும். இந்தக் காலப் பெண்கள் கால்மேல் கால் போட்டு உட்காருவதை மரியாதையின அடையாளமாகக் கருதுகிறார்கள். (தொடரும்)

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III யாழ். சென்றல் முதலாவது வெற்றி



சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III சுற்றுப் போட்டிக்கு யாழ். நகரிலிருந்து இரு அணிகளை தெரிவு செய்வதற்கான தகுதி காண் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அந்த வரிசையில் 13ஆவது போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை (30.04.2017) ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் யாழ். சென்றல் அணி, மூளாய் விக்டோறி அணியை 6 இலக்குகளால் வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மூளாய் விக்டோறி அணி முதலில் துடுப்பெடுத்தாடிய போது 32 ஓவர்களில் சகல இலக்குகளையும்இழந்து 92 ஓட்டங்களை பெற்றது.

டானியல் - 19, கணேஸ் - 26, இன்பராசா - 14 ஓட்டங்களை பெற்றனர். பந்துவீச்சில் சுபாதீஸ் - 01, கிரிசாந் - 02, மதூஸன் - 02, சலிஸ்ரன், மில்லர், றஜீவ், வகஸன் - தலா - 01 இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் அணி 14.4 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 97 ஓட்டங்களை பெற்றது.

மதூஸன் ஆட்டமிழக்காது - 27, சலிஸ்ரன் ஆட்டமிழக்காது - 20 ஓட்டங்களை கைப்பற்றினர்.

பந்து வீச்சில் ஜங்கரன் - 02, சரத்குமார், பிரதீஸ் தலா - 01 இலக்கினை கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 8 ஆவது ஆண்டாக நடத்தும் சிறந்த கழக அணி தெரிவுக்கு (தரவரிசை பட்டியல்) யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 7.57 புள்ளிகளையும், மூளாய் விக்டோறி அணி 1.32 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன. (க)

# கே.சி.சி.சி வெற்றிக்கிண்ணம் ஜொனியன்ஸ் அபாரவெற்றி

கே.சி.சி.சி வெற்றிக்கிண்ணத்திற்காக கே.சி.சி.சி விளையாட்டுக் கழகம் 24ஆவது ஆண்டாக நடத்திவரும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக்கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் அரை இறுதிப் போட்டியில் யாழ். ஜொனியன்ஸ் அணி, ஸ்ரான்லி அணியை 130 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.



அண்மையில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். ஜொனியன்ஸ் அணி 29.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 200 ஓட்டங்களை பெற்றது.

கஜீவன் - 47, கிசாந்தீபன் - 12, சன்ஜயன் - 36, விதுஸன் - 25, மயூரன் - 12, டக்ஸன் ஆட்டமிழக்காது - 21, ஓட்டங்களை பெற்றனர்: கம்சி - 02, விதுஸன் - 04, கஜதீபன் - 03, சுரேஸ் - 01 இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 10.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 70 ஓட்டங்களை பெற்றது. சுதர்ஸன் - 15, சுசிகரன் - 16, பிரசாத் - 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

சன்சயன் - 07, அச்சுதன் - 02 இலக்குகளை கைபற்றினர். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 8 ஆவது ஆண்டாக நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு யாழ். ஜொனியன்ஸ் அணி 7.30 புள்ளிகளையும்ஸ்ரான்லி அணி 1.70 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன. (க)

# பற்றீசியன்ஸ்சை வீழ்த்தியது திருநெல்வேலி YMHA

சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III சுற்றுப் போட்டிக்காக யாழ். நகரில் இருந்து 2 அணிகளை தெரிவு செய்வதற்காக தகுதிகாண் போட்டி வரிசையில் 14ஆவது போட்டி 30.04.2017 அன்று நடைபெற்றது.

இதில் பற்றீசியனை வீழ்த்தி திருநெல்வேலி YMHA அணி 4 இலக்குகளால் வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 39 ஓவர்களில் 195 ஓட்டங்களை பெற்றது. அருனஜன் - 40, முனோஜ் - 43, கவாஸ்கர் - 44, திஸ்வநாதன் ஆட்டமிழக்காது 37 ஓட்டங்களை பெற்றனர். சன்ஜீவ் - 03, அஜன் - 03, டிசாந்தன் - 02. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய YMHA அணி 40 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 198 ஓட்டங்களை பெற்றது.

தேசிகன் - 11, மறிலன் - 44, துஸான் - 11, ராசேந்திரம் ஆட்டமிழக்காது, விஜயபாலன் - 15, அஜன் - 63, ஓட்டங்களை பெற்றனர். றோபேட் - 02, ஸ்பிறில்சின் - 02 இலக்குகளைக் கைப்பற்றினர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்

## இளங்கதிர் - ரெயின்போ வெற்றி



வல்வை விளையாட்டுக்கழக அனுமதியூடாக வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் வல்வை உட்பட்ட கழகங்களுக்கிடையில் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளை தற்பொழுது நடத்தி வருகின்றது.

போட்டிகள் நேற்று முன்தினம் தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. நடைபெற்ற முதலாவது போட்டியில் தீருவில் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இளங்கதிர் விளையாட்டுக்கழகம் மோதியது. இந்த ஆட்டத்தில் இளங்கதிர் விளையாட்டுக்கழகம் பெற்றிபெற்றது.

இரண்டாவது போட்டியில் சைனிங்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ரெயின்போ விளையாட்டுக்கழகம் மோதியது. இந்த ஆட்டத்தில் ரெயின்போ விளையாட்டுக்கழகம் பெற்றி பெற்றது. (க)

# அல்வாய் விளையாட்டு விழாவின் கிரிக்கெட் இறுதிப்போட்டி இன்று

## டயமன்ஸ் – மைக்கல் பலப்பரீட்சை





பிரித்தானியா, சுவிட்சர்லாந்து ஒன்றியங்களின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் அல்வாய் விளையாட்டு விழாவின் இறுதிப்போட்டிகளும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் யாழ். பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் கி.சண்முகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கிரிக்கெட் இறுதிப்போட்டியில் யாழ். மாவட்டத்தில் முன்னணி கழகங்களான வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் அணி மோதவுள்ளது .

வதிரி டயமன்ஸ் அணி, அல்வாய் பாரதி, மாலுசந்தி மைக்கல் பி, குரும்பகட்டி உதயசூரியன் அணிகளை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

மாலுசந்தி மைக்கல் அணி, திக்கம் இளைஞர், காந்தியூர் இளம் பிறை, அல்வாய் இளைஞர் அணிகளை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க)

## "யாழின் நட்சத்திர உதைபந்தாட்டம்"

# குருநகர் பாடும்மீன் அபார வெற்றி



உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக்கழகம் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் யாழின் நட்சத்திரம் உதைபந்தாட்ட தொடரின் சுப்பர் 8 ஆட்டத்தின் (05.05.2017) அன்று நடைபெற்ற போட்டியில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து மல்லாகம் நியூ வாரியஸ் அணி மோதியது.

போட்டியின் ஆட்டநேர முடிவில் 6:0 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் அணி வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக கீதன் தெரிவுசெய்யப்பட்டார். (க)

# அரசை...

க்கப்பட்ட அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு தொழிற்சங்களுக்கு இடமளிக்கப்படமாட்டாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேவையென்றால் எதிர்வரும் தேர்தலின் போது விருப்பங்களை முன்வைத்து அரசாங்கத்தை மாற்றக்கூடிய வாய்ப்புள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பதுளையில் நேற்று இடம்பெற்ற கட்சி செயற்பாட்டு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (செ-11)

# மீனவர் பிரச்சினை...

காண கடற்தொழிலாளர் இணையம் நேற்றைய தினம் யாழ்.ஊடக அமையத்தில் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தது. இதில் இணையத்தின் சார்பில் கலந்து கொண்டு பேசிய இணையத்தின் தலைவர் மு.ஆலம், செயலாளர் என்.வி.சுப்பிரமணியம் மற்றும் உப தலைவர் ஜே.பிரான்சிஸ் ஆகியோரே மேற்கண்டவாறு கூறியுள்ளனர்.

இதன்போது மேலும் அவர்கள் குறிப்பிடுகையில்.

கடந்த மாதம் 5ஆம் திகதி கொழும்பில் மத்திய கடற்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவை சந்தித்து கலந்துரையாடியிருந்தோம். இதன்போது வட மாகாண கடற்தொழிலாளர் இணையத்தின் சார்பில் 6 அம்ச கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம். அதில் இந்திய இழுவை படகுகளால் அழிக்கப்பட்ட வட மாகாண மீனவர்களின் கடற்தொழில் உபகரணங்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படவேண்டும்.

அதேபோல் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளை விடுவித்தால் அவை மீண்டும் எமது கடல் எல்லைக்குள் வராது என்பதற்கான உத்தரவாதம் வழங்கப்படவேண்டும் என்பன உள்ளடங்கலாக 6 நிபந்தனைகளை முன்வைத்திருந்தோம். இந்த நிபந்தனைகளுக்கு எமக்கு பதில் வழங்கப்படவில்லை.

அதே சமயம் வடமாகாண கடற்தொழிலாளர்களின் ஒப்புதல் பெறப்படாமல் இந்திய இழுவைப் படகுகள் விடுவிக்கப்படாது. என மத்திய கடற்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர எமக்கு கூறியிருந்தார். அதனை தொடர்ந்து நாடாளுமன்றத்திலும் அதே கருத்தை கூறியிருந்தார்.

இந்நிலையில் இப்போது மத்திய கடற்தொழில் அமைச்சரின் கருத்தில் சிறிது மாற்றம் தெரிகிறது. அதற்கு காரணம் அரசாங்கத்திலிருந்து அல்லது வெளியிலிருந்து அமைச்சருக்கு அழுத்தங்கள் கொடுக்கப்படுகிறது என நாங்கள் நினைக்கிறோம். இதற்கிடையில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் இலங்கைக்கு இரு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு வருகை தரவுள்ள நிலையில் இலங்கை வரும் இந்திய பிரதமர் இந்திய இழுவைப் படகுகளையும், இந்திய மீனவர்களையும் விடுவிப்பதற்கான அழுத்தத்தை கொடுக்க கூடாது. அவர் இந்திய-இலங்கை மீனவர் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான பதிலையே வழங்கவேண்டும். இந்திய மீனவர்களால் வட மாகாண மீனவர்கள் மிக பெரியளவில் அழிவுகளை சந்தித்திருக்கும் நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவொரு இழப்பீடும் வழங்காமல் பரிகாரம் செய்யாமல் பாதிப்பை உண்டாக்கியவர்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதை வட மாகாண கடற்தொழிலாளர்கள் பார்த்து கொண்டிருக்கப்போவதில்லை.

வட மாகாண மீனவர்கள் 30 வருடம் போரினால் பாதிக்கப்பட்டு அந்த பாதிப்புக்களிலிருந்து மீண்டு எழ இயலாமல் இருக்கும் நிலையில் மீண்டும் மீண்டும் எங்களை தாழ்த்தும் செயற்பாட்டை யாரும் மேற்கொள்ள கூடாது. மேலும் வட மாகாண கடற்தொழிலாளர்களின் ஒப்புதல் பெறாமல் கைப்பற்றப்பட்ட இந்திய இழுவைப் படகுகள் விடுவிக்கப்படுமாக இருந்தால் வட மாகாணத்தில் மட்டுமல்லாமல் தெற்கிலும் பாரியளவிலான போராட்டங்களை நிச்சயம் நடத்துவோம். அந்த போராட்டம் தீர்வு கிடைக்கும் வரையிலான போராட்டமாக அமையும் என அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (செ-4)

# 22 கிலோ கஞ்சா...

கையளித்துள்ளனர்.

இவை 10 பொதிகளில் பாதுகாப்பாக பொதி செய்யப்பட்டு கடற்கரை மணலில் புதைத்து வைக்கப்பட்டிருந்தது. இச்சம்பவத்தில் எந்த சந்தேக நபர்களும் கைது செய்யப்படவில்லை என தெரிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-60,312)

# சாகர, நந்திமித்ர...

ப்பு கப்பல்களான சாகர மற்றும் நந்திமித்ர கப்பல்கள் சிங்கப்பூர் பயணமாகியுள்ளன.

குறித்த கண்காட்சியின் போது யுத்தக் கப்பல் தொடர்பான சர்வதேச கடல் பாதுகாப்பு, சர்வதேச கடல் பொறியியலாளர் மாநாடு இடம்பெறவுள்ளமையினால், அதில் பங்கு கொள்வதற்காக 34 அதிகாரிகளும் 290 கடற்படை வீரர்களும் சென்றுள்ளனர்.

மேலும் நேற்றுமுன்தினம் கொழும்பிலிருந்து சென்றுள்ள குறித்த கப்பல்களானது எதிர்வரும் 12ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதி வரை சிங்கப்பூர் துறைமுகத்தில் நிறுத்தப்படவுள்ளதாக இலங்கை கடற்படை தகவல்கள் தெரிவித்துள்ளன. (செ-11)

# சுவர் வீழ்ந்து...

புர பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி சம்பவத்தில் படுகாயமடைந்த குழந்தை அம்பாறை பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை. பலனின்றி உயிரிழந்துள்ளதாக மருத்துவமனை பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, உயிரிழந்த குழந்தையுடன் மேலுமொரு குழந்தை அருகில் காணப்பட்டபோதும் காயங்கள் எதுவுமின்றி தப்பித்துள்ளது.

இந்த தடுப்புச்சுவர் புதிதாக கட்டப்பட்டுள்ள நிலையில் இவ் அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (செ-11)

# வடக்கிலிருந்து...

வதனால் இராணுவத்தை தொடர்ந்தும் வடபகுதியில் குவித்து வைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக திறன் விருத்தி அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை தொடர்பான பேச்சுக்கள் இடம்பெறுகின்ற இந்த சூழ்நிலையில் புதிய பயங்கரவாத தடுபபுச் சட்டம் தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கடந்த அமைச்சரவை கூட்டத்தின்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை விடவும் பன்மடங்கு அபாயமானதாக தமிழர் தரப்பால் கருதப்படுகின்ற உத்தேச பயங்கரவாத தடுப்புச் சட்டம் தொடர்பான வரைபு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டது.

மிக விரைவில் இது யோசனையாக நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் இது தொடர்பான தெளிவுபடுத்தலை கடந்த ஆட்சியில் மனித உரிமைகள் அமைச்சராக பதவி வகித்த தற்போதைய அரசின் திறன் அபிவிருத்தி அமைச்சர் மகிந்த சமரசிங்க சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கினார்.

அதில் அவர் குறிப்பிடுகையில்,

புதிய பயங்கரவாத தடுப்புச் சட்டம் நீண்டகாலமாக பேசப்பட்டுவந்ததொரு விடயமாகும். இது அவசரமானது அல்ல. ஜீ.எஸ்.பி. பிளஸ் பேச்சு இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட யோசனையிலும் இது உள்ளது.

30 வருடங்கள் யுத்தம் செய்து இந்த உலகத்திலேயே கொடிய பயங்கரவாதத்தை அழித்துள்ள சந்தர்ப்பத்தில் மீண்டும் அது தலைதூக்காமலிருக்கும் வகையிலான சட்டதிட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

எமது பாதுகாப்பு படையை முழுமையாக கீழ்ப்படுத்திவிட முடியாது. அதனால்தான் அந்தப் பிரதேசங்களில் இராணுவத்தினரை தொடர்ந்தும் நாங்கள் தங்க வைத்திருக்கின்றோம். உடனடியாக பின்னகர்த்தி அனைத்தையும் செய்துமுடித்து விட முடியாது.

நல்லிணக்கத்தை பரந்துபட்டதாக மேற்கொள்ள சில காலம் எடுக்கும் என்பதையும் நாம் அறிவேம் என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார். (செ-11)

# அரசின் வருமானம்...

யை பார்க்கின்ற போது மிகவும் அபாயகரமான நிலையிலேயே உள்ளது. நிகர தேசிய வருமானத்தின் வீதத்திற்கு அமைய 10% வரி வருமானமே உள்ளது.

உண்மையில் அரசாங்கம் வரி வருமானத்தினை அதிகரிக்க வேண்டும். முக்கியமாக வரி வருமானங்களை ஈட்டுவது என்பது மட்டுமல்ல அவற்றை செலவழிப்பது எவ்வாறு என்பது தொடர்பிலும் சிந்திக்க வேண்டும்.

வரி திருத்தங்களை மேற்கொள்வதன் ஊடாக வருமானத்தை அதிகரிப்பதே ஒரு இலக்காகும். இதன்போது ஏழை சமூகத்துக்கு அவசியமான நிதி கிடைக்கும். ஆகவே இம்முறை தொடர்பில் கவலைப்படக்கூடாது.

இலக்கை அடைவதற்காக செலவு செய்ய வேண்டும். முதலீடுகளிற்கு முன்னுரிமை வழங்குவது இரண்டாவது விடயமாகும்.

வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் முதலீடுகளை மேற்கொள்ளல் மற்றும் தொழில் புரிபவர்களின் வருமானத்தினை அதிகரிப்பதனையும் முதலீடுகளின் ஊடாக மேற்கொள்ள வேண்டும்.

அரசாங்கத்தின் ஊடாக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாகவும் வெளிநாடு முதலீடுகளிற்கான சூழலை உருவாக்குவதன் மூலமும் இந்த இலக்குகளை சாத்தியப்படுத்திக் கொள்ளமுடியும் என உலக வங்கியின் உப தலைவர் தெரிவித்தார். (செ-11)

# சிறுவனுக்கு...

ளம் தெரியாதோரால் மர்ம ஊசி ஏற்றப்பட்டதாக கூறப்படும் சம்பவம் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த 11 வயது சிறுவனிடம் குருதி எடுப்பதாக தெரிவித்து நேற்று முன்தினம் முற்பகல் 10.30 அளவில் ஊசி ஏற்றப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் சிறுவனின் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து சிறுவன் கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக மருத்துவ பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை சிறுவனின் குருதி மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (செ-11)

# வாள்வெட்டு...

இதில் உடுவிலைச் சேர்ந்த ஆட்டோ சாரதியான உதயபாஸ்கரன் யூட் (வயது 30) என்பவரே வாள்வெட்டுக்கு இலக்கானவராவார்.

ஆட்டோவினை வாடகைக்கு அமர்த்துவதற்காக அழைப்பு விடுத்தே ஆட்டோ சாரதி மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸில் முறையிட்டதனைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-4,9,30)

# வடக்கு...

த்துறை திணைக்கள அதிகாரிகள் செயற்படுகின்றமையினால், தென்னிலங்கை மீனவர்கள் நீதிமன்றத்தின் தடை உத்தரவினையும் பொருட்படுத்தாமல் நடந்து கொள்ளும் நிலை உருவாகியுள்ளது என வடமாகாண கடற்தொழிலாளர் இணையம் குற்றஞ்சாட்டியுள்ளது.

வடமாகாணத்தில் இந்திய இழுவைப் படகுகள் மற்றும் தென்னிலங்கை மீனவர்களின அத்துமீறல்கள் தொடர்பாக நேற்று யாழ். ஊடக அமையத்தில் வடமாகாண கடற்தொழிலாளர் இணையம் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக குறித்த இணையம் மேலும் கூறுகையில்,

முல்லைத்தீவு கொக்கிளாய் பகுதியில் தமிழ் மீனவர்கள் இறங்குதுறை ஒன்றை அமைப்பதற்கு சிங்கள மீனவர்கள் தொடர்ச்சியான எதிர்ப்பினை தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் இறுதியாக நீதிமன்ற தடை உத்தரவையும் மீறி அவர்கள் கடற்தொழிலில் ஈடுபடுவதுடன் அரசாங்க அதிகாரிகளையும் அச்சுறுத்தும் பாணியில் நடந்து கொள்கின்றனர். இதற்கு கடற்தொழில் திணைக்களத்தின் அதிகாரிகள் கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டத்தில் உள்ளவர்கள் வரையில் சிங்கள மீனவர்களுக்கு ஆதரவாக உள்ளமையே காரணமாகும்.

கடந்த மாதம் 5ஆம் திகதி மத்திய கடற்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவை சந்தித்தபோது முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் சங்கத்தின் தலைவரும் வடமாகாண கடற்தொழிலாளர் இணையத்தின் பொருளாலருமான மரியராசா அங்குள்ள அதிகாரிகளுடன் மிக வாக்குவாதப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக சுட்டிக்காட்டியிருந்தார். அத்துடன். தமிழ். சிங்கள மீனவர்களையும். கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளையும் இணைத்து குழு ஒன்றை உருவாக்கி அனுமதி இல்லாமல் தங்கியுள்ள சிங்கள மீனவர்களை வெளியேற்ற அந்த கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

மேலும் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் பக்கச்சார்பாக நடந்து கொள்வதை நிறுத்தவும் நாங்கள் கேட்டிருக்கின்றோம். இவ்வாறான பக்கச்சார்பான செயற்பாடுகளினாலேயே பாரிய பிரச்சினைகள் எழுந்துள்ளன என வடமாகாண கடற்தொழிலாளர் இணையம் குறிப்பிட்டுள்ளது. (செ-4)

# ஆலயங்களை...

கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை இரவு, விநாயகபுரம் பத்திரகாளியம்மன் கோயிலின் மூலஸ்தானக் கதவு உடைக்கப்பட்டு, நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

இச் சம்பவம் தொடர்பாக ஆலயத் தலைவர், திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்நிலையில், பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தொலைபேசி தகவலையடுத்து கோமாரி கிராமத்தை சேர்ந்த விநாயகபுரம், கண்ணகிபுரம் கிரர்மங்களில் வசிக்கும் பிரதான சந்தேகநபர் பொலிஸாரினால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை விநாயகபுரத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையையடுத்து இரண்டாவது சந்தேகநபர் அட்டப்பளத்தில் வைத்து அன்றையதினம் மாலை கைது செய்யப்பட்டு விசாரணை செய்ததில், விநாயகபுரம் காளி கோயிலில் திருடப்பட்ட நகைகள், களுவாஞ்சிகுடி மகிலூர் கிராமத்தைச் சேர்ந்த பெண்ணிடம் கொடுத்து களுதாவளைப் பகுதியில் உள்ள நகைக் கடையில் அடகு வைக்கப்பட்டு, ஒரு இலட்சத்தி மூவாயிரம் ரூபாய் பணம் பெறப்பட்டமை தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து. நகை அடகு வைக்க உதவிய பெண்ணை, அக்கரைப்பற்று பிரதேசத்தில் வயல் காட்டில் வைத்துக் கைது செய்துள்ளதுடன், இவரிடம் இருந்து 25 ஆயிரம் ரூபா பணமும் பெறப்பட்டுள்ளது.

இவரின் தகவல் ஊடாக களுவாஞ்சிக்குடியில் உள்ள நகை அடகு பிடிக்கும் நிலையத்துக்குச் சென்று அடகு வைக்கப்பட்ட மூன்று மாலைகள், தாலிக் கொடி, அட்டியல் மற்றும் பதக்கம் உட்பட சுமார் 10 பவுனும் 3 கிராம் நகை மீட்கப்பட்டுள்ளது.

திருக்கோவில் மங்கமாரி அம்மன் கோயில் மற்றும் தம்பிலுவில் முனையூர் காளி கோயில் என்பனவற்றிலும் அண்மையில் தங்க நகைகள் திருடப்பட்டதாகவும், இக் கொள்ளைச் சம்பவத்துக்கும் இவர்களுக்கு தொடர்பு இருப்பதாகவும் தெரிவித்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

**வீட்டுப் பணியாளர் தேவை**

யாழ்ப்பாணம் நயினாதீவில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய வீட்டுப் பணியாளர் (பெண்) தேவை. வயதெல்லை 55 தொடக்கம் 70. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

**தொடர்பு : 0771697816** (8905)

## போர்க்குற்ற...

த்துள்ளார்.

பி.பி.சி தமிழோசைக்கு அளித்த செவ்வி ஒன்றிலேயே அமைச்சர் மனோ கணேசன் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இலங்கை அரசும் ஒரு பங்குதாரராக உள்ளதால், அந்தக் கடப்பாட்டிலிருந்து நழுவிவிட முடியாது என்றும் எனவே இது குறித்து தற்போதைய அரசாங்கம் உறுதியாகவுள்ளது என்றும் தேசிய சகவாழ்வு மற்றும் அரச மொழிகளுக்கான அமைச்சர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

போர்க்குற்ற விசாரணைகளை முன்னெடுக்க முடியாது என்று அரசாங்கத்தின் தலைமை கருதுமானால் அதற்கான விலையைக் கொடுத்தாக வேண்டும் என்று வலியுறுத்திய மனோ.

வடக்கே இராணுவம் பொதுமக்களின் நிலங்களில் இருந்து வெளியேற வேண்டும் எனும் நிலைப்பாட்டில் தான் உறுதியாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

நாட்டின் புதிய அரசியல் சாசனம் இயற்றப்படுவது தொடர்பில், பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாகவும், இந்த ஆண்டு மத்திவாக்கில் அதற்கான வரைபு தயாராகிவிடும் எனும் நம்பிக்கை தனக்கு உள்ளது என்றும் மனோ கணேசன் குறித்த செவ்வியில் தெரிவித்தார். (செ-11)

## இலங்...

வுள்ளார்.

நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு அவர், எதிர்வரும் 12 ஆம் திகதி இலங்கை வரவுள்ளதாக காத்மண்டு போஸ்ட் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பின் பேரில் நேபாள ஜனாதிபதியின் இலங்கை விஜயம் அமையவுள்ளது.

ஐக்கிய நாடுகள் வெசாக் பண்டிகையின் இறுதி நாள் நிகழ்வில் நேபாள ஜனாதிபதி பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

2015-ம் ஆண்டு நேபாள ஜனாதிபதியானதன் பின்னர் பித்யா தேவி பண்டாரி, மேற்கொள்ளும் இரண்டாவது வெளிநாட்டு விஜயம் இது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

**CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை**

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress
(அ-8479)

**ஜேர்மன் மொழி வகுப்புக்கள்**

ஜேர்மன், சுவிஸ் நாடுகளுக்கான **Deutsch** மொழிகள் **A1** சான்றிதழுக்கு ஏற்றவாறு கற்பிக்கப்படுகின்றன.

இல.181,1st Floor, Main Street, Nelliyadi.

**T.P: 077 645 4998 or 021 320 2973** (8948)

**BEACON** யாழ்.நகர்
மணிக்கூட்டுக் கோபுரவீதி, வெலிங்டன் சந்தி

A/L 2019 மாணவர்களுக்கான
**பௌதிகவியல்**
ஆரம்பம்: 10.05.2017
காலை 9.30
ஆசிரியர்
**T.M. Ramanan** B.Sc (Hons)
தொடர்புகளுக்கு:
077 647 0614

# அமெரிக்க க்றீன் கார்ட் 2018

அமெரிக்க க்றீன் கார்ட் விசா 2018 லொத்தர் அதிர்ஷ்டசாலிகள் தொடர்பான விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் தெரிவானவர்களால் மீண்டும் ஒரு படிவம் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளது.

இப்படிவங்கள் முறைப்படி பூர்த்தி செய்யாமை அல்லது தேவையான ஆவணங்கள், சமர்ப்பிக்கப்படாமை போன்ற காரணங்களால் அமெரிக்க தூதரகத்தினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையின் போது உங்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

எனவே, 2003 ஆம் ஆண்டு முதல் அமெரிக்க க்றீன் கார்ட் படிவங்களைப் பூர்த்தி செய்வதில் அனுபவமும் தேர்ச்சியும் பெற்ற எம்மூடாக பூர்த்தி செய்து கொள்வதுடன் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

எமது நிறுவனத்துக்கு கிளை அலுவலகமோ அல்லது பிரதிநிதிகளோ இலங்கையின் எந்த ஒரு பாகத்திலும் இல்லை என்பதை அறியத்தருகின்றோம்.

**BRISTOLVISA CONSULTATIONS**

8/3/4, Bristol Street,
Colombo-01
011 239 3919, 077 427 6579
www.bristolvisa.com

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

**V2 TRAVELS-0768226240**
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**

**070 330 5500**
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com

லண்டனுக்கு (UK) 5kg க்கு மேல் மிகக் குறைந்த கட்டணம்

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

# மரண அறிவித்தல்



## அமரர் சின்னத்துரை சங்கரப்பிள்ளை

(முன்னாள் இலட்சுமி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

ஆஸ்பத்திரி வீதி, சங்கானையை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சங்கரப்பிள்ளை அவர்கள் கடந்த (02.05.2017) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2017) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.
021 225 0978 (8947)

தகவல்:
மகன் -சங்கரப்பிள்ளை சிவலிங்கம்
(இலட்சுமி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

# காணி விற்பனைக்கு

**சிறிய முதலீடு - நிரந்தர வருமானம்**

A9 வீதி, நுணாவில் சந்தி அருகே மட்டுவில் வீதியில் 300M தூரத்தில் 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. வீடு கட்ட, தென்னை, மா, பலா, தேசி போன்ற மரங்கள் வைத்து பலன்பெற உகந்த இடம். (8951)

தொடர்பு
**077 873 0129**

**யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் முதன் முறையாக e-Money கற்கைநெறி ஆரம்பம்**

**வீட்டில் இருந்தவாறே இணையம் மூலம் மாதாந்தம் 25000 ரூபாய்க்கு மேல் சம்பாதியுங்கள்**

**வழிமுறைகள்**

Data Entry, Copy Paste, Online Sales, AdSense Click,
Visit Web Pages Typing, Spread sheet Editing, Data Collection
Face Book, multimedia
Web site Design, Accounts, programming, Software Development, Auto CAD Drawing, Graphic Designing,
Photoshop, Web Development, Word,
Excel, CMS
Share Market
Forex Trading



**யாருக்காக**

பல்கலைக்கழக மாணவர்கள், பகுதிநேர வேலை எதிர்பார்ப்பவர்கள், இல்லதரசிகள், இளைஞர் யுவதிகள், அலுவலக பணியாளர்கள், ஓய்வு பெற்றோர் மற்றும் ஆர்வம் உள்ள அனைவருக்கும்.

**Tecmode (Pvt) Ltd**
**No: 179A, Station Road, Vairavapuliyankulam, Vavuniya.**
**T.P : 077 519 7574**
(C-8499)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்
# வலம்புரி
சங்குநாதம்

நாதம் 116

வள்ளுவர் ஆண்டு 2048 | 07.05.2017 | தொலைபேசி : 021 222 3378

# அதிரவைத்த மேதினம்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் சாத்திரியார் சதாசிவத்தைத் தவிர அனைவரும் வருகை தந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் அறிவிக்க அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

என்ன இண்டைக்கு எங்கட சாத்திரியாரைக் காணவில்லை. ஏதேனும் சுகயீனமோ... கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

வெய்யில் கொடுமை. இருபது வருசம் கனடா நாட்டில இருந்து போட்டு வந்தவர் அல்லோ! அந்த குளிரூட்டிக்குள்ள வாழ்ந்து பழகினவருக்கு இந்தக் கொடும் வெய்யிலைத் தாங்க முடியாதுதானே!

கங்காணியாருக்கு விதானையார் விசுவலிங்கம் பதில் அளித்தார்.

அந்நேரம் ஆலடியை நோக்கி ஆட்டோ ஒன்று வேகமாக வந்தது. ஆட்டோவில் இருந்து சாத்திரியார் சதாசிவம் இறங்கினார்.

எங்கட சாத்திரியாருக்கு ஆயுள் நூறு. மூப்பர் சொல்லி முடிப்பதற்குள் அட தம்பி மூப்பர் வியாழன் அட்டமத்தில நிற்குது; பொங்குசனி, மங்குசனி எல்லாம் முடிஞ்சு மரணச் சனி நடக்குது. ஆயுள் நூறு என்பது நடக்கிற காரியமோ!

சாத்திரியார் கூறியதைக் கேட்டு ஆலடியில் ஒரே சிரிப்பு.

சரிசரி ஆட்டோக்காரத் தம்பியின்ர காசைக் கொடுத்து அவரை அனுப்பி வையுங்க.

வாத்தியார் கூறி முடிப்பதற்குள் சாத்திரியாரும் காசைக் கொடுத்தார்.

ஆட்டோவின் பின் பக்கத்தில்,

**முட்டிவிடாதே**
**முழுவதும் கடன்**

என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது. அந்த வாசகம் ஆலடியில் இருந்தவர்களுக்கு மன நெகிழ்வைக் கொடுத்தது.

ஏன் தம்பி!

இன்னும் லீசிங் கட்டி முடிக்கல்லயோ?

பண்டிதர் இரக்கத்தோடு கேட்டார்?

இல்லை ஐயா!

லீசிங் கட்டிக் கொண்டு தான் இருக்கிறன். இப்ப வாகனங்கள் வேகம் கூடத் தானே. அதுதான் பின்னால வந்து முட்டினாலும் எண்டு இந்த வாசகத்தை எழுதிப் போட்டிருக்கிறன்.

ஆனால் வேற சில ஆட்டோக்களில நல்ல பழமொழிகள், தத்துவங்கள் எழுதியிருக்கினம்.

முடிஞ்சால் உங்கட ஆலடி மாநாட்டில அந்த வாசகங்களைச் சொல்லலாம். பலருக்கும் நன்மையாக இருக்கும். இது ஆட்டோத் தம்பியின் கோரிக்கை.

அந்தத் தம்பி சொல்லுறதிலும் நியாயம் இருக்குது. ஆட்டோக்களில இருக்கிற வாசகங்களை ஆட்டோவின் இலக்கத்தோட ஆலடிக்குத் தெரியப்படுத்தினால் அதை நாங்கள் மாநாட்டுத் தொடக்கத்திலேயே நல்ல கருத்தாகச் சொல்லலாம்.

பண்டிதரின் இந்த வார்த்தை ஆட்டோ உரிமையாளருக்கு திருப்தியைக் கொடுத்தது.

சரி ஐயா நான் எங்கட ஆட்டோ சாரதிகளிட்டச் சொல்லி ஆலடி மாநாட்டிற்கு அந்த வாசகங்களை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கிறன்.

அட தம்பி எங்கட வைபருக்கு (Viber- 076 636 3378) அனுப்பி வையுங்க, வாத்தியார் கூற, ஆட்டோ புறப்பட்டது.

***பண்டிதர்:-*** ஏன் சாத்திரியார் இண்டைக்கு சுணக்கம்.

***சாத்திரியார்:-***அதையேன் கேட்கிறியள். பாகுபலி-2 படம் தியேட்டரில ஓடுதல்லோ அதுதான் குடும்பத்தோட பார்க்கப் போனம்.

***விதானையார்:-*** கட்டப்பா ஏனாம் பாகுபலியைக் குத்திக் கொன்றவர்.

***சாத்திரியார்:-*** விதானையார் நான் அந்தக் கதை யைச் சொல்லி படத்தின்ர சுவையைக் கெடுக்க விரும்பல்ல. ஒருக்கா படத்தைப் பாருங்க, நல்ல படம்.

***மூப்பர்:-*** சாத்திரியார் சொல்லிப் போட்டார், நாங்கள் எல்லாரும் ஒருக்கா தியேட்டருக்குப் போய் பாகுபலி-2 பாக்கிறதுதான்.

மூப்பர் இதைச் சொல்லும் போது கங்காணியார் கார்த்திகேயன் மெல்லத் தூங்கி விழித்தார்.

***வாத்தியார்:-*** என்ன கங்காணியார் உடல் அசதியாக இருக்குப்போல.

***கங்காணியார்:-*** ஓம்! வாத்தியார். சலரோகப் பிரச்சினை இருக்குத்தானே. இண்டைக்கு மதியம் ஒரு செத்த வீட்டிற்குப் போனனான். செத்த வீட்டிலும் சோடா தந்தினம். பிறகு சுடலையிலும் சோடா. ஏதோ சும்மா கிடைக்கிற சோடாத்தானே எண்டு வாங்கிக் குடிச்சுப் போட்டன். அதுதான் அசதியாக் கிடக்குது.

***வாத்தியார்:-*** உந்த நாசமறுந்த சோடாவை ஏனப்பா குடிக்கிறியள். முன்பெல்லாம் செத்த வீட்டில தண்ணியும் குடிக்க மாட்டினம். செத்த வீட்டில தண்ணி குடிச்சால் அது துடக்கு எண்டு சொல்லுவினம். இப்ப பார்த்தியளோ!

***விதானையார்:-*** ஏன்? வாத்தியார் இதைச் சொல்லுறியள். முன்பு இறந்தவரின்ர வீட்டாருக்கு அயல் வீடுகளும் சொந்தக்காரரும் தானே தண்ணிவெண்ணி குடுப்பினம். ஆனால் இப்ப செத்த வீட்டிற்கு வாறவியளுக்கு செத்த வீட்டுக்காரர்களே சோடா, தண்ணி குடுக்கினம். அந்தளவிற்கு எங்கட பண்பாடு தலைகீழா மாறிப் போச்சுது.

***பண்டிதர்:-*** காலமாற்றம். முன்பெல்லாம் ஒருவர் இறந்தால் இறந்தவர் வீட்டில பந்தல் போட்டு அந்தப் பந்தலில லாந்தர் ஏற்றி வைத்து களப்பாய் விரித்து ஊரும் உறவும் ஒன்றாய் இருந்து இறந்த குடும்பத்திற்கு ஆறுதலாய் இருந்து ஆற்றுப் படுத்தும். இப்ப இறந்தவரின் உடல் எண்டைக்கு எடுபடுமோ அண்டைக்குத்தான் ஆட்கள் போயினம்.

இறந்தவர் தன்பாட்டில கிடக்க, கிச்சனில சமையல், சாப்பாடு சர்வ சாதாரணமாக நடக்கும்.என்ன செய்யிறது. எங்கட தமிழ்ப் பண்பாடு அடியோட மாறிப் போச்சுது.

***வாத்தியார்:-*** என்ன இருந்தாலும் செத்த வீட்டில சோடா குடுக்கிறது, சுடலையில சோடா குடுக்கிறது இதை முதலில நிறுத்த வேணும். செத்த வீட் டுக்குப் போனால் வீட்ட வந்து தோய்ந்த பிறகுதான் தண்ணி குடிக்கிறது, சாப் பிடுகிறது என்ற ஒரு கட்டுப்பாட்டை நாங்கள் பாதுகாக்க வேணும்.

***விதானையார்:-*** சோடாக் கம்பனிகள் வாத்தியாரோட சண்டைக்கு வரப் போகினம்.

***வாத்தியார்:-*** விதானையார் எங்கட தமிழ்ப் பண்பாடு எவ்வளவோ உயர்வானது. இறந்தவர்களின்ர ஆத்ம ஈடேற்றத்திற்கான படையல்களில் பாகற்காய் கட்டாயம் காய்ச்ச வேணும். ஏன் தெரியுமோ?

***சாத்திரியார்:-*** ஏன் எண்டதைச் சொல்லுங்க வாத்தியார்?

***வாத்தியார்:-*** சலரோகத்தைக் கட்டுப்படுத்திற வேலையை பாகற்காய் செய்யுமல்லோ. இறந்த வீட்டில கவலை, துன்பம் இருக்கும். கவலைப்பட்டால், அழுது மனம் நொந்தால் இரத்தத்தில சுகர் கூடி சலரோகம் உச்சமாவதற்கு வாய்ப்பு உண்டு.

அதால இறந்தவர்களின்ர படையல்களில பாகற்காயைக் கட்டாயம் சமைத்தால் அந்த வீட்டுக்காரரும் உறவுகளும் பாகற்காய்கறி சாப்பிடுவினம். இது சலரோகத்தைக் கட்டுப்படுத்துமல்லோ. ஆனால் இப்ப சோடா குடுக்கினம் எண்டால் நிலைமை எப்படி என்பதைப் பாருங்கஎன்.

***சாத்திரியார்:-*** வாத்தியார் சரியாச் சொன்னியள்.

சாத்திரியார் இப்படிச் சொல்ல பண்டிதர் பரமலிங்கம் தன் இடுப்பில் செருகி வைத்திருந்த ஒரு கடிதத்தை எடுத்தார்.


***பண்டிதர்:-*** ஆலடிக்கு ஒரு முக்கிய கடிதம் வந்திருக்குது. காதல் ஜோடிகளை ஆள் அரவம் இல்லாத இடங்களுக்குப் போக வேண்டாமாம். அண்மையில சாட்டிக் கடற்கரைப் பக்கமாக ஒரு காதல் ஜோடி இருந்து கதைத்துக் கொண்டிருந்த போது நான்கு பெடியள் காதலனை அடித்துப் போட்டு அந்தக் காதலியைத் தூக்கிக்கொண்டு போய் பாலியல் பலாத்காரம் செய்தவியளாம். அதுதான்...

***மூப்பர்:-***என்ர பரமபிதாவே, இதென்ன அநியாயம்.

***பண்டிதர்:-*** அதுதான் மூப்பர் இந்தக் கடிதத்தை எழுதியவர் காதல் ஜோடிகள் தனியான இடங்களில இருந்து கதைப்பதை- அந்த இடங்களுக்குச் செல்வதை முற்றாகத் தவிர்க்சு வேண்டும் எண்டு கேட்டிருக்கிறார். சாட்டியில நடந்த சம்பவங்கள் வேறு சில இடங்களிலும் நடந்ததாம்.

***விதானையார்:*** அப்ப இந்த விடயத்தை காதல் ஜோடிகளுக்குக் கட்டாயம் தெரியப்படுத்த வேணும்.

இப்படி விதானையார் சொல்ல அதை அங்கீகரிப்பதுபோல ஆலடி பிள்ளையார் கோவில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## ஆளரவம் அற்ற இடங்களில் சந்திக்கும் காதல் ஜோடிகளுக்கு ஆபத்து!

ஆதித்தன்

# பேரணியாக மக்கள் திரண்ட மகிந்தவின் மேதின எழுச்சி

உலக வரலாற்றில் தனிமனித ஆற்றல்களே மிகப் பிரவாகமான வெற்றிகளையும் ஆக்கங்களையும் தந்துள்ளன. இது அரசாட்சி முதல் அடிபட்ட நிர்வாகம் வரை செல்லுபடியானதுதான். அந்த வகையில் உலகின் அரசாட்சிப் பக்கத்தை பார்த்தால் உலகசாதனை படைத்த பெருந்தலைவர்களை நாம் அடையாளம் காணமுடியும்.

இதேபோன்றுதான் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த தலைவர்கள், போருக்குத் தலைமைதாங்கிய தளபதிகள் எனப் பலரைக் குறிப்பிட முடியும்.

அந்தவகையில் இலங்கையில் இருக்கக்கூடிய நல்லாட்சி மீது மக்கள் அதீதமான நம்பிக்கை கொண்டிருந்தனராயினும் நல்லாட்சியின் செயற்பாடுகள் மந்தமானவையாக இருக்கின்றனவே தவிர ஆக்கபூர்வமான விடயங்கள் எதனையும் காணவில்லை எனலாம்.

நல்லாட்சியின் இந்த பதமையான போக்கு தமிழ்மக்களைவிட சிங்கள மக்களைக் கடுமையாகப் பாதித்துள்ளதென்பதை மட்டும் நாம் கூறிக் கொள்ள முடியும்.

அதாவது நல்லாட்சியை அதீதமாக நம்பியவர்கள் தமிழ்மக்களாயினும் நல்லாட்சி எதனையும் செய்யவில்லை என்ற உண்மையைத் தமிழ் மக்கள் இப்போது உணர்ந்துள்ளனர். எனினும் தமிழ் அரசியல் தலைமை நல்லாட்சியைக் காப்பாற்றுவதில் அதீத கரிசனை கொண்டுள்ளதால், தமிழ் மக்கள் நல்லாட்சிக்கு எதிராக தங்கள் எதிர்ப்பைக் காட்டுவதில் தயக்கம் காட்டி வருகின்றனர்.

ஆனால் சிங்கள மக்களைப் பொறுத்தவரை அவர்கள் நல்லாட்சியின் இயலாமையை தொடர்ந்தும் ஆதரிப்பதற்குத் தயாராக இல்லை.

இதனால் அவர்கள் தமது எதிர்ப்பை நல்லாட்சிக்குக் காட்ட முற்பட்டனர்.

இதற்காக அவர்கள் மேதினத்தை கனகச்சிதமாகப் பயன்படுத்திக் கொண் டனர் என்று கூறுவதே பொருத்துடையது.

ஆம், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடந்த கூட்டு எதிரணியின் மேதின நிகழ்வில் ஏகப்பட்ட சிங்கள மக்கள் கலந்து கொண்டனர்.

இந்த நாட்டின் ஆட்சி



ல்லை. அவர்கள் பல் வேறு குறைபாடுகளுடன் வாழ்கின்றனர் என்பது மட்டும் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே மகிந்த ராஜபக்ஷ தரப்பு நடத்திய மேதின

இங்குதான் ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் ஆகியோரின் கூட்டுப் பணி காத்திரமாக இருக்க வேண்டியுள்ளது.

தற்போது தேசிய அரசு ஆட்சி செய்வதாகக் கூறப்

பால சிறிசேனவும் உணரத் தலைப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் ஒன்றாக இருந்த மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ஷவை புறந்தள்ளி ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கினார் என்பதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நலிவடையச் செய்வதற்கு அவர் இடம்கொடுப்பார் என நினைப்பது அறியாமை.

அதேநேரம் அவரிடம் இயல்பான மனிதநேயம் உண்டு. சந்தர்ப்ப சூழ்நிலைகளில் அவர் மனித நேயமுடையவராகத் தன்னைக் காட்டிக் கொள்ளவில்லை என்பதே அவரின் இயல்பான மனித நேயம் என்ற சொற்பதம் குறித்து நிற்கும். இந்நிலையில் அவரின் மனித நேயத்தை பலவீனமாகக் கருதி, ஐக்கிய தேசியக் கட்சி தனக்குச் சார்பாக காய்நகர்த்த நினைத்தால் அது ஜனாதிபதி மைத்திரியையும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் ஒன்று சேர்க்க உதவுமேயன்றி வேறு எதுவுமாக இருக்கமுடியாது.

ஆக, மகிந்த ராஜபக்ஷவின் மேதினப் பேரணியில் மக்கள் அணிதிரண்டு

## நல்லாட்சி அரசுக்கு சகுனம் சரியில்லை

யில் இருக்கக்கூடிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் அசமந்தத்தைச் சுட்டிக் காட்டி நல்லாட்சி எதுவும் செய்யவில்லை என்பதை உணர்த்தும் பொருட்டு மகிந்த தலைமையிலான மேதினத்தில் சிங்கள மக்கள் அணி திரண்டனர்.

நடந்து முடிந்த மேதின நிகழ்வில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான மேதின எழுச்சிக் கூட்டத்தில் இலட்சோப மக்கள் பங்கேற்றனர் என்பதை வைத்துக்கொண்டு அடுத்த தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு வெற்றி நிச்சயம் என்பதை நிரூபிப்பது நமது நோக்கமல்ல.

மாறாக மேதினக் கூட்டத்தில் மக்கள் பேரலையாகத் திரண்டனர் என்பதற்காக அடுத்த தேர்தல் வெற்றியை மகிந்த ராஜபக்ஷ தரப்பிடம் உயில் எழுதிக் கொடுத்துவிடவும் முடியாது.

ஆனால் நல்லாட்சியில் மக்கள் திருப்தியடையவி



எழுச்சியில் இலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்றனர் என்பது நல்லாட்சியை விழிப்படையச் செய்வதற்கானது என்று கருதுவது இப்போதைக்குச் சரியானதாக இருக்கும்.

அதேநேரம் மக்களின் அணி திரள்வை மையமாக வைத்து மகிந்த தரப்பு, ஆட்சியை கலைத்து தேர்தலை நடத்தும் என்ற கோசத்தை முன்வைக்கப் போகிறது என்பது நிறுதிட்டமான உண்மை.

பட்டாலும் ஜனாதிபதி மைத்திரியை ஓரங்கட்டி ஐக்கிய தேசியக் கட்சியை கட்டியெழுப்புவது என்ற திட்டங்கள் நடப்பதாகவே கருதப்படுகிறது. இக்கருத்தியல் எதிர்க்கட்சிகளின் தனிப்பட்ட பிரசாரம் என்று கூறிவிடவும் முடியாது.

ஏனெனில் தன்னை வைத்துக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பலவீனப்படுத்த முற்படுகிறது என ஜனாதிபதி மைத் திரி

தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தியதற்கு நல்லாட்சி உரிய மதிப்பைக் கொடுப்பதாக இருந்தால், அதற்கான ஒரே வழி இனப்பிரச்சினையைத் தீர்த்து வைத்து இலங்கை நாட்டை அபிவிருத்திப் பாதையில் முன்னகர்த்திச் செல்வதுதான். இதை நல்லாட்சி செய்யத் தவறினால் அடுத்த கட்டம் காலமுதிர்வுக்கு முன்பான பொதுத் தேர்தலாக இருக்கும்.

விதுரன்




# திறமையான குள்ளன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

"இங்கே நீங்கள் மகிழ்ச்சியாகத் தங்கலாம். இன்னும் சிறிது நேரத்தில் என் மகனும் ஏழு பேரன்களும் வந்து விடுவார்கள்.

உங்களைப் பார்த்தால் அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். நீங்கள் களைப்பாக இருக்கிறீர்கள்.

அந்த அறை என் பேரன்கள் தூங்கும் அறை. அங்கே சென்று நிம்மதியாகத் தூங்குங்கள்" என்று இனிமையாகப் பேசினாள் கிழவி. அவர்களும் அந்த அறையில் சென்று படுத்தார்கள்.

சிறிது நேரத்தில் அரக்கனும் ஏழு மகன் களும் அங்கே வந்தனர். ஏழு பேரன் களின் தலையிலும் கிரீடத்தை அணிவித்தாள் அவள்.

"நீங்கள் சென்று அவர்கள் பக்கத்தில் படுத்துத் தூங்குங்கள்" என்றாள். அவர்களும் சென்று சிறுவர் பக்கத்தில் படுத்தனர்.

தன் மகனைப் பார்த்துக் கிழவி, " இன்று நமக்கு நல்ல வேட்டை ஏழு சிறுவர்கள் வழி தவறி இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களை ஏமாற்றி நம் பேரன்கள் தங்கும் அறையில் தூங்க வைத்திருக்கிறேன்.

பெரிய அண்டாவில் கறிக் குழம்பு வைக்கிறேன். குழம்பு கொதித்ததும் நீ அந்த ஏழு பேரையும் தூக்கி வந்து அதில் போடு.

அவர்கள் நன்றாக வெந்ததும் நாம் வயிறார உண்போம். மீதி உள்ளதைப் பொழுது விடிந்ததும் பேரன்கள் சாப்பிட்டும்" என்றாள்.

"அம்மா! எனக்குப் பசி உயிர் போகிறது. சீக்கிரம் அண்டாவை அடுப்பில் வை. அந்த அறையில் என் மகன்களும் படுத்திருக்கிறார்களே? இருட்டில் எப்படி அந்தச் சிறுவர்களை மட்டும் தூக்கி வருவது? விழித்துக் கொண்டால் தப்பி விடுவார்களே?" என்று கேட்டான் அரக்கன்.

"நீ எளிதாக அடையாளம் கண்டுபிடிக்க வேண்டும் அதற் காகத்தான் என் பேரன் களின் தலையில் மட்டும்



கிரீடம் அணிந்து உள் ளேன்" என்றாள் அவள்.

குள்ளனுக்குத் திடீரென்று விழிப்பு வந்தது.

கிழவியின் ஏழு பேரன்களும் தலையில் கிரீடத்துடன் படுத்திருப்பது அவனுக்குத் தெரிந்தது. "ஏன் இவர்கள் கிரீடத்துடன் தூங்க வேண்டும். ஏதோ சூழ்ச்சி நடக்கிறது" என்பதைப் புரிந்து கொண்டான் அவன்.

அவர்கள் தலையிலிருந்த கிரீடத்தை எடுத்தான். தன் அண்ணன்களின் தலையில் அவற்றை அணிவித்தான். தன் தலையிலும் கிரீடத்தை அணிந்து கொண்டான். என்ன நடக்கிறது என்பதை விழித்திருந்து பார்த்தான்.

சிறிது நேரத்தில் அரக்கன் உள்ளே நுழைந்தான். கிரீடம் அணிந்திராத சிறுவர்களை ஒவ்வொருவராகத் தூக்கிச் சென்றான். கொதிக்கும் குழம்பில் அவர்களைப் போட்டான்.

நடந்ததைப் பார்த்த குள்ளன் திகைத்தான். தன் அண்ணன்களை மெதுவாக எழுப்பிய அவன், "அரக்கனின் வீட்டில் சிக்கிக் கொண்டோம். உடனே தப்பிச் செல்ல வேண்டும். இல்லாவிட்டால் நம்மைக் கொன்று விடுவார்கள்" என்றான். இதைக் கேட்டு எல்லோரும் பயந்தனர். அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர்.

சமைத்த கறியை அரக்கனும் கிழவியும் சுவைத்துச் சாப்பிட்டார்கள். பிறகு இருவரும் குறட்டை விட்டுத் தூங்கத் தொடங்கினார்கள்.

பொழுது விடிந்தது. அரக்கனை எழுப்பினாள் கிழவி. " என் பேரன்களை அழைத்து வா. அவர்களும் மகிழ்ச்சியாகச் சாப்பிட்டும்" என்றாள்.

அறைக்குள் நுழைந்த அவன், "அம்மா! இங்கு யாருமே இல்லையே" என்று அலறினான்.

அங்கு வந்த அவளுக்கு உண்மை புரிந்தது. "ஐயோ அந்தச் சிறுவர்கள் நம்மை ஏமாற்றி விட்டார்கள்.

நம் குழந்தைகளைக் கொன்று நாமே தின்று இருக்கிறோம்" என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுதாள். "கொதிக்கும் குழம்பில் என் குழந்தைகளையா போட்டேன்?அவர்களையா சாப்பிட்டேன்? என்ன கொடுமை இது? இனி நான் என்ன செய்வேன்?" என்று சுவரில் மோதிக் கொண்டு அழுதான் அவன்.

இருவரும் நீண்ட நேரம் அழுதார்கள்.

ஒருவாறு மனம் தேறிய அரக்கன், "என் குழந்தைகளைக் கொன்றவர்கள் அந்தச் சிறுவர்கள் தான். என்னிடம் இருந்து அவர்கள் தப்ப முடியாது. எங்கு இருந்தாலும் அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பேன்.கொன்று தின்று பழி தீர்ப்பேன்" என்று கோபத்தில் பற்களை நறநறவென்று கடித்தான்.

"என் மந்திரச் செருப்பைக் கொண்டு வா" என்று கத்தினான் அவன்.

கிழவியும் செருப்பைக் கொண்டு வந்தாள். அதைப் போட்டுக் கொண்டு புறப்பட்டான் அவன். (தொடரும்)

## எல்லாவற்றிலும் நன்மையுண்டு



ஒருகாட்டில் பல உயர்ந்த மரங்கள்இருந் தன. ஒன்றை விடமற்றஎல்லா மரங் =களும் நேராய் நிமிர்ந்து நின் றன.

ஒரு மரம் மாத்திரம் வளைந்து நின்றது. மற்ற எல்லா மரங்களும் வளை ந்தமரத்தை ஏளனம்செய் தன.

வளைந்தமரமும்இதைக் கேட்டு கேட்டு கவலைப்படும். காற்றிற்கு வளைந்த மரம் அடிக்கடி வளைந்தது.

ஆனால் மற்ற மரங்கள் அசையாமல் நின்றன. இதைப் பார்க்கவும் வளைந்த மரத்திற்கு கவலை ஏற்பட்டது.

வளைந்த மரத்தின் கனி கள் காற்றிற்கு ஒன்றொன் றாக நிலத்தில் வீழ்ந்து அழு கிப் போய் விட்டன. ஆனால் நேரான மரங்களின் கனி களோ அழுகாமல் இருந் தன.

ஒரு நாள், மரம் வெட்டு வதற்காய் ஓர் விறகு வெட்டி காட்டிற்கு வந்தான். இவ்வ ளவு மரங்கள் ஒரு காட்டிலே இருக்கும்எனஅவன் நினைக்க வில்லை. அவன் மிகவும்மகிழ் ச்சியுற்றான்.

அடுத்த நாள் காலை யில் அவன் தனது கோடரியுடன் இன் னும் ஐந்து நண்பர்களைக் கூட்டிக் கொண்டு வந்தான்.

அவர்கள் எல்லா மரங் களையும் வெட்டினார்கள் வளைந்த மரம் இருந்த இடத்திற்கு வந்த போது அவர்கள் அந்த மரத்தைப் பார்த்து இந்த மரம் எமக் குப் பயன்படாது இதை நாம் விட்டு விடுவோம் என்றார் கள்.

எவரையும் நாம் ஏளனம் செய்யக் கூடாது. அது நமக்கே திரும்பி வரும்.

காடு அழிந்து ஒரு மரம் மாத்திரம் மிகுதியாய் இருந்த தால் அங்கு மக்கள் குடியேறத் தொடங்கினார்கள்.

வளைந்த மரம் அம் மக் களுக்கு பயன் படத் தொடங் கியது.

ஸ்ரீ கரன் மேனன்
தரம் - 7
யாழ். பரியோவான் கல்லூரி


வீட்டுத்தோட்ட, விவசாய நிலங்களுக்கான
மற்றும் அழுகுத்தாவர சாடிகளுக்கான
'வீரியம்' சேதனப்பசளை விற்பனைக்குண்டு




யாழ்ப்பாணம் மாநகரசபையினால் உற்பத்தி செய்யப்படுகின்ற "வீரியம்" சேதனைப்பசளையானது பின்வரும் அளவுகளில் மற்றும் விலைகளில் விற்பனைக்குண்டு.


அரிக்கப்பட்ட சேதனப்பசளை

| இல | அளவு | விலை (வரி உட்பட) | கிடைக்கப் பெறும் இடம் |
|---|---|---|---|
| 01 | 01 கியூப் | ரூபா 5500 | காக்கை தீவு மீள் சுழற்சியகம் |
| 02 | 02 கியூப் | ரூபா 8000 | |
| 03 | 02 கியூப்புக்கு மேல்வரும் ஒவ்வொரு கியூப்புக்கும் | ரூபா 4000 | |
| 04 | 02 Kg | ரூபா 60 | யாழ்.மாநகரசபை அலுவலகம்/ காக்கை தீவு மீள்சுழற்சியகம் / திரட்டு அலுவலகங்கள் - நல்லூர் பாசையூர் குருநகர் (ஜிபிலி) |
| 05 | 10 Kg | ரூபா 120 | |
| 06 | 25 Kg | ரூபா 300 | |

அரிக்கப்படாத சேதனப்பசளை

| இல | | விலை | கிடைக்கப்பெறும் இடம் |
|---|---|---|---|
| 01 | 02 கியூப் | ரூபா 2340 (வரி ஏற்றுக் கூலி உட்பட) | கல்லுண்டாய் வெளி |
| 02 | 02 கியூப் | ரூபா 1755 (வரி உட்பட, ஏற்றுக்கூலி அற்றது) | |

தொடர்புகளுக்கு : 021 3127085
(C-8482)





## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



### மூன்றாம் உலகப் போர் வருமா?

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு மக்கள் மத்தியில் எப்படி...

### புனிதப் போர் நடந்த பூமி அழுக்காகிறதே?

**சகானா — மானிப்பாய்**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு மக்கள் மத்தியில் எப்படி இருக்கிறது?**

அது எப்படி என்றால் மனிதன் சீனி அதிகம் சாப்பிடக்கூடாது. அது உயிர் கொல்லி சக்கரை நோயை உண்டு பண்ணும் என்கின்றார்கள். சக்கரை நோய் வந்தவர்கள் மயக்கமுற்ற வேளை சீனிச்சத்து இல்லையென்று சீனிக் கரைசலை குடிக்க கொடுக்க அவர்கள் மயக் கத் தில் இருந்து மீண்டு விடுவார்கள். இது போலத்தான் கூட்டமைப்பின் பாதை மாறி விட்டது என்று குறை கூறுகிறோம்.

தேர்தல் என்று வந்தவுடன் வீட்டுக்கே புள்ளடி இடுகிறோம். புலி கீறிய கோட்டில் நடக்கிறார் கள்.என்று நினைக்கும் மக்களுக்கு தெரியாது அது புள்ளடிக்காகத்தான் என்பது.

**பிரகாஷ் — மிருசுவில்**

**காதல் தோல்வியால் தற்கொலை செய்து கொள்ளலாமா?**

வாழ்வில் எமக்கு வரும் தோல்விகள் எத்தனை பாடங்களை எமக்குக் கற்பித்துத் தருகிறது. விளையாட்டில் தோல்வி. மறுபடி விளையாடா மல் விடுகிறோமா? பரீட்சையில் தோல்வி. மீண்டும் பரீட்சை எழுதாமல் விடுகிறோமா? வேலை தேடுவதில் தோல்வி அதற்காய் வேலை க்கே போகாமல் இருக்கிறோமா? இப்படி எமக்கு வரும் எல்லா தோல்விகளையும் எதிர் த்துப் போராடும் நாம் காதலில் வரும் தோல் விக்கு மட்டும் உயிரை விடுவது எந்தவகையில் நியாயமானது. காதல் வாழ்வில் வரும் ஒரு பகுதியே தவிர காதல்தான் வாழ்வல்ல என் பதை புரிந்து கொண்டால் எல்லாம் சரி.

**கரன் — யாழ்ப்பாணம்**

**என்னை இரண்டு பெண்கள் உயிருக்கு உயிராய் காதலிக்கிறார்கள். நான் என்ன செய்வது?**

அடேய் கரன் எல்லோருக்கும் உடம்பில் ஆங்காங்கேதான் மச்சமிருக்கும். உனக்கு உடம்பு பூரா மச்சமிருக்கு போல. அப்படியே இளவயது வியாசரை நினைவுபடுத்துகிறாய். ஆண்டவன் படைத்தான் எங்கிட்டக்கொடுத்தான் அனுபவிராசண்டு அனுப்பி வைத்தான்... என்று பாட வேண்டியது தானே.

**ஜெயா — வதிரி**

**அழகு என்பது எதுவோ?**

அழகு என்பது வெறும் வெள்ளைத் தோலிலும் சதையிலும் தான் இருக்கிறது என்று நினைக் கிறார்கள் பலர்.

அப்படி எனின் இறைவன் உள்ளம் என்ற ஒன்றைப் படைத்திருக்கவே மாட்டான் என்பது அவர்களுக்கு புரிவதில்லை.

**தினேஸ் — சங்கானை**

**நான் கிடைக்காவிட்டால் ஒரு பெண் செத்து விடுவாள் என்கிறாளே?**

நீ அவளுக்கு கிடைத்த பின்பு நீ செத்து விடு வாய் பரவாயில்லையா?

**தக்ஷி — யாழ்ப்பாணம்**

**பெண்களிடம் தவறாக நடக்கும் ஆண் கள் பற்றி?**

பாகுபலி – 2இல் ஒரு காட்சி. பெண்களுடன் அங்கசேட்டை புரிந்த ஆண் ஒருவரின் விரல்களை வெட்டி விடுவாள் தேவசேனை (அனுஷ்கா). இதனால் குற்றவாளியாக அரச சபையில் நிறுத்தப்படுகிறாள். அரசன், அமைச்சர்கள் என வீற்றிருக்கும் சபையில் அமேந்திரபாகுபலியால் (பிரபாஸி னால்) தேவசேனை விசாரிக்கப்படுகிறாள்.

அமேந்திர பாகுபலி கூறுவார் தப்பு செய்து விட்டீர் தேவசேனை. பெண்களுடன் மதிப் பின்றி நடக்கும் ஆண்களின் விரல்களை வெட்டக் கூடாது, அவன் தலையை வெட்ட வேண்டும் என்று கூறும் கணப்பொழுதில் அவரின் வாள் குற்றவாளியின் சிரசை துண் டாடும். பெண்களை போற்றும் அந்த காட்சி மனமுருகவைக்கும். மாற்றத்தை ஏற்படுத் தும். பாகுபலி – 2 பாருங்கள்.




**வாசன் — யாழ்ப்பாணம்**

**காதல் என்பதன் வரைவிலக்கணம் என்ன?**

காதல் படகென்றால் காமம் துடுப்பல்லோ படகின்றி துடுப்பு உண்டா? துடுப்பு இன்றி படகு செல்லா!

**நிக்ஷன் — வவுனியா**

**மூன்றாம் உலகப் போர் வருமா?**

அணு ஆயுதம் வைத்திருப்பவர்கள் இனி யாரும் அணு ஆயுதம் தயாரிக்கக்கூடாது என கட்டளைபோடும் நிலை இருக்குமட்டும் மூன்றாம் உலகப்போர் என்ன முப்பதாம் உலகப் போர் வருவதற்கான சாத்தியங்களே இருக்கின்றன.

**ஈஸ்வர் — வதிரி**

**புனிதப் போர் நடந்த பூமி அழுக்காகிறதே?**

களத்தில் இருந்து அம்மாவுக்கு கடிதம் எழுதிய வனின் தம்பி இன்று நடு வீதியில் வாளுடன் நின்று அம்மா அப்பாவின் மானத்தை வாங்குகிறான். இதற்குள் ஏதோ திட்டம் இருக் கிறது என்பது மட்டும் உண்மை.

**தனு — அல்வாய்**

**சாதிப்பாகுபாடு என்பது?**

மனிதனுக்கு உண்மையில் ஆறறிவு தானா என கேள்வி கேட்க வைக்கிறது.

**விது — மானிப்பாய்**

**நம்பிக்கைத் துரோகம் செய்பவர்களை பற்றி?**

இதுதான் இன்று எல்லோரிடமும் மலிந்து கிடக்கிறது. தேன் ஒழுகப் பேசுவது மட்டும் தான் அன்பென்றால் நம்பி இருப்பவர்களை ஏமாற்றி ஏமாளிகளாக்கி எதிலும் வெளிப் படைத் தன்மை இல்லாமல் உள்ளொன்று வைத்து புறமொன்று பேசி பொய், கள்ளத் தனம், பித்தலாட்டம், இப்படி நம்பிக்கிடக்கும் உறவுகளின் உணர்வுகளைப் புரிந்து கொள் ளாதவர்கள் மனிதர் என்ற பதத்துக்குள் அடங் காதவர்கள் என்பதே எம் கருத்து.

**நிலக்ஷன் — முல்லைத்தீவு**

**அப்பா எப்படி இருக்க வேண்டும்?**

ஒரு அப்பா தன் மகனுக்கு எதையும் சொல் லிக் கொடுக்கத் தேவையில்லை. தந்தையின் நடத்தை ஒவ்வொன்றையும் மகன் பின்பற் றியே ஆவான்.

படி படி என தந்தை சொல்லும் போது படிக்காத மகன், தான் தந்தையான பின்பு தன் மகனை படிக்கவைக்க பாடுபடுகிறானே. இதுதான் தந்தை.

அப்பா அமைவது பலருக்கு வரம். அதுவே சிலருக்கு சாபமாகவும் அமைந்து விடுகிறது.

**தாரி — கட்டுவான்**

**மண், பொன் இப்படி விலை ஏறினால் என்ன செய்ய முடியும்?**

மண் + பொன் = மணப் பெண்

# கவிதைக் கலசம்



## 48 பிறக்கராவிடின்

எந்தன் பாட்டன் காலத்து கதையில்
பச்சை வயல்களும்
நெடுத்த பனைகளும்
பசிபோக்கும்
பணம் பாயும் சுகம் தரும்
பந்தல்கால் போட்டு பல கல்யாணம்
ஊரில் நடந்தேறும்
இன்று
போதைப்பொருளும்
பேதைக்கடிமையும்
கூடிப்போச்சு
சொந்த ஊரில் அடிமை வாழ்வு
சூழ்ந்து போச்சு
நாற்பத்தெட்டு பிறக்காவிடின்
நம் காணி நமக்கே சொந்தம்
உறுதி கேட்கும் கூட்டமும்
ஒதுங்கியிருக்கும்
வெள்ளையன் செய்த வேலை
வேதனை தருகிறது
வியர்வை சிந்தி உழைத்த பணம்
வீணாகிப் போகிறது
சீரழியும் எமது கதை சீர்ப்படுத்த
எவருமில்லை
புரிந்து கொள்ளும் காலம் வரும்
புளுதி வாழ்வு விலகிப் போகும்

**கு.யசிதீபன்**
**அரியாலை**

## ஊர்ச்சிநேகிதி

சின்ன வயதில் பார்த்த
இருமை விழிகள்
நான் பட்டம் ஏற்றும்போது
பட்டாம்பூச்சி
பிடித்து திரிவாய்
வெள்ளையும் கறுப்பும்
கலந்த ஆட்டுக்குட்டியின்
பின்னால் ஓடி விளையாடுவாய்
அந்திப் பொழுது தொலைய
வெண்ணிலா முகம் காட்ட
உன் தந்தை மடியிலிருந்து
கடற்கரையோரம் வருவாய்
ஞாபகம் இருக்கிறதா
உனை வேனில் காலத்தில்
பார்க்கின்றேன்
நிலத்தைப் பார்த்துப்
புன்னகைக்கும் பூவைப்போல
கல்லூரிக்குப் போகிறாய்
கலைமாணிப் பட்டம் தேடி...

**ஆ.முல்லைதிவ்யன்**

## நமக்காக அழுத வகுப்பறை

தலையை நனைத்த
மழைத்துளிகளை துடைத்தபடி– அந்த
வகுப்பறையில் நுழைகின்றேன்
அங்கு
நம் இருவர் இடம் மட்டும்
காலியாகவே இருந்தது
எல்லோரும் பேசிக்கொண்டிருந்தார்கள்
நாளைய பிரிவை சுமந்து
நனையும் விழிகளுடன்
நானும்
இரவோடிரவாக
வார்த்தைகளை தேடியெடுத்து
முத்துக்களாய் கோர்த்து மாலையிட
முழுமதி உனக்கொரு
மாலையிட வந்தேன்
கிளியே!
உன் வரவின்றி தனிமையில் நான்
இந்த வகுப்பறை
இதமான இன்பக்கூடு
பலதேசப் பறவைகளின்
பாசக்கூடு
நான் பொத்திவைத்த
பொக்கிஷமாம் வார்த்தைகள்
செல்லரித்துப் போவதோ!
கண்ணீரை வடித்து நின்றது
நான் மட்டுமல்ல
இந்த வகுப்பறையும் தான்

**மா.சிவா, கரவெட்டி**

## மதம்

அன்பே மார்க்கம் என்றது சைவம்
அன்பே சிவம் என்றதும் அதுவே
எமை அடித்து எம் இனத்தை
அழித்தவர்க்கும் அன்பைக் கொடுத்தோம்!

ஒரு கன்னத்தில் அறைந்தால்
மறுகன்னத்தையும் காட்டு
என்றது கிறிஸ்தவம்
எமை அடித்தவர்க்கு
எம்மால் வழங்கிய பதில்
சிரிப்பு மட்டுமே!

ஆசை கொலை களவு
அத்தனையும் மார்க்கத்திற்காகாது
என்றது பௌத்தம்
எமைக் கொலை செய்தவரையும்
எம் உடைமைகளை
கொள்ளையடித்தவரையும்
பொறுமையாய் பார்த்திருந்தோம்!

என்ன மாற்றம் நிகழ்ந்தது
எதுவுமே இல்லை!
தமிழன் குட்டக் குட்டக்
குனிந்ததுதான் மிச்சமாகியது

இருந்த எச்சசொச்சமும்
இல்லாது போக
அம்மணமாய்...
ஆண்டியாய்...
நாடற்றவனாய்...
நடை பிணமாய்...

**மாவை. நா.கஜேந்திரன்**

# மௌனத்தின் தேடல்– 351



## வீர விளையாட்டு

மாட்டுவண்டி பூட்டி
மாடுகளை ஓட்டி
சவால்களை வென்று
சவாரி செய்து
சரித்திரம் கண்ட
தமிழர் வீர விளையாட்டை
மறவாது மறையாது
காத்து நிற்கும் காளையரே
கண்பொதுமுழுதுமிங்கே
கவனம் தப்புமென்றால்
விளையாட்டு யாவும்
விபரீதமாய் மாறும்
மரபை இங்கே
போற்றும் நீங்கள்
மக்கள் மனதில் என்றும்
நிலைத்து வாழ்வீர்

**சி.திவ்வியா**
**யா.ப.மெ.ம.வி**

## எழுச்சி

கழுத்தில் நுகத்தைச் சுமக்கும்
மாடுகள் போல துன்ப நுகத்தை
சுமக்கும் மக்கள்!
இழுத்தடிக்கும் காலத்தால்
விழுந்திடாமல் எழுச்சியுடன் எழும்ப
எழுச்சி விசையே விடுதலை
சுதந்திர வேட்கை

**சி.சுகிர்தமலர்**
**உரும்பிராய்**

## பாரம்பரிய வண்டிச் சவாரி

இரு காளைகளை
வண்டியில் பூட்டி
விறுவிறுப்பாக பயணிக்கும்
நம்ம ஊரு
மாட்டுவண்டி சவாரி
தரணியில் பவனிவரும்
காட்சியைக் காண
இத்தனை சனக் கூட்டம்
திரண்டனவோ!

**சி.பிரியங்கா**
**மட்டுவில் தெற்கு**

## மறந்து விடாதீர்கள்

தொன்று தொட்டு தொலைந்த எம்
வாழ்க்கையின் தொன்மைகள்
உண்மைகள் மாறாமல்
தொல்லியலாய் தூர
நின்று பார்க்கும்
துரோக விழிகளாய்
நாகரிகத்தில் நசுங்கிய–எம்
தேசத்தில் தமிழ்
பாரம்பரியத்தின் பரிணாம
வடிவமிது பாருங்கள்
பாதை ஓரம் நிற்பவரே!

**யாழ்.வாகீஷ், ஒட்டுசுட்டான்**

## சிறையும் வதையும்

பாரா முகமாயிராது
பாரம்பரியத்தை
பாதுகாக்கப் பாடுபடுவது
பாராட்டுக்குரியதாயினும்
குறைபாடுகள் தெரிவது
நிறைவைத் தருவதாயில்லை
எருதுகளுக்கிடையில்
பெரும் வேறுபாடுகள்
ஏற்றத் தாழ்வுகளிருப்பது
ஏற்கத் தகுந்ததல்ல
மனிதர்களுக்கு அடிபடின்
கைகள் உடனதை வருடும்
மிருகங்களுக்கு நாவும் வாலுமே
இவைகள் இங்கு சிறையில்

**க.நாகராசா, சங்கானை**

## வெற்றியே இலக்கு

வெள்ளை யென்னடா
கறுப்பு என்னடா
வெற்றியென்பதே
எமது இலக்கடா
நெட்டை யென்னடா
குட்டை யென்னடா
கடப்போம் முதலில்
வெற்றிக் கோட்டையே
கறுப்பும் வெளுப்பும்
பாரிய பிரச்சினை மனிதருக்கே
விடுவோம் அவர்களுக்கு
தோல்விகளை மட்டுமே
வேண்டாம் அது
மாடுகள் எங்களுக்கே
வேண்டியது எங்களுக்கு
வெற்றி மட்டுமே

**ஹோப் மேரிதாஸன்**
**வட்டுக்கோட்டை**

## வீரம் யாரிடம்

காளைகள்
இரண்டையும் விரட்டி
ஓட்டும் பெரியவர்களே!
பார்வையாளர்கள்
ரசிக்கும்படி வீரம்
காட்டுவது யார்?
மனிதர் அல்ல
ஐந்தறிவு கொண்ட
காளைகள் தான்.

**அபி குலமாலிகா**
**சங்கானை.**

# மௌனத்தின் தேடல் –352



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 10.05.2017ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

# தமிழினத்திற்கு பாதிப்பு நிச்சயம்









புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி இச்சட்டத்தைக் கொண்டுவர கடந்த அமர்வில் அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் இந்நாட்டில் அதிகளவில் பாதிக்கப்பட்ட இனம் என்றால் அது தமிழினம் மட்டுமே. இனவழிப்பு வரை பல இன்னல்களை சுமந்து நிற்கிறது தமிழினம்.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு எட்டு ஆண்டுகளை இம்மாதம் 18 ஆம் திகதியுடன் கடக்கவுள்ள நிலையிலும் பயங்கரவாதத் தடைச்சட்டம் ஏற்படுத்திய பாதிப்புக்களிலிருந்து மீள முடியாத நிலையில் தமிழினம் உள்ளது.

பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் அரசியல் கைதிகளாக சிறைகளிலும் புனர்வாழ்வு நிலையங்களிலும் இப்போதும் பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் உள்ளனர்.

அதேவேளை பயங்கரவாதிகள் என்று இலங்கை அரசால் அடையாளப்படுத்தப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த காணிகளையும் கையகப்படுத்தி உரிமையாளர்களை வீதிகளில் போராட வைத்துள்ளது.

அதுமட்டுமின்றி வடக்கு - கிழக்கில் காணாமல் போனவர்கள் என்று கண்ணீருடன் கையில் படங்களுடன் தேடி அலையும் பல்லாயிரக் கணக்கான உறவினர்களையும் உருவாக்கியுள்ளது.

முன்னாள் போராளிகள் 12 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களை வறுமையின் பிடியில் சிக்கவைத்து வாழ்வாதாரத்திற்காக போராடும் நிலையையும் அங்கவீனர்களாக பல்லாயிரக்கணக்கானவர்களையும் வாட்டி வதைக்கின்றது.

தமிழர் தாயகத்தில் 90 ஆயிரம் குடும்பங்களைத் தலைமைதாங்கும் நிலைக்குப் பெண்களைத் தள்ளியுள்ளது.

இவ்வாறு இனப்படுகொலை வரை கோரத்தாண்டவமாடிய அரச பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதே தமிழினத்தின் கோரிக்கை.

ஆனால், தமிழினத்தின் கோரிக்கையை புறம்தள்ளிய சிங்கள அரசு.அமைச்சரவையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கான அனுமதியைப் பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த யோசனைகளைப் புறம்தள்ளிவிட்டு இச்சட்டத்திற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளதாக அக்கட்சி அதிருப்தி வெளியிட்டுள்ளது.

அதிருப்தி , கண்டனம் இதைவிட அக்கட்சியால் வேறு எதைச் செய்ய முடியும். அக்கட்சியின் உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்க பயங்கரவாதத் தடைச்சட்டம் போனால் பயங்கரவாத 'எதிர்ப்புச் சட்டம் இன்றியமையாத ஒன்றே.

சிங்களவர்களின் பலத்த பாதுகாப்புடன் வாழும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சிலர் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியதற்கு அதிருப்தி வெளியிட்டது வெறும் கண்துடைப்பே.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி பச்சிளம் பாலகர்கள், கர்ப்பிணிப் பெண்கள், வயோதிபர்கள் என வகைதொகையின்றி கொன்றொழித்த இனப்படுகொலை அரசிற்கு இசைந்து கொடுத்து இணக்க அரசியலை கடந்த இரண்டாண்டுகளுக்கு மேலாக நடத்தி வருபவர்கள், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் காரணம் காட்டியாவது அரசிற்கு அழுத்தம் கொடுக்க முற்பட வேண்டாமா?

போர்க்குற்றங்களில் அரச படையினர் ஈடுபட்டிருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படமாட்டார்கள் என்பதைப் பலமுறை உறுதிப்படுத்திய மைத்திரி - ரணில் கூட்டரசுடன் இணைந்திருப்போர் தாம் சார்ந்த தமிழினத்திற்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க முற்படுவார்களா?

தமிழினம் நீதியைப் பெற்றுவிட வேண்டுமென்று காத்துக்கிடக்கிறது. நீதியோ நீண்ட தூரத்திற்கு விலகிச் சென்றுவிட்டது. இந்நிலையில் முன்பிருந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கிவிட்டு அதைவிட மோசமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டுவர சிங்கள அரசு அமைச்சரவையில் அங்கீகாரம் பெற்றுவிட்டது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் எந்தச் சட்டம் வந்தாலும் தமிழினத்திற்கு பாதுகாப்பை ஏற்படுத்துவதற்குப் பதிலாக பாதிப்பை ஏற்படுத்தும் என்பது கடந்த கால கசப்பான அனுபவங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

சிவில் சட்டங்களாக இருந்தாலும் சிங்களவர்களுக்கு ஒரு நீதியும் தமிழர்களுக்கு ஒரு நீதியுமே கிடைத்தது. இதனால் தான் இலங்கை அரசின் அரசியல் அமைப்பு முறையை தமிழினம் கடந்த 30 ஆண்டுகளாக முற்றாக நிராகரித்து வந்தது.

தமிழினம் சிங்கள அரசின் அரசியல் முறையை நிராகரித்ததற்கு ஆட்சியாளர்கள் தான் முழுக்காரணம். சட்ட திட்டங்களுக்கு தமிழினம் என்றும் எதிரானதல்ல. நீதி தொடர்ந்து மறுக்கப்பட்டு வரும் நிலையிலும் சட்ட நடவடிக்கைகளுக்கு தற்போதும் முகங்கொடுத்து வருகின்றது.

சட்டத்தைக் கையில் எடுக்காது சாத்வீக வழியில் போராடியே உரிமைகளை வென்றெடுத்து வருகின்றது. காணி விடுப்புக்காக வடக்கில் தொடரும் போராட்டங்கள் இதற்கு தக்க சான்று.

அதேவேளை காணாமற்போன தமது உறவுகளை உயிருடன் மீட்க வேண்டும் என்ற ஒற்றைக் கோரிக்கையுடன் வெயிலிலும் மழையிலும் வீதியோரங்களில் காத்துக்கிடக்கின்றனர்.

எனவே, பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்கிவிட அரசு முயற்சிப்பதாக சர்வதேச நாடுகளுக்கு காட்டிவிட்டு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டுவர அமைச்சரவையில் அங்கீகாரம் பெற்றுவிட்டது.

இச்சட்டம் நிச்சயம் தமிழினத்திற்கு நன்மை பயக்காது. ஆனால், தீமையை விளைவிக்காத சட்டமாக மாற்றியமைக்கவா்வது பாடுபட வேண்டும்.

தமிழினத்தைச் சார்ந்த அதிகார வர்க்கத்தினர் இது குறித்து அவசரமாக ஆலோசனை நடத்தி அடுத்த கட்டத்திற்கு செல்ல வேண்டும்.

தமிழினத்தை நோக்கி மற்றுமொரு ஆபத்து நெருங்கி வருகிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். தமிழினம் அழிந்தது போதும்.

எஸ்.ஆர்.கரன்

# திண்மக்கழிவு முகாமைத்துவத்தில் உயிர் வாயுத் தொழில்நுட்பத்தின் அவசியம்

ஷரண்யா ஜெயராஜா (LL.B)
இலங்கைச் சட்டக் கல்லூரி



அனர்த்தங்களும் அழிவுகளும் இப்பொழுது வரலாறு காணாத வகையிலே உலகை அச்சுறுத்துகின்றன.

நஞ்சு கலக்காத நிலம், நீர், தென்றல் இவற்றோடு சிநேகித்து இயற்கையை அனுசரித்து வாழ்ந்த காலத்தில்இப்படிப்பட்ட இடர்கள் இந்தளவுக்கு நேர்ந்திருக்கவில்லை என மூத்தோர் ஆதங்கப்படுகின்றனர்.

இயந்திரம்,இரசாயனம், ஆராய்ச்சிகள் என அபிவிருத்தி என்னும் போர்வையிலே பூமியை ஆக்கிரமிக்கத்தலைப்பட்டதன் விளைவு இப்படி அழிவுகளாக மாறிவிட்டிருக்கின்றன. நிலம் நஞ்சாக்கப்பட்டதோடுநிலத்தடிநீர்மட்டமும்குறைந்து கொண்டே செல்கின்றது.

பசுமை போர்த்திய இடங்களெல்லாம் கருகி, கட்டாந்தரையாகி பாலை பெருகி பயனற்றுக் கிடக்கின்றன.

ஆழியில் எண்ணெய்க் கலப்பு, நீர் நிலைகளில், நிலத்தடியில் தொழிற்சாலைக் கழிவுகள், வான வெளி ஓசோன்படையில் துவாரம்.

இந்தப் பூமிப் பந்தின் எங்கும் இரசாயன மற்றும் இலத்திரனியல் குப்பைகள்.

இவ்வாறு மனித நாச வேலைகளின் விளைவாக ஏற்பட்ட அழிவுப் பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது.

மனிதன் செல்லுமிடமெல்லாம் மாசாக்கத்திற்கு மட்டும் பஞ்சமில்லை. பஞ்சம் பட்டினிக்கும் பஞ்சமேயில்லை.

நிலைபேண் அபிவிருத்தியைக் கருத்திற்கொள்ளாது மேற்கொள்ளப்பட்ட தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளே இவற்றுக்கெல்லாம் முக்கிய காரணமாகும்.

பெறுமதிமிக்க உயிர்களைக் காவு கொண்ட மீதொட்டமுல்ல குப்பை மேட்டு அனர்த்தமே இப்பொழுதுபெரும்பாலான ஊடகங்களிலும் அரசியல் மேடைகளிலும் சர்ச்சைக்குரிய பெரும் பேசு பொருளாகமாறியிருக்கிறது.

திட்டமிடப்பட்ட முறையான திண்மக் கழிவகற்றல் செயற்றிட்டமொன்றுநாடு தழுவிய ரீதியில்முன்னெடுக்கப்பட்டிருந்தால் மீதொட்டமுல்லயில் குப்பை மேடு ஒன்றே உருவாகியிருக்காது என்பது வாதம்.

பிரித்தழியாத பல நச்சு மூலப் பொருட்களைக் கொண்ட இலத்திரனியல்சாதனங்களும் அவற்றின் உள்ளடக்கங்களும் கூட குப்பைகளாக குவிக்கப்படுகின்றபோது அது பேராபத்தினையே விளைவிக்கும் என்பது இப்பொழுது நிதர்சனமாகியிருக்கிறது.

நாட்டிலுள்ள பல்வேறு குப்பை மேடுகள்நச்சு உள்ளடக்கங்களை பூமிக்கு சேர்க்கும் களஞ்சியங்களாகவும்இருக்கைகளாகவும்பயன் படுகின்றன.

உதாரணமாக பி.வி.சி. எனப்படும் அதிகளவு இலத்திரனியல் சாதனங்களில்காணப்படும்சேர்க்கை எரியும்போது வெளிவிடும் புகை ஓசோன் வெளியீடுகைகளைத் தடுக்கும்.

ஆசனிக். கணனி மற்றும் கைத் தொலைபேசிகளின் சில்லிகள் (சிப்புகளில்) காணப்படுபவை புற்று நோய்க்காரணியாகும்.

கட்மியம்,மின்கலங்களில்பொதுவாகக் காணப்படும் இது சுவாசக் குறைபாடுகள் மற்றும் இரத்த அமுத்தம்,சிறுநீரகநோய் என்பனவற்றோடு முக்கியமாகபுற்றுநோயை உண்டாக்கக்கூடிய காரணியாகும் கண்டறியப்பட்டுள்ளது.

பார்ப்பதற்கு அழகாகக் காணப்படும் இரசம் மிகவும் ஆபத்தானது. புளோரொளிர் மின்குமிழ் மற்றும் மின்கலங்களில் காணப்படும் இது தோல் வியாதிகள்,சுவாசக் குறைபாடுகள்:இருதயக் குறைபாடுகள் மற்றும்கண் பாதிப்புகளுக்கு வழி வகுக்கும்.

நீண்டநாள் தாக்கமாக பிறப்புக் குறைபாடுகள் மூளை மற்றும் சிறுநீரக நோய்களையும் உருவாக்கும் என்று கூறப்படுகின்றது.

அத்தோடு குறோமியம் ஒரு புற்றுநோய்க் காரணி என்பதுடன் பிறப்புரிமைப் பொருளான டீ.என்.ஏ. இல் பிறழ்வுகளை ஏற்படுத்தும் விகாரமாக்கியாகும் என்றும் ஆய்வுகளில் விபரிக்கப்பட்டுள்ளது.

வெளிப்பார்வையில் வெறும் பொருளாக காணப்படும் இந்த இலத்திரனியல் சாதனங்கள் மொத்தத்தில் ஒரு இயற்கையின் இயல்புத் தன்மையை நஞ்சாக மாற்றும் நாசப் பொருட்கள்தான்.

உலகில்நாளொன்றுக்கு சுமார் 112000 கணனிகள் அழிக் கப்படுவதோடு பல இலட்சம் மின்கலன்களும் வீசப்படுகின்றன. இவை குப்பை மேடாக உயரும் போது, அதனால் உண்டாகும் அழிவினை எவராலும் ஈடுசெய்ய முடியாது என்பதற்கு மதொட்டமுல்ல அனர்த்தம் சாட்சி.

ஒரு நாடு பொருளாதார ரீதியில் ஸ்திர நிலையை அடைவதற்கு அபிவிருத்தி நடவடிக்கைகள் மிகவும் அவசியம். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

இருப்பினும் தீட்டப்பட்டு அமுலாக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தூர நோக்குடையதாக இருக்க வேண்டும்.

தற்போது நம் கைவசம் இருக்கின்ற வளங்கள் இனி வரப்போகின்ற எதிர்கால சந்ததிக்கு உரித்தானவை என்ற உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும்.

அவர்களின் உரிமைகளைப் பாதிக்காத வகையிலே தற்போதிருக்கின்ற வளங்களை வினைத் திறனுடன் பயன்படுத்தி அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பதே நிலைத்து நிற்கும் அபிவிருத்தி ஆகும்.

மீளப்புதுப்பிக்கக்கூடிய வளங்களுக்கு அவை மீள் உற்பத்தியாவதற்கான கால இடைவெளி வழங்குவதனூடாகவும், மீளப் புதுப்பிக்க முடியாத வளங்களை மீள் சுழற்சிக்குட்படுத்துவதன் மூலமும், திட்டமிட்ட முறையிலே பயன்படுத்துவோமானால், நம் முன்னால் படையெடுத்து நிற்கின்ற எத்தனையோ சூழல் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வுகளைக் காண முடியும்.

உதாரணமாக திண்மக் கழிவகற்றல் செயற்றிட்டத்தில் உக்கக் கூடியவை உக்கிப் போகாதவை என வேறுபடுத்திக்கழிவுகளைப் பராமரிக்கின்றபோது திண்மக் கழிவகற்றல் என்பது பெரும் பிரச்சினையாக உருவெடுக்காது.

கழிவுகளை அதே வடிவிலோ அல்லது மாற்று வடிவிலோ மீள் சுழற்சிக்குட்படுத்தி பாவனைக்கு உகந்ததாகபயன்படுத்த முடியுமானால் சூழலையும் வளங்களையும் பாதுகாப்பதில் அது பெரும் வெற்றியாக அமையும்.

பிரிகையடையக்கூடிய கழிவுகளை உக்கச்செய்து இயற்கை உரமாகவோ அல்லது உயிர் வாயுத் தயாரிப்பிற்கோ பயன்படுத்த முடியும்.

சேதனப் பொருட்களை உயிர் வாயுத் தயாரிப்பிற்குப் பயன்படுத்துவதன் மூலம் கழிவுகள் இயங்கியல் முறையாக அப்புறப் படுத்தப்படுவதோடு மெதேன் வாயு மூலம் எரிசக்தியையும் பெற்றுக் கொள்ள முடியும்.

இதன்போது பெறப்படும் கழிவுகள், பயிர்ச் செய்கைக்கான சிறந்த சேதனப்பசளையாகப்பயன் படுத்தவும்முடியும். ஒட்சியேற்றமில்லாத சமிபாடு என்று அழைக்கப் படும்செயன்முறை மூலமாக தயாரிக்கப்படுகிறது.

காற்று இல்லாத போது உயிர் அணுக்களின் செயற்பாட்டினால் சேதனப் பொருட்கள் பிரிகையடைவதே இந்த நடைமுறையாகும். இந்த நடைமுறையில் இயற்கையாகவே மீதேன் வாயு உற்பத்தி செய்யப்படுகிறது.

உயிர்வாயுவில் 55 தொடக்கம் 70 வீதம் மெதேன்காணப்படுவதால் இதனை சிறந்த மாற்றுச் சக்தியாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

தற்போது பல்வேறு உயிர் வாயு அலகுகள் காணப்பட்டாலும் இந்தியா, சீனா மற்றும் இலங்கைத் தயாரிப்புக்களே இலங்கையில் பெரிதும் பாவனையிலுள்ளன.

இந்திய தயாரிப்புக்களில் ஒரு உருளை வடிவத்தாங்கியும்மிதந்து கொண்டிருக்கும்நீர் மூடியும்காணப்படும். இவை வாயு உற்பத்தியாகி களஞ்சியப்படுத்தப்படுவதற்குப் பெரிதும் உதவுகின்றன.

சீனத் தயாரிப்புக்களில் கொங்கிறீற்றினால் நிர்மாணிக்கப்பட்ட குவிவான வடிவமுடைய அமைப்பு காணப்படும்.

இந்த குவிவான தோற்றமுடைய அமைப்பின் மேற்பக்கத்தில் வாயு சேகரிக்கப்படும். அதே வேளை அதன் கீழ்ப்பக்கத்தில் மூலப்பொருட்கள் சமிபாடடைதல் நடைபெறும்.

இலங்கை வகைத் தயாரிப்புக்கள் இந்தியா மற்றும் சீனா ஆகிய இரண்டு வகைகளையும் கொண்டதாகக்காணப்படும்.

சமிபாட்டைதல்செயற்பாடு சீன வகைத் தயாரிப்பு போன்ற குவிவான அமைப்பினுள் நடைபெறும். இந்திய வகைத் தயாரிப்புக் களைப் போன்று இங்கேயும் நீர்புகாத மூடியில்வாயுசேகரிக்கப்படும்.

இதிலுள்ள வேறுபாடு யாதெனில் மிதந்து கொண்டிருக்கும் இந்த மூடி நீர் நிரப்பப்பட்ட வேறான ஒரு பாத்திரத்தின் மீது பொருத்தப்பட்டிருக்கும்.

இந்த உயிர் வாயுத் தயாரிப்புத் தொழில்நுட்பமானது, திண்மக்கழிவகற்றல் பிரச்சினைக்கான சிறந்ததொருதீர்வு எனலாம்.

இதனை கிராமிய மட்டத்திலிருந்தே விஸ்தரிக்க வேண்டும். சாதாரண வீட்டுப்பாவனை தொடங்கி பாரிய பயிர்ச்செய்கை, தொழில் முயற்சி வரையில் இது ஊக்குவிக்கப்பட வேண்டும்.

அது தொடர்பான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி அடி மட்ட மக்களிலிருந்து அதிகாரிகள் வரை அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும்.

ஸ்தாபிப்பதற்கான நிதி வசதிகள், கடன் உதவிகள் வழங்கப்பட அரசினால் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். குறுகிய இடவசதியிலும் கூட சிறப்பாக அமைப்பதற்காகப் பயிற்சிகளை வழங்க வேண்டும்.

மீதொட்டமுல்ல குப்பை மேட்டு சரிவின் பின் கழிவகற்றல் செயன்முறையில் பாதிப்பு ஏற்பட்டமை தவிர்க்கமுடியாத ஒன்று.

உணவகங்களில் இருந்தே அதிகபடியான கழிவுகள் வெளியேற்றப்படுவதாக, அதன் பின் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இவ்வாறான உணவங்கள், சிற்றுண்டிச் சாலைகள் போன்றவைகளில் உயிர்வாயுத் தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் கழிவற்றல் பிரச்சினைக்குத் தீர்வு கிடைப்பதோடு எரிபொருள் செலவும்கட்டுப்படுத்தப்பட்டு வருவாய் அதிகரிக்கும்.

இவற்றைக் கருத்திற் கொண்டு உயிர் வாயுத் தொழில்நுட்பம் மற்றும் சேதனப் பசளைத் தயாரிப்பு என்பனவற்றை மக்களிடம்கொண்டு சேர்ப்பிக்கும் பணியினை ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் ஸ்விட்ச் ஏசியா Switch Asia, People in Need பீப்பிள் இன் நீட், மற்றும் ஜனதாக்ஸன் Janathakshan ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைந்து நாடு பூராகவும் இந்த செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளன.

நிலைத்து நிற்கும் அபிவிருத்தியினை கட்டியெழுப்புவதும், தற்போது நிகழும் காலநிலை மாற்றத்தை கட்டுக்குள்வைத்திருப்பதற்கும் உயிர் வாயுத் தொழில்நுட்பத்தின் அவசியத்தினை வலியுறுத்தும் முகமாக இந்த செயற்றிட்டங்களை மேற்கொள்வதாக அந்த நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

இது விடயமாக அரசாங்க, கூட்டுத்தாபன, திணைக்கள, வங்கி, உள்ளூராட்சி நிர்வாக மட்டத்திலுள்ள அனைவருக்கும் பயிற்சிகளும் விழிப்புணர்வுகளும் வழங்கப்பட்டுள்ளன.




மேலும், சமூக மட்ட நிறுவனங்கள், கிராமிய மக்கள் மற்றும் கட்டுமானப் பணிகளில் ஈடுபடுவோருக்கும்பயிற்சிகளும் அனுசரணைகளும்வழங்கப்பட்டுள்ளன.

இதன்போது திண்மக்கழிவு முகாமைத்துவம், சேதனப் பசளைத் தயாரிப்பு, உயிர் வாயுத் தொழில்நுட்பம், நிலைத்து நிற்கும் அபிவிருத்தி மற்றும் அதனை முன்னெடுத்துச் செல்வதற்கான செயற்றிட்டங்கள், தொடர்பாக தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்திருக்கின்றன.

இது சமகாலப் பேரழிவைத் தடுப்பதற்குத் தேவையான தக்க நடவடிக்கை என்பதால் இதனை அமுல்படுத்துவதில்அனைவரும் அக்கறை செலுத்த வேண்டும்.

சிறுகதை



# பிரார்த்தனை பலித்தது

கலா சிறுவயதில் இருந்தே தெய்வ பக்தியுடையவளாக இருந்தாள். தாயார் விரதம் இருக்கும் நாளில் தானும் விரதம் இருக்கப் போகிறேன் என்று பக்தியுடன் விரதம் அனுட்டிப்பாள். எமது சமயம் சிவனை முழு முதற் கடவுளைக் கொண்ட சைவசமயம் என்றாலும் நாம் சமயக் கடவுள்களாகச் சிவன், அம்பாள், விநாயகர், முருகன், நாராயணர் என இந்து சமயக் கடவுள்கள் யாவரையும் போற்றிப் பூசித்து வணங்குகிறோம் அல்லவா? அவ்வாறே கலாவும் தன் ஊரில் கோயில் கொண்டருளிய நாராயணனைத் தன் குலதெய்வமாக வழிபடுவாள். ஆயினும் சிவராத்திரி, நவராத்திரி, சதுர்த்தி, ஏகாதசி என எல்லா விரதங்களையும் அனுட்டிப்பாள். ஊராரும் அவளது பக்தியை பற்றிச் சிறப்பாகப் பேசிக் கொள்வர்.

பதின்மூன்று வயதில் தந்தையை இழந்த கலா தாயின் சிறந்த பராமரிப்பில் வளர்ந்து சாதாரண தரம் வரை கல்வி கற்றுத் தேர்ந்து உயர்தரமும் கற்றுப் பரீட்சை எழுதினாள். படிப்பில் நல்ல திறமையானவளாக இருந்தும் பரீட்சையில் ஒரு பாடமே அவளால் சித்தியெய்த முடிந்தது. அவள் சிறு வயதில் இருந்தே சிறிய மறதிக்குணம் உடையவளாக விளங்கினாள். குறுகிய நேர மறதிக் குணத்தால் பல கஷ்டங்களை அனுபவித்தாள். ஒரு பொருளைக் கவனமாக வைக்கும்படி கொடுத்தாள் கவனமாக வைப்பாள். பின்னர் அப்பொருளை எங்கே வைத்தாய் என்று கேட்டால் வைத்த இடத்தை உடனே மறந்து விடுவாள். நீண்ட நேர யோசனைக்குப் பின்தான் அவளுக்கு அப்பொருளை வைத்த இடம் ஞாபகத்திற்குவரும். இப்படியாக அவளது காலம் போய்க்கொண்டிருக்கும்போது தாயாரும் நோய் வாய்ப்பட்டு மறைந்து விட்டார். தமக்கையாருடன் வாழ்ந்து வந்தாள். வீட்டு வேலைகள் செய்வது. தையல். பின்னல் வேலைகள் செய்வது, மாதர் சங்கச் செயற்பாடுகள் மூலம் கிராம முன்னேற்ற வேலைகளில் ஈடுபடுதல் முதலிய சேவைகளினால் கலா ஊரில் எல்லோரிடமும் நற்பெயர் பெற்றிருந்தாள். தமக்கையார் அவளுக்கு நல்ல கணவனைத் தேடி திருமணம் செய்து வைத்தார். கலாவின் கணவர் அரச பணியில் சேவையாற்றியதுடன் மிகவும் பொறுமையும் நேர்மையும் உடையவர். கடவுள் நம்பிக்கை இருந்தாலும் வெளியில் காட்டாமல் கலாவின் தீவிர தெய்வ பக்தியை, நம்பிக்கையைக் கண்டு சில சமயம் பரிகசிப்பார். ஆனால் கலாவோ என்ன கஷ்டம் வந்தாலும் எனக்குக் கடவுள் இருக்கிறார்; எனக்குத் துணை நிற்பார் என்று சொல்லி கஷ்டத்திலும் மலர்ந்த முகத்துடனே தான் இருப்பாள். அவளது சிறு மறதிக் குணத்தால் ஏற்பட்ட கஷ்டங்கள் எல்லாம் இறைவன் அருளால் நீங்கி விட்டது எனச் சொல்வாள்.

அவள் திருமணம் நடந்த நாளிலிருந்து என்றுமே தாலியைக் கழுத்திலிருந்து கழற்றுவதே கிடையாது. கணவருடன் வெளியூரில் வசித்தபோதும் பயணங்களின் போதும் தாலி யைக் கழுத்தில் இருந்து கழற்றாமல் சேலையால் போர்த்தபடியே பாதுகாப்பாகப் போட்டிருப்பாள்.

எங்கள் ஊரில் வீட்டுக் கிணற்று நீர் உவர் நீராதலால் நாங்கள் குடிப்பதற்கு. குளிப்பதற்கு வயற்பக்கக் கிணறுகளுக்கே செல்வது வழக்கம். அன்றும் சனிக்கிழமையாதலால் கலா கணவருடன் பிள்ளைகள் இருவரையும் விட்டுவிட்டு எண்ணெய் தேய்த்து முழுகுவதற்காக வயற் கிணற்றுக்கு வந்தாள். அங்கு நானும் வேறு பிள்ளைகளும் குளித்துக் கொண்டிருந்தோம். கலாவைக் கண்டதும் அவளின் கழுத்தில் கறுப்புக் கறுப்பாக கரப்பன் படர்ந்திருந்ததைக் கண்டு உதென்ன கலா கழுத்தெல்லாம்? என்றேன். அதுதான் அக்கா ஒரு சொறி மாதிரிப்படர்ந்து சரியான கடி. அரப்புத் தேய்த்து உரைஞ்சிக் கழுவி முழுகுவம் என்ற வந்தனான் என்றாள்.

நாங்களும் குளித்து முடிந்ததால் சரி கவனமாக முழுகிவிட்டு வா. கழுத்திலான் கவனம் என்று சொல்லிவிட்டு வந்தோம். கலாவும் கொடியைக் கழற்றி மாற்று உடுப்புகளுக்கு மேல் வைத்துவிட்டு கழுத்திலுள்ள சொறிக்கு அரைப்பைத் தேய்த்து தலைக்கும் தேய்த்து முழுகினாள்.

ஆறுமுகநாவுலரின் பாலபாடத்தில் படித்த முறைப்படி எந்த வேலையைச் செய்யத் தொடங்கும்போதும் முடிக்கும் போதும் கடவுளைத் தியானிப்பதில் கலா தவறமாட்டாள். அன்றும் அவ்வாறே கடவுளைத் தியானித்துக்கொண்டு முழுகி முடித்ததும் மாற்று உடுப்புகளின் மேலிருந்த துவாயை எடுத்து தலையைத் துவட்டி அதனால் தலை முடியைச் சுற்றி முடிந்து கொண்டு உடுப்பை மாற்றி மீதித் துணிகளையும் கழுவி முடித்து வீட்டுக்குச் சென்றாள். வீட்டுக்குச் சென்று துணியைக் காயவிட்டபின் தலையிலிருந்த துவாயைக் கழற்றி தலைமுடியை உலர்த்தியபோதே அவளுக்கு தாலிக்கொடியை உடுப்புக்களின் மேல் வைத்துவிட்டு எடுத்துப் போடாதது நினைவுக்கு வந்தது. அப்பா...' நாராயணா. ஐயோ கடவுளே என்று காயப் போட்ட இடத்திலிருந்து அலறினாள். கணவரும் பிள்ளைகளும் என்ன என்ன என்று கேட்டுக்கொண்டு ஓடிவந்து அவளைப் பார்த்தார்கள். அவள் கழுத்தில் கையை வைத்து அரப்புத் தேய்க்க கொடியைக் கழற்றிவைத்துவிட்டு எடுத்துப் போடாமல் மறந்துவந்துவிட்டேன் என்று கேவிக் கேவி அழுதாள். அப்போது அவள் எட்டு மாதக் கர்ப்பிணி. அதனால் கணவர் பதற்றப்படாமல் இரும் நான் போய்ப்பார்த்து எடுத்து வருகிறேன் என்று வயலை நோக்கி ஓடினார். அவளும் பின்னால் அழுதபடி சென்றாள். கலாவின் கணவன் சாந்தன் ஓடுவதையும் கலா அழுது கொண்டு போவதையும் வழியிலிருந்த குடிமக்கள் என்னணை என்னணை பிள்ளை என்று எல்லோரும் திரண்டு அவள் பின்னே சென்றனர். பிள்ளையின் கழுத்தில் கழுத்திலானைக் காணவில்லை. அவ ஒருநாளும் கழட்டிரேல்ல. இன்றைக்கு கழட்டி வைச்சிட்டு விட்டுவிட்டு வந்திட்டா போல என்று சொல்லிக்கொண்டு ஓடினார்கள். கலாவும் கிணற்றடியில் தான் வைத்த இடத்தில் இல்லாததைக் கண்டு ஓவெனக் கத்தி கடவுள்களின் பெயரைக் கூவி அழைத்து அரற்றினாள். களைத்தாள். மக்கள் கூடி அவளைப் பத்திரமாக வீட்டுக்கு அழைத்து வந்தனர். ஊரெங்கும் தாலிக் கொடி காணாமல்போன கதை பரவத் தொடங்கியது.

எல்லோரும் அவளின் பொருள் தொலையாது கிடைக்கும். எடுத்தவர்கள் கொண்டு வந்து கொடுப்பார்கள் என்றெல்லாம் பேசிக் கொண்டு கடவுளே மாங்கல்யப்பொருள் கிடைத்து விட வேண்டும் என எல்லோரும் அவரவர் பிரார்த்தனை செய்தனர். தாலிக் கொடியைக்கழற்றினால் கணவருக்குக் கூடாதகாலமாம். கடவுளே அவருக்கு ஒன்றும் நேராமல் காப்பாற்று. மாங்கல்யம் கிடைக்கச் செய் என்று பிரார்த்தித்துக் கொண்டு உறவினரின் ஆறுதலில் மனம் சிறிது தேறினாள்.

அடுத்த நாள் சாந்தன் அலுவலகம் புறப்பட்டுச் சென்றான். அலுவலக நண்பர்களுடன் தன் வீட்டு விடயத்தை கவலையுடன் கூறியபோது ஒரு நண்பர் கவலைப்படாதே சுட்டிபுரத்தில் ஒரு சாத்திரி இருக்கிறார். அம்மன் அருள் மிக்கவர். அவரிடம் போனால் பொருள் கிடைக்குமா? கிடைக்காதா என்று சொல்வார். செவ்வாய்க்கிழமை போய்வா என்றார். சாந்தனும் தனது மாமனைத் துணைக்குக் கூட்டிக் கொண்டு சுட்டிபுரம் சென்றார். சாந்தனுக்கு சாத்திர நம்பிக்கை இல்லை. ஆனால் ஒன்பது பவுண் தாலிக் கொடி புனிதமான பொருள் எப்படியும் கிடைக்க வேண்டுமே என்ற எண்ணத்துடன் நம்பிக்கையுடன் சென்றார். அங்கு அவர் பெற்ற அனுபவம் கடவுள் நம்பிக்கையை ஊட்டியது என பின்னாளில் கூறுவார்.

சாத்திரம் கேட்க வந்த பல மக்கள் சாத்திர சாமியின் குடிசையின் முன்னால் அமர்ந்திருக்கிறார்கள். சாந்தனும் மாமனும் அவர்களோடு சேர்ந்து அமர்ந்திருக்கிறார்கள்.

திடீரென் உள்ளே இருந்த சாமியார் நாராயணனுடன் வந்த சாந்தன் வா என்று கூப்பிட்டார். சாந்தனுக்கு உடம்பெல்லாம் புல்லரித்து படபடக்கும் நெஞ்சுடன் எழுந்து சாமியின் குடிசைக்குள் சென்றான். இரு என்றார் சாமியார் ஒரு காகிதத்துண்டில் சாந்தன்-கலா தாலிக் கொடி என்று எழுதி கேள்விக்குறியிட்டு சாந்தனிடம் நீட்டினார்.

கும்பிட்ட கரங்களினால் காகிதத் துண்டை வாங்கிப் பார்த்த சாந்தன் ஆமாம் சாமி என்றார். யார் எடுத்தது என்று சொல்ல வேண்டுமா என்று சாத்திரசாமி கேட்டார். சாந்தன் எடுத்தவர்கள் பற்றி வேண்டாம் பொருள் கிடைத்தால் போதும் சாமி என்று சொன்னதும் சாமி நீ மிக உயர்ந்த குணமுடையவன் தான். நாளைக்கு வீட்டு வளவில் உன் மனைவியைச் சுற்றிப் பார்க்கச் சொல்லு வளவில் இருக்கும். எடுத்த பின் வந்து சொல் என்று கூறினார். சாந்தனும் நன்றி கூறி வீடு வந்து நடந்தவற்றைக் கூறினான்.

அடுத்த நாள் அவனை அலுவலகம் அனுப்பி விட்டு பிள்ளைகளையும் முன் பள்ளிக்கு அனுப்பிவிட்டு கடவுள் சிந்தனையுடன் கலா வளவைச்சுற்றி வந்தாள். பசுக்கள் கட்டும் தொழுவம் பக்கமாக ஓரிடத்தில் பொருள் வைக்கப்பட்டிருந்தது. கலாவுக்கு இறையருளை நினைந்து ஆனந்தக் கண்ணீர் பெருகியது. பொருளைப் பக்தியுடன் எடுத்து அயலில் உள்ள தமக்கையார். மைத்துனியைக் கூவி அழைத்து பொருள் கிடைத்தது பற்றி கூறினாள்.

உடனே ஒருவரை ஒருவர் செய்தியைக் கூறி அயலெங்கும் செய்தி பரவியது. கலா கணவரின் மாமனுக்குச் செய்தியைக் கூறி கணவருக்கும் அவர் மூலம் செய்தியைத் தெரிவித்தாள். எல்லோரும் கலாவின் பிரார்த்தனையும் கலாவுக்காக மக்கள் செய்த பிரார்த்தனையும் பலித்தது எனக் கூறி மகிழ்ந்தனர்.

அப்போது அங்கு வந்த சமய குருவானவர் சமய குரவர்களின் இறை அற்புதங்களில் ஆற்றிட்ட பொன்னை குளத்தில் எடுத்தமை பற்றிக் கூறப்பட்டுள்ளவற்றை இக்காலப் பிள்ளைகள் நம்புவதற்கு கஷ்டப்படுவார்கள். இறைவனின் அருள் முழுமையான பிரார்த்தனைக்குக் கிடைக்கும் என்பது இம்மாதின் செயல் ஊடாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்று கூறினார். எல்லோரும் இறை மகிமையை நினைந்து அகமகிழ்ந்தனர்.

ச.சகலகலாவல்லி
பொன்னாலை

அவன்சரியான மென்டல்டா என்று ஜாலிக்காக பயன்படுத்தப் படும் வார்த்தைகள் இப்போது உண்மையாகிவிடுமோ என்கிற பதற்றத்துக்கு நம்மைத் தள்ளி யிருக்கின்றன.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு வரை மன அழுத்தம், டிப்ர ஷன் என்றால், என்ன என்று தெரியாத நாம்இன்று 10 வயதுசிறுவன்முதல் 70 வயது பாட்டி வரை எல்லோரை யும் தாக்கும் நோயாக முதலிடத் துக்கு முன்னேறியிருக்கிறது மன அழுத்தம்.



# மனசே மனசே குழப்பமென்ன?



இதயநோய், தொற்று நோய், புற்றுநோய், சுவாசக்கோளாறுகள் மற்றும் வீதி விபத்துகள் என்ற இந்த ஐந்தும்தான் உயிரைப் பறிக்கும் ஆபத்து கொண்டவை என அடையாளப்படுத்தப்பட்டவை. ஆனால், இன்னும் சில ஆண்டுகளில் இந்த ஐந்து காரணங்களை விடவும், மன அழுத்தப் பாதிப்பினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை தான் அதிகமாக இருக்கும் என்று எச்சரிக்கிறது உலகசுகாதார அமைப்பின் சமீபத்திய ஆய்வு.

மாறிவரும் வாழ்வியல் சூழல், நம்முடைய பணிச்சுமை, குடும்ப உறவுச் சிக்கல்கள், காற்றுதொடங்கி நீர் வரை அடைந்திருக்கும் மாசுபாடு என மன அழுத்தத்துக்கான காரணங்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. மன அழுத்தத்திலிருந்து விடுதலை தேடி சாமியார்களை நாடுவதும், மனநல ஆலோசனை பெறுவதும் அதிகரித்துள்ளன.

மன அழுத்தத்தை ஆரம்ப நிலை, மிதமானது, தீவிரமானது என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

ஆரம்பநிலை மன அழுத்தத்தால் பாதிக்கப்படுவோர், தானாகவே சரிசெய்து கொள்வார்கள். இதுகவலைக்குரியதல்ல. மிதமான மன அழுத்தத்தில் கவனமின்மை அதிகரிக்கும். தற்கொலை எண்ணம் வந்தாலும், அதைச் செயல்படுத்தத் தோன்றாது. நாளைக்கு சரியாகிவிடும் என்கிற நம்பிக்கை இருக்கும். கவுன்சிலிங் கொடுத்தாலே அதிலிருந்து மீண்டு விடுவார்கள்.

விடுபடத் தெரியாமல் அதிலேயே மூழ்கிப் போய் கிடப்பது தான் தீவிர மன அழுத்தம். தற்கொலை எண்ணம் துரத்தும். என்னால் யாருக்கும் எந்தப் பயனும் இல்லை எனத் தோன்றும். இதை மருந்து, மாத்திரை களால் மட்டும் தான் சரிப்படுத்த முடியும். இந்த மூன்றுநிலைகள் தவிர, யூனிபோலார் டிப்ரெஷன், பைபோலார் டிப்ரெஷன் என மேலும், இரண்டு வகையான மன அழுத்த நோய்கள் மனிதர்களைத் துரத்து கிறது என்கிறார் மனநல மருத்துவர் சுபா சார்லஸ்.


யூனிபோலார் டிப்ரஷன் என்பது சாதாரண மன அழுத்தத்துக்கும் தீவிரமடையும் நிலைக்கும் இடைப்பட்டதுதான் யூனிபோலார் டிப்ர ஷன்.

வருத்தமோ கவலையோ சில நாட்கள் மட்டுமே இருக்கும். அடுத்தடுத்த நாட்களில் அவற்றைக் கடந்து சாதாரண மனநிலைக்கு வந்துவிடுவார்கள். மீண்டும் மன அழுத்தத்துக்குள் போவார்கள். மறுபடி மீள்வார்கள். இதுதான் யூனிபோலார் டிப்ரெஷன்.

இன்னொருவகை. பைபோலார் டிப்ரஷன். இவர்களுக்கு கவலை அதீதமாக இருக்கும். அதிலிருந்துமீண்டுசகஜநிலைக்கு வருவார் கள். உடனடியாக சந்தோஷ மன நிலைக்குப் போவார்கள். கவலைக் கும் காரணம் இருக்காது.

அதீத சந்தோஷத் துக் கும் சரியான காரணம் இருக்காது. ஒருவாரம் கவலை, ஒரு வாரம் மகிழ்ச்சி அல்லது 15 நாட்கள் கவலை, அடுத்த 15 நாட் கள் மகிழ்ச்சி என இருப்பார்கள்.

புகழ் வெளிச்சத்தில் இருக்கும் பிர பலங்கள், அதிக வேலைப்பளு



கொண்ட உயர் அதிகாரிகள் இந்தப் பிரச்சினைகளை சந்தித்து வருகிறார் கள்.

ஒவ்வொருவருக்கும் மன அழுத் தத்துக்கான காரணங்கள் வேறு. மன அழுத்தத்திலிருந்து மீண்ட கதையைப் பகிர்வதைவிடவும், அப்படியொன்று இருப்பதை ஒப்புக் கொள்ளவும், அதற்குச் சிகிச்சை பெறவும்தான் அதிக தைரியம் தேவை. அது இருந்தால் மட்டுமே இந்த மன அழுத்த நோய்களிலிருந்து வெளியே வர முடியும்.

மன அழுத்தத்தை உண்டாக்குவதில் முக்கியமானவை சமூகக் காரணங்கள். வறுமை, யதார்த்தத்தை மீறிய எதிர்பார்ப்பு, திருப்தி யடையாத மனநிலை முதலானவை முக்கிய காரணிகள் என்கிறார்கள் மருத்துவர்கள்.

'கிளஸ்டர் சூஸைட்' என ஒன்று உண்டு. கொத்துக்கொத்தாக தற்கொலைகள் நடக்கும். ஒரு மாணவி பரீட்சையில் தோல்வியடைந்து தற் கொலை செய்திருப்பாள். அதைப் பார்த்து அதே தெருவில் வசிக்கிற இன்னொரு மாணவியும் வேறு ஏதோ ஒரு காரணத்துக்காக தற்கொலை செய்துகொள்வாள். வர்த்தக நிலை யத்தில் நட்டம் என தற்கொலை செய்வதும் இந்த ரகம்தான்.

அப்பா, அம்மாவின் சரும நிறத்தையும் சுருள் முடியையும் மரபணு மூலம் பிள்ளைகள் பெறுவது போலவே மன அழுத்தத்தையும் பெறுவார்கள் என்கிறது அறிவி யல். ஒரு குடும்பத்தில் தற்கொலை நடந்திருக்கிறது என்றால், அந்தக் குடும்பத்தின் மற்ற நபர்களை மிகக் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்தக் குடும்பத்துப் பிள்ளைகளை டேக் இட் ஈஸி பாலிசி மனப் பான்மையுடன் வளர்க்க வேண்டும்.

குழந்தைகளை விளையாட அனு மதிக்க வேண்டும். படிப்பு எவ்வளவு முக்கியமோ, அதே அளவுக்கு விளையாட்டுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். சிரித்துக் கொண்டும் பேசிக் கொண் டும், துள்ளிக் கொண்டும் இருப்பதுதான் குழந்தைகளின் இயல்பு. ஆனால், அதைக் கட்டுப்படுத்தி, ஒரே இடத்தில் உட்காரவைத்து, பிஞ்சிலேயே மன அழுத்தத்துக்கான விதையை ஊன்றுகிறோம்.

குழந்தைகளுக்கு விளையாட்டு என்றால் பெரியவர்களுக்கு உடற் பயிற்சி. இவற்றின் மூலம்தான் மூளையின் நியூரோ கெமிக்கல் சமநிலையின்மையைச் சரிப்படுத்த முடியும்.

மனிதனை சமூக விலங்கு என்றே சொல்கிறோம். அவனைச் சுற்றி நிறைய உறவுகளும் நட்புகளும் இருக்க வேண்டும். சக மனிதர் களுடன் கலந்து பேசி, பழகும் குணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

வெயில் படாத பகுதியிலேயே இருப்போருக்கும் மன அழுத்தம் அதிகமாக இருக்கிறது. வெயில் வெளிச்சம் தொடர்ந்து பட்டுக் கொண்டிருந்தாலே மன அழுத்தம் பாதியாகக் குறையும். பழங்கள் சாப்பிடுவதை எல்லோரும் பழக்கத்தில் கொண்டு வரவேண்டும்.

பழங்களில் ஃபீல் குட்ஃபேக் டர்ஸ் எனச் சொல்லப்படுகிற செரட்டோனின் போன்ற கெமிக்கல்கள் உள்ளன. அவை மனநிலையில் நல்ல மாற்றம் ஏற்படுத்தும் என சின்னச் சின்ன தீர்வுகள் சொல்கிறார்கள் மனநல மருத்துவர்கள்.

பகிர் தல் இல்லாமல்போன வாழ்க்கை முறைதான் மன அழுத்தம் அதிகரித்ததுக்கான முதல் காரணம். துக்கமோ சந்தோஷமோ, வெறுமையோ எதுவாக இருந்தாலும் உடனடியாக வீட்டில் உள்ள வர்கள், பெற்றோர், நண்பர்களிடம் பகிர்ந்துகொள்ள வேண்டும். எதை யுமே பகிராமல் பயந்துகொண்டே ஒவ்வொரு நாளையும் தொடர்வது தான் மன அழுத்தத்தின் முதல் நிலை.

பெரும்பாலான குடும்பங்களில் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகள் தான். உறவினர் வீடுகளுக்குப் போவதோ, திருமணம், மரண வீடுகளுக்குப் போவதோ குறைந்துவிட்டது. குழந்தைகளுக்காக உழைப்பதாக சொல்லிக் கொண்டு இரவும் பகலும் ஓடுகிறோம். ஆனால், அதே குழந்தைகளுடன் தினமும் அரைமணி நேரம் உட்கார்ந்து பேச எத்தனை பெற்றோர் தயாராக இருக்கிறார்கள்? எத்தனை அம்மாக்களுக்கு தம் பெண் குழந்தைகளின் மாத விலக்கு சுழற்சி நினைவில் இருக் கிறது? மகளுக்கு மாதம் தவறா மல் மாத விலக்கு வருகிறதா என்பதைக் கூட அம்மாவால் கவனிக்க முடியாதா?

குடும்பத்துக்கென நேரம் ஒதுக்கு வதுதான் மிக முக்கியமான தீர்வு. குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொரு வரும் மனம் விட்டுப் பேச வேண்டும்.

தங்கள் பிரச்சினைகளைத் தைரிய மாக பெற்றோரிடம் சொல்லலாம் என் கிற நம்பிக் கையைக் குழந்தைகளுக்கு ஏற்படுத்த வேண்டும்.

எதை யாவது சொல்ல வரும் போது, எரிந்து விழுவதும், அப்புறம் பேசலாம் என விலகிப் போவதும் கூடாது என்கின்றனர்




உளவியல் ஆலோசகர்கள்.


நாம் முடிந்தவரை எளிமையான வாழ்க்கையைத் திருப்திகரமாக வாழ்வதும், நம்மோடு இருக்கிற மனிதர்களோடு அதிக நேரம் செல வழிப்பதும், எதையுமே எளிய உரை யாடல்களின் வழி கடப்பதும் மன அழுத்தத்தைத் தவிர்ப்பதோடு நம் வாழ்வையும் மகிழ்வானதாக மாற் றும்.

- விகடன்


# வீட்டைக் காக்கும் டிஜிற்றல் காவலன்








▲ வீடியோ போன்கள்




▲ அலாரம் சிஸ்டம்



▲ சிசி டிவி கேமரா

▼ டிஜிட்டல் லாக்கர்



▼ டிஜிட்டல் லாக்கர்

ஜாலியாக ஒரு வாரம் சுற்றுலா செல்லலாம் என்று கிளம்புகிறவர்களின் ஏழு நாட்களையும் நிம்மதியாக இருக்க விடாமல் செய்ய ஒரு சிறிய பூட்டால் முடியும். காரணம். ஒழுங்காக வீட்டைப் பூட்டினோமா? வீட்டில் நுழைந்து யாராவது திருடிவிட்டால் என்ன செய்வது? இப்படிப் பல குழப்பங்கள் மனதில் ஓடிக்கொண்டே இருக்கும். பக்கத்து வீட்டுக் காரருக்கு அடிக்கடி போன் செய்து. அவரையே "காவல்காரரர்" ஆக்குவோம். நிரந்தரமாக ஒரு காவலாளி பணியில் இருந்தாலும் கூட. இந்தக் குழப்பம் மட்டும் இருந்து கொண்டே இருக்கும்.

இவற்றுக்கெல்லாம் தீர்வு சொல்லும் வகையில் இன்றைய தொழில்நுட்பங்கள் வளர்ந்துள்ளன. ஒரு வீட்டை யார் உதவியுமின்றி ஒற்றைத் தொழில்நுட்பம் கொண்டே பாதுகாக்க முடியும் என்கிற சூழலை இன்றைய அறிவியல் வளர்ச்சி நமக்கு அளித்துள்ளது. டிஜிற்றலாக எப்படியெல்லாம் நம் வீட்டை பாதுகாத்துக் கொள்வது என்பது தொடங்கி. யார் நம் வீட்டை உடைத்துத் திருட முயன்றது என்பது வரை எல்லாவற்றையுமே அறிய முடியும்.

வீடுகளில் பொருத்தும் வகையில் பல்வேறு டிஜிற்றல் பாதுகாப்பு சாதனங்கள் விற்பனையில் உள்ளன. இவற்றை குறிப்பாக மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். முதலாவதாக... வீட்டில் உள்ள பீரோ. லொக்கர் போன்றவற்றைப் பாதுகாப்பது. இரண்டாவதாக... வீட்டில் உள்ள கதவுகள். லொக்கர் கதவுகள் போன்றவற்றைப் பாதுகாப்பது. மூன்றாவதாக வீடியோ பதிவு செய்து உள்ளே நுழைய முற்பட்ட நபர் யார் என்பதை தெரிந்து கொள்வது.

'மக்கள் இன்று பாதுகாப்பு விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறார்கள். வீட்டைப் பூட்டிவிட்டு வெளியே சென்றாலும் கூட, எப்போதும் வீட்டோடு தொடர்பில் இருக்க வேண்டும் என்பதையே விரும்புகிறார்கள். அதற்கு டிஜிற்றல் தொழில்நுட்பம் நிறைய வழிவகை செய்கிறது.

லொக்கர்களிலும் அதிக கவனம் செலுத்துகிறார்கள். முக்கிய ஆவணம், நகைகள், பணம் ஆகியவற்றைப் பாதுகாப்பாக வைக்க லொக்கர்களைப் பயன்படுத்துகிறார்கள். முன்பெல்லாம் இவை உறுதியாக இருக்கும் வகையில் மட்டுமே வடிவமைக்கப்பட்டிருக்கும். இப்போது சென்சார்கள் போன்ற அமைப்புகளின் உதவியோடு வடிவமைக்கப்பட்டுள்ளன.


லொக்கரை யாராவது திறந்தாலோ, உடைக்க முயற்சித்தாலோ, உடனே நமது மொபைலுக்கு எஸ்.எம்.எஸ். வரும்வகையில் இதில் அலெர்ட் சிஸ்டம் உள்ளது. மேலும், இந்த லொக்கர்கள் தீ விபத்திலும் இடிபாடுகளிலும் சேதமாகாத உறுதியுடன் வடிவமைக்கப்படுகின்றன. இதன் விலை, அளவைப் பொறுத்து மாறுபடும். "பின் நம்பர்" உபயோகித்து திறப்பது. பயோமெட்ரிக் மூலம் கைரேகை வழியாக மட்டுமே திறப்பது என்று பல வசதிகளுடன் லொக்கர்கள் கிடைக்கின்றன.

அடுத்ததாக... கதவுகளுக்கான வீடியோ போன்கள். வீட்டில் இல்லாதபோது யார் வீட்டுக்கு வந்து சென்றிருக்கிறார்கள். வீட்டில் இருக்கும்போது யார் வந்திருக்கிறார்கள் என்பதை எளிதாகக் கண்காணிக்க முடியும். வீட்டை பூட்டிவிட்டு வெளியே சென்ற பிறகு. வீட்டுக் கதவு வரை யார் வந்து சென்றாரோ. அவரது புகைப்படத்தைச் சேமித்து வைக்கும் வசதியும் இதில் உண்டு. இதில் சென்சாரை இணைத்தால் போதும்... வீட்டை யாராவது தாக்கி உடைக்க முற்பட்டால் அலாரம் மூலம் அருகில் இருப்பவர்களுக்கும் வீட்டு உரிமையாளருக்கும் எஸ்.எம்.எஸ் மூலமாகவும் தகவல் தெரிவித்துவிடும். இவை வழக்கமான சிசிடிவி கமரா அமைப்பிலிருந்து வேறுபட்டவை.

மற்றொன்று... அலாரம் சிஸ்டம். வீட்டை பல விதங்களில் பாதுகாக்கும் இந்த அமைப்பு. 360 டிகிரிகளில் வீட்டின் அனைத்துப் பகுதிகளையும் பாதுகாக்கும். இதன் மூலம் தீ விபத்து ஏற்பட்டாலோ, யாராவது கதவை உடைக்க முயன்றாலோ அலாரம் மூலம் எச்சரிக்கை செய்யும். இதனோடு அளிக்கப்படுகிற ரிமோட் கருவியை வீட்டில் இருக்கும் முதியவர்கள், பெண்களிடம் கொடுத்து விடலாம். தவறான நபர்கள் உள்ளே நுழைய முயற்சிக்கும்போது ஒரு பட்டனை அழுத்தினால் அலாரம் "ஒன்" ஆகிவிடும். வீட்டுக்கு வெளியே இருக்கும் நபருக்கும் தகவல் சென்று விடும்.

இவை தவிர. வழக்கமான சிசிடிவி கமராக்கள், செல்போனுடன் இணைக்கப்பட்ட "கமரா ஆப்"கள் என மொடன் கருவிகள் ஏராளம் உள்ளன. வீட்டுக்கு வெளியே இருந்தாலும் "ஒற்றை ஆப்" வாயிலாகவே சகலத்தையும் கண்காணிக்கும் வசதி இன்று நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. இனி சுற்றுலாவுக்கோ, பணி நிமித்தமாக வெளியூருக்கோ சென்றால் கவலைப்பட வேண்டாம்... இந்த டிஜிற்றல் காவலாளி இனி உங்கள் மகிழ்ச்சிக்கு உத்தரவாதம்!

## உலக மெகா மரக் கட்டடம்!



தெற்கு ஸ்பெயின் நகரமான 'செவாலே'வில் உள்ள சேர்ந்த மெட்ரோபோல் பராசோல் **(Metropol Parasol)** என்கிற நிறுவனத்தால் 2011-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட கட்டடம்தான், மரப்பொருட்களால் உருவாக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய கட்டடம். 'ஜர்கன் மேயர்' என்கிற ஸ்பெயின் நாட்டுக்காரர், இந்தக் கட்டடத்தை வடிவமைத்தார். உலகெங்கும் இருக்கும் 50 புதுமையான கட்டடங்களில், ஆறு கட்டடங்களை வடிவமைத்தவர் என்கிற பெருமையும் இவருக்கு உண்டு. செவாலே நகரத்தின் மத்தியில் மியூஸியம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் பராசோல் நிறுவனம் ஈடுபட்டபோது, நூற்றுக்கும் மேற்பட்ட மாதிரிகளை ஜர்கன் மேயர் அனுப்பினார். அதில் தேர்வானதுதான் இந்தக் கட்டடம். ஸ்பெய்ன் நாட்டு மக்கள் மர வீடுகளை அதிகம் விரும்புபவர்கள். இப்போது. உலகம் முழுவதும் அனைவரையும் கவர்ந்த கட்டடமாக இது உள்ளது.

## பறக்கும் நரி!



உலகின் மிகப்பெரிய வௌவால் இனம். 'பறக்கும் நரி' என்று அழைக்கப்படும் இந்தியப் பழம்தின்னி வௌவால் தான். வௌவால்கள் ஆயிரக்கணக்கில் ஓரிடத்தில் வசிப்பதை. வௌவால் குடியிருப்பு **(Bat colony)** என்பார்-கள். இவை. தலைகீழாகவே தொங்கும். வௌவாலை, ரஷ்ய நாட்டில் 'பறக்கும் எலி' என்றும். ஸ்பெயின் நாட்டில். 'குருட்டு எலி' என்றும் செல்லமாகச் சொல்வார்கள். ஐக்கிய அமெரிக்காவில், கிட்டத்தட்ட 50 வகையான வௌவால்கள் வசிக்கின்றன. அமேசான் போன்ற அடர்ந்த காடுகளின் உட்பகுதியில் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட வௌவால்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. பெரும்பாலும் அளவில் பெரிய வௌவால்கள், பழம், பூக்களின் மகரந்தம், தேன் ஆகியவற்றையே உட்கொள்ளும்.

## ஓட்ட நாயகன்!




புகழ்பெற்ற லூனி ரூன்ஸ் கரக்டர்களில் ஒன்று, ரோடு ரன்னர் **(Road Runner).** இது. வட அமெரிக்காவின் பாலைவனப் பகுதிகளில் காணப்படும் ஒரு பறவை. குயில் குடும்பத்தைச் சேர்ந்த இதை. 'தரைக்குயில்' என்று சொல்லலாம். 52 முதல் 62 சென்றி மீற்றர் நீளம் இருக்கும்.

இந்தப் பறவையின் சிறப்பு, நீளமான வாலும் தரையில் ஓடும் வேகமும்தான். சுமார் 60 சென்றி மீற்றர் வரை வளர்ந்திருக்கும் வாலைத் தூக்கிக்கொண்டு மணிக்கு 32 கிலோமீற்றர் வேகத்தில் நிலத்தில் ஓடும் அழகே அழகு.

அதைப் பார்த்துத்தான் கார்ட்டூன் கரக்டராக உருவாக்கி, நம்மை வயிறு குலுங்கச் சிரிக்கவைத்தார்கள். இதன் விருப்பமான உணவு ஓணான், சிலந்தி போன்ற உயிரினங்களே.

## உலகின் எட்டாவது கண்டம்!



உலகின் எட்டாவது கண்டம், நியூசிலாந்து நாட்டின் அருகில் இருப்பதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இதுவரை ஆசியா, ஆபிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, அன்டார்ட்டிகா, ஐரோப்பா மற்றும் அவுஸ்திரேலியா என ஏழு கண்டங்கள் உலகில் இருக்கின்றன. கண்டங்கள் சம்பந்தமாகத் தொடர் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்த நியூசிலாந்து ஆராய்ச்சியாளர்கள், உலகின் எட்டாவது கண்டத்தைக் கண்டறிந்துள்ளனர். ஸீலாண்டியா என அழைக்கப்படும் அந்தக் கண்டத்தின் ஒரு சிறிய பகுதி மட்டும் நியூசிலாந்து அருகில், கடலுக்கு மேலாகத் தெரிவதாகக் கூறுகிறார்கள். இந்தக் கண்டத்தின் பரப்பளவு, 5 மில்லியன் சதுரகிலோ மீற்றர் எனவும் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

## காலத்தால் அழியாத கானங்கள் ...

படம் :- புதிய பறவை
பாடியவர் :- பி.சுசீலா
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்



ஆ...ஹா...ஆஹாஹா...ஹா.
ஆஹா...ஆ..அஹாஹா...
பார்த்த ஞாபகம் இல்லையோ
பருவ நாடகம் தொல்லையோ
பார்த்த ஞாபகம் இல்லையோ
பருவ நாடகம் தொல்லையோ
வாழ்ந்த காலங்கள் கொஞ்சமோ
மறந்ததே இந்த நெஞ்சமோ
பார்த்த ஞாபகம் இல்லையோ
பருவ நாடகம் தொல்லையோ

அந்த நீல நதிக்கரை ஓரம்
நீ நின்றிருந்தாய் அந்தி நேரம்
நான் பாடி வந்தேன் ஒரு ராகம்
நாம் பழகி வந்தோம் சில காலம்
பார்த்த ஞாபகம் இல்லையோ
பருவ நாடகம் தொல்லையோ
வாழ்ந்த காலங்கள் கொஞ்சமோ
மறந்ததே இந்த நெஞ்சமோ

இந்த இரவை கேள் அது சொல்லும்
அந்த நிலவை கேள் அது சொல்லும்
உந்தன் மனதை கேள் அது சொல்லும்
நாம் மறுபடி பிறந்ததை சொல்லும்
பார்த்த ஞாபகம் இல்லையோ
பருவ நாடகம் தொல்லையோ

அன்று சென்றதும் மறந்தாய் உறவை
இன்று வந்ததே புதிய பறவை
எந்த ஜென்மத்திலும் ஒரு தடவை
நாம் சந்திப்போம் இந்த நிலவை
பார்த்த ஞாபகம் இல்லையோ
பருவ நாடகம் தொல்லையோ
வாழ்ந்த காலங்கள் கொஞ்சமோ
மறந்ததே இந்த நெஞ்சமோ

## கனவுகளும் பலன்களும்



உத்தியோகத்தில் மேன்மை உண்டாகும். குடும்பத்தில் இருந்த சிக்கல்கள விலகி மகிழ்ச்சி ஏற்படும்.

ஆலயத்திற்குள் நுழைய முடியாமல் கூட்டத்தில் மாட்டிக் கொண்டு அவதிப்படுவது போல கனவு கண்டால், எதிர்பார்க்காத பிரச்சினையில் சிக்கிக் கொண்டு அவதிப்படுவீர்கள். உங்களின் வளர்ச்சியை கெடுக்கவே சிலர் முயற்சிக்கிறார்கள் என்பதை உணருங்கள். இறைவனை மனப்பூர்வமாக நம்புங்கள். சிக்கலில் இருந்து விடுபடவும் பணவிரயம் ஆகாமல் இருக்கவும் சிந்தித்து செயற்படுவது நல்லது.

இறைவனைக் கனவில் கண்டால், உங்களை வீழ்த்த யாராலும் முடியாது. பிரச்சினைகள் விலகி யோகங்கள் உங்களைத் தேடி வரும்.

வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். திருமணத் தடை விலகி நல்ல வரன் அமையும். ஆபத்திலிருந்து தப்பித்து விடுவீர்கள்.

இறைவனுக்கு மாலை போடுவது போல கனவு கண்டால், இலாபகரமான செயலில் ஈடுபடுவீர்கள். நல்ல வளர்ச்சியை அடைவீர்கள். பல பாக்கியங்களைப் பெற்றுச் சுகமாக வாழ்வீர்கள்.

திருவிழாவைச் சுற்றிப் பார்ப்பது போல கனவு கண்டால், வீடு-வாகனம், பொருட்கள் யோகம் குடும்பத்திலும் உங்கள் மனதிலும் சந்தோசம் இருக்கும். புதிய சுமை இருந்தாலும் அதை சுகமான சுமையாகவே கருதுவீர்கள்.

திருவிழாவில் யாரை யாவது தேடுவது போல கனவு கண்டால், தொழிலில் சில சங்கடங்கள், உறவில் விரிசல் போன்ற சிறுசிறு சங்கடங்கள் வரும். காலம் கடந்து கொண்டு இருந்த விடயங்களுக்கு புதிய வழி கிடைக்கும். அதனால் இலாபமும் உண்டாகும்.

சிலருக்கு கனவு கண்ட சில நாட்களிலேயே பலிக்கும். நல்ல கனவு கண்டால் மகிழ்ச்சி அடைவோம். அதுவே எதிர்மாறான கனவு கண்டால் அந்த கனவை நினைத்து வேதனைப்படுபவர்களும் இருப்பார்கள். அப்படி தீய கனவைக் கண்டவர்கள் இறைவனை நம்பிக்கையுடன் வணங்கினால் தீய கனவுகளும் வெறும் கனவாகவே ஆகிவிடும். மொத்தத்தில் இறை வன் ஒருவனே மிகப் பெரியவன். அவனையே முழு மனதுடன் நம்பினால் சங்கடங்கள் விலகி வாழ்நாள் முழுவதும் எதிலும் சாதிக்கலாம்- புகழ்பெறலாம்.

இரும்பு - இறந்து போனவர்-துணிகண்டால்

இரும்பு கனவில் வந்தால் என்ன பலன்

இரும்பை பற்ற வைப்பது போல கனவு கண்டால், உங்களை விட்டு பிரிந்தவர்கள் உங்களைத் தேடி வருவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத நன்மையும், இலாபமும் ஏற்படும். உங்கள் மனதை மாற்ற சிலர் முயற்சிப்பார்கள். ஆனால் நன்மையுடன் முன்னேறி வரலாம்.

இரும்பை உடைப்பது போல கனவு கண்டால், பல நாட்கள் வாட்டி எடுத்த பிரச்சினை விஸ்வரூபம் எடுக்கும். ஆனால் வெற்றி உங்கள் பக்கமே ஏற்படும். சிந்திக்கும் ஆற்றலும் நிதானப் போக்கும் உண்டாகும். உடன் இருப்பவர்களால் மனநிம்மதி குறையும்.

இரும்பை வாங்குவது போல கனவு கண்டால் எதிர்பாராத சங்கடங்கள், வேலையில் சிரமங்கள் உண்டாகும். பண விரயம், சந்தோசம் குறையும். எச்சரிக்கையாக நடந்து கொள்வதே நல்லது.

இரும்பை பிடித்து கொண்டு இருப்பது போல கனவு கண்டால், நீண்டநாள் நிலுவையில் இருந்த வழக்குகள் உங்களுக்கு சாதகமாகும்.

(தொடரும்)

## இப்படிச் செய்யலாமே!



எமது இலங்கைத் திருநாட்டில் வீதி விபத்துக்கள் இடம்பெறாத நாட்களே இல்லையென்று துணிந்து கூறக்கூடிய அளவிற்கு தினமும் விபத்துக்களும் மரணங்களும் அதிகரித்து வருகின்றன. அன்றாடம் பத்திரிகைகளைப் புரட்டியதும் முக்கிய செய்திகளாக வீதி விபத்துக்கள் பற்றிய பரிதாபகரமான சம்பவங்களையே பார்த்து வருகின்றோம். பொதுவாக இடம் பெறும் வாகன விபத்துக்களில் ஏதோ ஒரு வாகனத்துடன் மோட்டார் சைக்கிளும் சம்பந்தமாகி விடுவது வழமையாகி விட்டது. இது ஏனைய மோட்டார் வாகனங்களை விடச் சிறியதாக இருப்பதாலும் இரண்டே இரண்டு சக்கரங்களைக் கொண்ட சமனிலை வலுவைப் (Balance) பேணவேண்டிய தேவைகளைக் கொண்டிருப்பதாலும் இது விபத்துக்குள்ளாவது ஏனோ தவிர்க்க முடியாமல் போய் விடுகிறது. மோட்டார் சைக்கிளோட்டியின் கவனயீனம், போதிய சாரத்திய அனுபவமின்மை அல்லது மதுபோதை போன்ற இன்னோரன்ன காரணிகளைக் கூறிக் கொண்டே போனாலும் இதில் மற்றுமொரு அதிசயமென்னவெனில், விபத்துக்குள்ளாகும் மோட்டார் சைக்கிளோட்டியைவிட பின்னே அவருடன் அமர்ந்திருப்பவரே அதிகமான பாதிப்புக்குள்ளாவதைக் கவனிக்கலாம். இதற்கும் போதிய காரணங்களில்லாமலில்லை.

பொதுவாக மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் அமர்ந்திருப்பவர்களில் ஆண்கள் ஒருவிதமாகவும் பெண்கள் வேறு விதமாகவும் அமர்ந்திருந்து பயணிப்பதை காண்கிறோம். குறிப்பாக எமது யாழ். குடாநாட்டு பகுதி வாழ் பெண்கள் தமது இரண்டு கால்களையும் இடதுபுறமாக ஒரேபக்கத்தில் நீட்டி வைத்தபடி மிகவும் அலட்சியமாக அமர்ந்திருந்தே பயணிப்பது ஒரு வாடிக்கையான விடயம் என்றாகிவிட்டது. இளையவர்கள் மட்டுமில்லை, வயது முதிர்ந்த பெண்கள் மற்றும் நோயாளிப் பெண்களும் கூட இவ்வாறே அமர்ந்திருந்து பயணம் செய்வது நாம் தினமும் காணும் காட்சியாகும். இவ்வாறு ஒருபக்கம் கால்களைப் பரப்பி அமர்ந்திருப்பது மிகவும் அபாயகரமானது. ஆசனத்தில் முழுப்பகுதியையும் பயன்படுத்தி நிதானமாக, பாதுகாப்பாக அமர்ந்து கொள்ள முடிவதில்லை. மிக அந்தரமான ஒரு சூழ்நிலையிலேயே அவர்களின் பயணம் தொடர்கிறது. மோட்டார் சைக்கிளோட்டி சடுதியாக வண்டியை நிறுத்தும் பட்சத்தில் அல்லது வளைவுகளில் வேகமாகத் திரும்பும் வேளைகளில் பின்புறம் அமர்ந்திருப்பவர் வீதியிலே வீழ்ந்து விடக்கூடிய மிக ஆபத்தான வாய்ப்புக்களிருக்கின்றன. அண்மையில் மகனுடைய வேகத்தின் காரணமாகவும், திடீரென வண்டியை நிறுத்திய அதிர்வின் விளைவாகவும் தாயொருவர் விபத்துக்குள்ளாகி மரணமடைந்தது அனைவருமறிந்ததே! ஆண்களைப் போல இரண்டு கால்களையும் இரண்டு பக்கங்களிலும் பரப்பி நிதானமாக அமர்ந்திருப்பாராகவிருந்திருந்தால் நிச்சயம் இந்தப் பரிதாபகரமான சம்பவத்தைத் தவிர்த்திருக்கலாம்.

இன்னும் சிலர் ஆண்களுடன் பின் ஆசனத்திலிருந்து பயணிக்கும் போது அவர்களின் தோள்களையும் தொடையையும் மார்பையும் கட்டிப் பிடித்தபடி பயணிப்பதையும் காண்கின்றோம் அல்லவா! இதில் பாதுகாப்பு என்பது ஒரு புறமிருக்க பார்வைக்கு ஒரு அசிங்கமான காட்சியாகவும் தென்படுவதை யாரும் மறுதலிக்க முடியாது. நெருக்கமான அணைப்புக்கள் விபரீதங்களை விளைவிக்கக் கூடும். எனவே எமது பெண்களும் ஆண்களைப் போலவே இரண்டு கால்களையும் பரப்பி அமர்ந்திருந்து பயணம் செய்வதே பாதுகாப்பானது. இது எமது கலாசாரத்துக்கு எவ் வழியிலும் களங்கமாக இருக்கப் போவதில்லை. மாறாக மிகப் பெரும் பாதுகாப்பானதாக அமைந்து கொள்ளும். தலைநகர் தென்னிலங்கை மற்றும் வெளிநாட்டுப் பெண்கள் கூட இவ்வாறே பிரயாணம் செய்கின்றனர். எடுத்ததுக்கெல்லாடம் அவர்களின் நடையுடைகளையும் நாகரிகங்களையும் பின்பற்றும் எம் தமிழ்ப்பெண்கள் இந்த விடய த்தில் மட்டும் வெட்கப்படுவது ஏன்! இனியாவது சிந்திப்போமா?

**மிருசுவில் தமிழ்தாசன் மீசாலை.**

சினிமா செய்தி



திரைவிமர்சனம்

# எங்க அம்மா ராணி

தமிழ் சினிமாவில் ஹீரோயின்களை மையப் படுத்தி வரும் படங்கள் வெகு குறைவு. அந்த வகையில் தொடர்ந்து தரமான படங்களாக தேர்ந்தெடுத்து நடிப்பவர் தன்ஷிகா.

இவர் நடிப்பில் பாணி இயக்கத்தில் இன்று வெளிவந்துள்ள படம் எங்க அம்மா ராணி. தன்ஷிகா மலேசியாவில் ஒருவரை திருமணம் செய்து இரட்டை குழந்தைகளுக்கு அம் மாவாக இந்தியா திரும்ப முடியாமல் தவித்து வருகின்றார், தன்ஷிகாவின் கணவர் வெளி நாட்டிற்கு வேலைக்கு செல்ல, அவர் எங்கு இருக்கின்றார் என தெரியாத நிலை.

இந்நிலையில் தன்ஷிகாவின் மூத்த மகள் கொடிய நோயால் பாதிக்கப்பட்டு இறக்க, இரட்டையர்கள் என்பதால் அந்த நோய் அடுத்தவருக்கும் பரவுகின்றது.

ஏதாவது குளிர் பிரதேசம் சென்றால் அவரை காப்பாற்றலாம் என சொல்ல, வேறு இடத்திற்கு தன்ஷிகா தன் மகளுடன் குடிபெயர்கின்றார்.

அந்த இடத்தில் பல அமானுஷிய விடயங்கள் நடக்க, அதன் பின் என்ன ஆனது என்பதே மீதிக்கதை.

தன்ஷிகா இதற்கு முன் பரதேசி படத்திலேயே ஒரு குழந்தைக்கு அம்மாவாக நடித்தவர் தான், இதில் இரண்டு குழந்தைகளுக்கு அம் மாவாக நடித்துள்ளார், வளரும் போதே இப் படி துணிந்து நடிப்பது கண்டிப்பாக மனம் திறந்து பாராட்டலாம், அவரும் தன் நடிப்பை சிறப்பாக கொடுத்துள்ளார்.

படத்தில் இரட்டையர்களாக நடித்த குழந் தைகள் வர்ணிகா, வர்ஷா, இதில் வர்ணி காவே படத்தில் பல காட்சிகளில் வருவதால் அதிகம் கவர்கின்றார், குட்டி குட்டி எக்ஸ்பிர ஷன்களில் மனதை கொள்ளை கொள்கின் றார்.

முதல் பாதி கொஞ்சம் எமோஷ்னலாக செல்ல, இரண்டாம் பாதி என்ன ஆகப்போகின்றதோ என எதிர்பார்க்க, அடுத்தடுத்து வரும் அமானுஷிய காட்சிகள் படத்தில் எந்த இடத் திலும் ஒட்டவில்லை.

அதிலும் குழந்தைக்கு ஆவி பிடிக்கின்றது போன்ற காட்சிகள், அந்த ஆவியை தன்ஷிகா ஏற்றுக்கொள்வது என யதார்த்தம் மீறிய விடயம். கிளைமேக்ஸ் நோ கமெண்ட்ஸ். இளையராஜாவின் பின்னணி இசை படத்தின் மிகப்பெரிய பலம். ஒளிப்பதிவு மலேசியாவில் அழகாக படம் பிடித்து காட்டியுள்ளது, முன் பாதியில் காட்டிய எமோஷ்னல், யதார்த்தத்தை இரண்டாம் பாதியிலும் காட்டியிருக்கலாம் பாணி.

தன்ஷிகா படத்தின் முதல் பாதி. இளைய ராஜா பின்னணி இசை. குழந்தைகளின் நடிப்பு இரண்டாம் பாதி, நம்பக்கத்தன்மை இல்லாத கிளைமேக்ஸ்.

மொத்தத்தில் உறவிற்கான முக்கியத்துவத்தை அழகாக காட்டியிருந்தாலும், இன்னும் கொஞ் சம் யதார்த்தமாக கொண்டு சென்றிருந்தால் இன்னுமே பலராலும் ரசிக்கப்பட்டு இருப்பார் இந்த ராணி.


## பாகுபலி – 2 முன்பு அதிக கூட்டம் வந்துபடம் எந்துபடம் தெரியுமா?





பாகுபலி-2 தமிழகத்தில் வசூல் புரட்சி நடத்தி வருகின் றது. இப்படம் தமிழகத்தில் இதுவரை எந்த படமும் செய் யாத வசூல் புரட்சியை செய்துள்ளது. இந்நிலையில் இப் படத்திற்கு குடும்பம் குடும்பமாக மக்கள் வந்து செல்வ தாக விநியோகஸ்தர்களும், திரையரங்க உரிமையாளர் களும் தெரிவித்துள்ளனர்.

இதுவரை அதிக மக்கள் பார்த்த திரைப்படம் என்ற பெருமையை பாகுபலி-2 பெற்றுள்ளது. இதற்கு முன் இவ் வளவு கூட்டம் வந்தது சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்த படையப்பா படத்திற்கு தான் என பல விநியோகஸ்தர்கள் கூறியுள்ளனர்.



## பாகுபலி - 2 வசூல் சாதனை

கடந்த வருடம் வெளிவந்த தங்கல் படம் ரூ 800 கோடி வரை வசூல் செய்து விட் டது. இப்படத்தின் சாதனையை பாகுபலி-2 தான் முறியடிக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் தற்போது தங்கல் முன் பதிவு சாதனையை பாகுபலி-2 முறியடித் துவிட்டது. ஒரு குறிப்பிட்ட டிக்கெட் முன் பதிவு தளத்தில் மட்டும் இது வரை ஒரு மில்லியன் டிக்கெட் விற்றுள்ள தாம்.


மேலும் நேரடி முன்பதிவு, மற்ற தளங் களில் வரும் முன்பதிவு இதை வைத்து பார்க்கையில் பாகுபலி-2 வசூலில் எளிதாக தங்கலை முறியடித்துவிடும் என தெரிகின்றது.



## இந்தியாவிலேயே நம்பர் வன் 6 நாட்களில் இமாலய வசூல்

பாகுபலி-2 இந்தியாவே அதிரும் வகையில் வசூல் செய்து வருகின்றது. இப்படத்தின் வசூல் நாளுக்கு நாள் அதிகரித்து தான் வருகின்றது. இந்நிலையில் இப்படம் இந்தியாவின் நம்பர் 1 வசூலான PK மற்றும் தங்கல் சாதனையை முறியடித்துள்ளது. அதிலும் படம் வெளிவந்த 6 நாட்களில் இச்சாதனையை இப்படம் நிகழ்த்தியுள்ளது.பாகுபலி-2 6 நாட்களில் உலகம் முழுவதும் ரூ 800 கோடி வசூல் செய்துள்ளது. இதில் இந்தியாவில் மட்டுமே ரூ 630 கோடி, வெளிநாடுகளில் ரூ. 155 கோடி என வசூல் செய்துள்ளது.

# கிரிக்கெட்டின் சுவாரஸ்யமான நிகழ்வுகள்




பல வருசமா கிரிக்கெட் பார்க் கும் ரசிகர் களுக்கு கிரிக்கெட்டின் இந்தச் சுவாரஸ்யமான நிகழ்வுகள் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

1996இல் பாகிஸ் தான் மோதிய ஆட்டத்தில் அப்ரிடிக்குத் தன் ஆட்டத்தை வெளிப்படுத்த சரியான துடுப்பாட்ட மட்டை இல்லை. அதையறிந்த வக்கார் யூனிஸ் சச்சின் பயன்படுத்திய துடுப்பாட்ட மட்டையைக் கொடுத்தார்.

கிரிக்கெட் வெறி ஏறிப்போன அந்த துடுப்பாட்ட மட்டையைப் பயன்படுத்தி 11 சிக்ஸர்களையும், 6 ப்வுண்டரிகளையும் அடித்து விளாசினார் அப்ரிடி.

ஆட்டத்தின் முடிவில் 37 பந்துகளில் சதம் அடித்துக் கலக்கினார். வேகமாக சதம் அடித்தவர்கள் பட்டியில் முதல் ஆளாக வந்தார் அப்ரிடி. அதற்குப் பின் ஆடிய கோரி ஆண்டர்ஸன் 36 பந்துகளிலும், டிவில்லியர்ஸ் 31 பந்துகளில் சதம் அடித்து அப்ரிடி சாதனையை முறியடித்தனர்.

**கெயில் கெயில்தான்ய்யா!**

பொதுவாக டெஸ்ட் போட்டி என்றாலே "ஸ்லோ அண்ட் ஸ்டடி வின்ஸ் தி ரேஸ்" கதைதான். எவ்வளவு பெரிய அக்ரெஸிவ் துடுப்பாட்ட வீரனாக இருந்தாலும் அவர் சந்திக்கும் முதல் பந்தை கட்டை வைத்துதான் ஆரம்பிப்பார். ஆனால் கிட்டத்தட்ட 140 வருட கிரிக்கெட் வரலாற்றில் 2012இல் வங்கதேசத்திற்கு எதிரான ஆட்டத்தில் தான் சந்தித்த முதல் பந்தினை சிக்ஸருக்கு விரட்டிய ஒரே ப்ளேயர் மேற்கிந்தியத் தீவுகளின் அணியைச் சேர்ந்த கிறிஸ் கெயில் மட்டும்தான். என்னதான் ஒரு நாள் போட்டி, இருபது-20 போட்டிகளில் அடித்து நொறுக்கினாலும் டெஸ்ட் போட்டிளில் முதல் பந்தில் சிக்ஸர் அடிக்கும் திறமையையும், தைரியமும் அண்ணன் ஒருவருக்குத் தான் உண்டு.

1960இல் இந்தியாவைச் சேர்ந்த அப்பாஸ் அலி பெய்க் அவுஸ்திரேலியாவிற்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் தனது அரை சதத்தைப் பதிவு செய்தார்.

அந்த நேரத்தில் சற்றும் எதிர்பாராமல் ஓடியன்ஸ் கலரியில் இருந்த ஒரு இளம் பெண் மைதானத்திற்குள் ஓடி வந்து வாழ்த்தும் வகையில் அப்பாஸ் அலியின் கன்னத்தில் முத்தமிட்டார். கிரிக்கெட் வரலாற்றில் இந்த நிகழ்வு அதிர்ச்சி ரகம்.

இந்தியாவைச் சேர்ந்த கிரிக்கெட் வீரரான இஃப்திகார் அலி கான் ஆறு டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். அதில் மூன்று போட்டிகளில் இங்கிலாந்தின் அணித்தலைவராகவும், மூன்று போட்டிகளில் இந்தியாவின் அணித் தலைவராகவும் விளையாடி யுள்ளார்.


இரண்டு அணிகளில் விளையாடிய குறிப்பிட்ட வீரர்களுள் இவரும் ஒருவர். அதுமட்டுமன்றி பொலிவுட்டில் கலக்கிக் கொண்டிருக்கும் சயிஃப் அலி கான் மற்றும் சோஹா அலி கானின் தாத்தாவும் இவர் தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

*கிரிக்கெட் :* விதிமுறையின் கீழ் இரண்டு அணிகளுக்கும் சரிசமமாக ஓவர் நிர்ணயித்தனர். அதில் முன்னதாக 60 ஓவர்கள் வரை போட்டி நடந்ததும் உண்டு. சில நேரங்களில் 40, 45, 50, 55 என்ற ஓவர்கள் அளவில் கூட போட்டிகள் நடைபெற்றிருக்கின்றன. 1983இல் இந்தியா உலகக் கோப்பையினை வென்றது.

அது மட்டுமில்லாமல் 60 ஓவர், 50 ஓவர், 20 ஓவர் ஆகிய அனைத்து ஓவர்களிலும் உலகக் கோப்பைகளை வென்ற ஒரே அணி இந்தியா தான்.

சச்சின் இந்தியாவுக்கு முன்னதாக பாகிஸ்தான் அணிக்கு விளையாடியுள்ளார் என்று சொன்னால் உங்களால் நம்ப முடியுதா பாஸ்? ஆமாம்... இந்தச் சம்பவம் 1987 இல் இந்தியா - பாகிஸ்தான் காட்சி ஆட்டத்தில் நிகழ்ந்தது. பாகிஸ்தானைச் சேர்ந்த ஜேவத் மற்றும் அப்துல் காதர் மதிய உணவிற்காக சாப்பிடச் சென்றுவிட்டனர். அந்த நேரத்தில் சச்சின் பாகிஸ்தான் அணிக்காக சப்ஸ்டிட்யூட் ப்ளேயராக விளையாடியுள்ளார்.

இந்தியாவைச் சேர்ந்த சுழல் பந்துவீச்சாளர் பபு நட்கார்னி. இவர் சென்னையில் நடைபெற்ற இங்கிலாந்திற்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் தொடர்ச்சியாக 21 மெய்டன் ஓவர்களை வீசியுள்ளார். (க)



# facebook

## ஒரு குழந்தையின் கேள்வி



பிரியா காலையில் ஜன்னலை மெல்ல திறந்தாள். ஒரு கப் தண்ணீரை பருகியபடி ஒரு நிமிடம் தன் அடுப்பங்கரை ஜன்னல பக்கமாய் சாய்ந்த பக்கத்துக்கு வீட்டு மாமரத்தின் இலைதளையும் அது தந்த குளிர் தீண்டலையும் ரசித்தாள். கடகடவென சமையல் வேலைகளை ஆரம்பித்தாள்.

நாலு வயது குழந்தைக்கு தாய் அவள். அவளின் செல்ல பட்டு குட்டி ஜெனி முழிப்பதற்குள் தன் வேலையை முடிக்க எத்தனித்தாள். இல்லாவிட்டால் அவள் தொந்தரவில் இவளால் ஒன்றும் செய்ய முடியாமல் போகும் என்பதாலே இத்தனை அவசரம் காட்டினாள்.

பின் செல்ல மகளை எழுப்பி பல் துலக்க வைத்து அதற்கு ஒரு கதை சொல்லி காரணம் சொல்லி அவளை தேநீர் குடிக்க வைத்து பள்ளிக்கு அனுப்ப வேண்டுமே. அதுவும் இந்த வருடம் தான் பள்ளியில் சேர்த்து உள்ளதால் காலையில் ஒரே திண்டாட்டம் தான். குளிப்பாட்டி அப்புறம் சாப்பாடு ஊட்டி விட்டு பள்ளி வண்டி வந்து அவளை ஏற்றி அவளுக்கு விடைகொடுத்து வந்து நாற்காலியில் சாயும் போது காலை வயலில் களை பிடுங்கி மாலையில் வீடு திரும்பிய சோர்வு.

காலை உணவை உட்கொள்ளும்போது கூட குழந்தை அரை தோசை தானே சாப்பிட்டாள் என்ற பெருமூச்சோடு தான் முடித்தாள். முடிந்தவரை எல்லா வேலைகளையும் ஜெனி வரும் வரை வைத்திராமல் அவள் வருவதற்குள் முடித்துவிட்டு அவளுக்காக காத்திருப்பாள் ஏதாவது தின்பண்டதோடும் ஒரு கப் தேநீரோடும்.

அன்று மாலையும் அப்படி தான். பள்ளியில் என்ன நடந்தது. சமத்தாக இருந்தியா? வகுப்பு எப்படி இருந்தது என்று என்னென்னவோ கேட்க ஜெனி வழக்கம் போல சிரித்தாள்,சமாளித்தாள். அப்புறம் நிஷா என்று ஆரம்பித்தால் போதும் ஏதேதோ சொல்ல ஆரம்பிப்பாள்.

நிஷா அவள் தோழி. அவளை பற்றி மட்டுமே அவள் விரும்பி கூறுவாள். அவள் இடித்ததாகவும் சொல்வாள் ,பின்னொரு நாள் அவளை ரொம்ப பிடித்ததாக சொல்வாள். அவளுக்கு பாட்டி இருக்கு நமக்கு ஏன் இல்லை என்றாள் ஒருநாள். நானாகவே போதும் டி ராசாத்தி என்று நிறுத்தும் வரை தொடரும் அவள் கதைகள்.

அன்றும் அப்படி தான் பேசி கொண்டிருக்கும் போது திடீரென ஜெனி கேட்டாள் நேத்து தொலைக் காட்சியில் பார்த்த புது பொம்மை வேண்டும் என்றாள். அம்மா எப்பவும் போல நீ ஜீசஸ் கிட்ட கேளு வாங்கி தருவாங்க என்றாள். இது ப்ரியாவின் வழக்கம். குழந்தை ஏதாவது வேண்டும் என்று கேட்டால் வேண்டாம் என்று விதண்டாவாதம் பேசி அவள் மனதை நோகடிக்கவும் மாட்டாள். இல்லை உடனே இந்தா பிடி என்று கையில் கொடுக்கவும் மாட்டாள்.

நீ கடவுள் கிட்ட வேண்டிக்கோ உனக்கு கிடைக்கும் என்பாள். கூடவே நல்ல பிள்ளையா இருந்தால் கிடைக்கும் என்றும் சொல்லி தருவாள்.

இன்றும் அப்படி தான் சொன்னாள் அவள். என்ன நினைத்தாளோ மகள். அம்மா இந்த கடவுளுக்கு பிரேயர் பண்ணனும்னு தோணினா அவங்க யார்ட்ட பிரேயர் பண்ணுவாங்கா மா?

கடவுளுக்கு என்ன வேணும் ? அவருக்கு மேல் யாரு உண்டு ? எப்படி சொல்ல அவளுக்கு ? என்ன பதில் சொல்லவென்று தெரியாமல் திக்கி நின்ற அம்மாவுக்கு அவளே பதில் சொன்னாள் நாம சர்ச் கு போற மாதிரி அவங்க வேற சர்ச் போய் வேற ஜீசஸ் கிட்ட பிரேயர் பண்ணுவாங்க அப்டி தான் அம்மா? என்ன சொல்லவென தெரியாமல் நான் குழம்பி நிற்க இது கூட தெரியாதா என சிரித்த அவள் சிரிப்புக்கு சிரிப்பை தவிர வேறு ஒன்றையும் பதிலாக சொல்லமுடியவில்லை அம்மாவுக்கு.

ம் குழந்தையின் அன்பு நம் அன்பை விட ஆழமானது. நம் நம்பிக்கையை விட அதீதமானது. பெரிய குழப்பங்களுக்கு கூட எளிதாக தீர்வு சொல்லும் இந்த குழந்தையின் தன்னம்பிக்கையும் எதற்கும் குழம்பாத தெளிவும் அழகான பாடம் ஒன்றும் இல்லாத பிரச்சினைகளை உலக உருண்டையாய் நம் தலையில் சுழல விட்டு கொண்டு தலை வலிக்கிறது என்று புலம்பி கொண்டு திரியும் நம்மை போன்ற பேதைகளுக்கு என நினைத்தபடி இலகுவான மனதோடு நகர தொடங்கினாள் பிரியா.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1065

### ஸ்ரீபத்மராசா தினேசன்



நீ அடுத்தவனை அழிக்க நினைத்தால்....
உன்னை அழிக்க ஒருவன் வந்து கொண்டிருப்பான்...!!!

### சத்தியதாஸ்



### கோகுலவண்ணன் கோபுராம்




### தமிழச்சி



### நர்மதா



### கேதாரனி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 83

## நீரிழிவு கால் புண் காரணமாக ஏற்படும் அங்கவீனத்தை தடுக்கும் முறைகள்

- கால் மற்றும் பாதங்களைத் தினமும் கழுவிச் சுத்தமாக வைத்திருத்தல்.
- தினமும் கால்விரல்களுக்கிடையில் ஈரலிப்பின்றி பேணுதல்.
- தினமும் கால்விரல்கள், விரல் ஈறுகள், பாதம் மற்றும் கால்களின் கால்புண் ஏற்படக்கூடிய காரணிகள் பற்றி அவதானித்தல்.
- இதற்குக் குடும்ப உறுப்பினர்கள் உதவுதல் அவசியம்.
- தொழில் செய்யும் இடங்களிலும் வீதியில் நடக்கும் போதும் பாதணிகள் அணிதல்.



- இறுக்கமான மற்றும் மிகவும் தொய்ந்து பழுதான காலணிகளைத் தவிர்த்தல்.
- கால்விரல் நகங்கள் மட்டமாக வெட்டுதல்.
- பாதத்தில் ஏற்படும் தோல் தடிப்புக்கள் மருத்துவரால் சிகிச்சை அளிக்கப்பட்டு நீக்கப்படவேண்டும். இவற்றை நோயாளி வெட்டியகற்ற முற்படக்கூடாது.
- பாதம் மற்றும் காலில் ஏற்படும் காயங்களுக்கு (சிறியகாயங்கள் உட்பட) உடனடி மருத்துவ ஆலோசனை பெறுதல். தாமதப்படுத்தலும் நாட்டுவைத்தியம் செய்தலும் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும்.
- நீரிழிவுக்குப் பாவிக்கும் மருந்துகளைத் தவறாது உபயோகித்து இரத்தத்தில் சீனியின் அளவைப் பேணுதல்.
- புகைப்பிடித்தலைத் தவிர்த்தல்.

Dr.எஸ்.ராஜேந்திரா
சத்திரசிகிச்சைநிபுணர்.

## ஒழுங்காக மலங்கழித்தல் ஆரோக்கியத்தில் இன்றியமையாத ஒரு விடயம்

ஒழுங்காக மலங்கழித்தல் குழந்தையின் ஆரோக்கியத்தில் மிக இன்றியமையாத ஒரு விடயமாகும். ஒழுங்காக என்பது தினமும் என்ற அர்த்தத்தில் குறிப்பிடப்படவில்லை.

ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகள், 4 இலிருந்து 7 நாட்களுக்கு ஒருமுறை மலங்கழிப்பதும் உண்டு. தினமும் இரண்டு அல்லது மூன்று முறை மலங்கழிக்கும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

வளர்ந்த சிறுவர்களில் 2-3 நாட்களுக்கு ஒரு முறை மலங்கழித்தல் சாதாரண நிலைமையாக கொள்ளப்படுகின்றது. அதிகரித்த கால இடைவெளியோடு மலத்தின் இறுக்கத்தன்மை, கழிக்கும் போது நோவை உணர்தல், மலத்துடன் இரத்தம் காணப்படுதல் போன்ற அறிகுறிகளும் இருக்கும் போதே "மலச்சிக்கல்" நோய் நிலைமையாக அடையாளம்காணப்படுகிறது.

இரண்டுகிழமைகளுக்கும் மேலாக, மலங்கழித்தலில் தாமதத்துடன் மேற்குறிப்பிட்ட சிக்கல்களும் உள்ள நிலைமையை "மலச்சிக்கல்" எனக் குறிப்பிடுகின்றோம். உணவுக்கால்வாயில் ஏற்படும் கட்டமைப்பு ரீதியான பிரச்சினையால் இந்த நிலைமை ஏற்படும் போது அல்லது தைரொயிட் சுரப்பிகுறைபாட்டால் இந்த நிலைமை ஏற்படும் போது பிறந்த சில நாட்களில் இருந்தே மலச்சிக்கல் அடையாளங் காணப்படுகின்றது.

தொழிற்பாட்டு ரீதியான "மலச்சிக்கல்" குழந்தையின் ஒருமாத வயது பூர்த்தியின் பின் எந்த வேளையிலும் உருவாகலாம். இது அதிகமான சந்தர்ப்பங்களில் மலங்கழிக்கும் போது பிள்ளை நோவை உணர்வதாலும் அதன் காரணமாக மலத்தை அடக்கப்படுவதாலும் ஏற்படுகின்றது.

மலங்கழிக்கும் போது, நோவை உணர்வதற்கு மலத்தின் இறுக்கத்தன்மையே பெரும்பாலும் காரணமாகிறது. உண்ணும் உணவில் நார்த்தன்மையுள்ள உணவுகள் குறைதல், போதியளவு நீர் அருந்தாமை என்பன இதில் பங்களிக்கின்றன. மலங்கழிக்கப் பழகுவதில் உள்ள குறைபாடுகளும் மலச்சிக்கல் ஏற்படுவதில் மிகப் பெருமளவு பங்களிக்கின்றன.

மலங்கழித்தலுக்கான ஏற்ற சூழலை உருவாக்குவது மிக அவசியமானது. குழந்தைமலங்கழிக்கும் உணர்வை சைகைகளாகவோ வார்த்தை மூலமாகவோ வெளிப்படுத்தும் போது அதை அடையாளம் காண்பது இவற்றில் முதற் படியாகும். குழந்தையின் வயதுக்கேற்றபடி, மலப் பெட்டியிலோ (Potty ) அல்லது மலசலகூடத்திலோ அமர்த்திப் பழக்குவது மிக நன்று.

இவ்வாறு பழக்கும் போது பிள்ளைகள் நின்று கொண்டோ அல்லது விளையாடிக் கொண்டிருக்கும் போதோ மலங்கழிக்கப் பழகுவதும் உண்டு. இதன் போது மலங்கழித்தல் நிகழ்வுக்குப் பங்களிக்கின்ற தசைகளின் தொழிற்பாடு பூரணமாக கிடைப்பதில்லை. மலங்கழிப்பதன் பூரணமான திருப்தியைக் குழந்தை பெறுவதுமில்லை. இதனால் அடுத்த தடவை மலங்கழிக்கும் உணர்வை குழந்தை பெறும்போது அதைச் செயற்படுத்துவதில் தயக்கம் கொள்கிறது. ஒழுங்கற்ற மலங்கழித்தல் திண்மத் தன்மையான இறுக்கமான மலத்தை உருவாக்கிறது. அத்துடன் மலங்கழிக்கும் போது நோவை ஏற்படுத்தி மலச்சிக்கல் என்ற நோய் நிலைமைக்கு இட்டுச் செல்கின்றது. வெட்கம் காரணமாகவோ, மலங்கழித்தலின் போது ஏதாவது காரணங்களுக்காக தண்டிக்கப்படுவதாலோ அல்லது பயத்தினாலோ மேற்குறிப்பிட்ட வகையான மலச்சிக்கல் உருவாக வாய்ப்புண்டு.

குழந்தை வளரும் போது மலங்கழிக்கும் செயலை குறிப்பிட்ட நேரத்துக்கு குறிப்பிட்ட இடத்தில் அமர்த்திக் கிரமமாக பழக்கமாக மாற்றுவது அவசியம்.

தினமும் ஒருவேளையில் சாப்பாட்டிற்குப்பின் 10-15 நிமிடங்கள் அமர்த்திப் பழக்குவது நல்லது. வேறுநோய்கள் ஏற்படும் போது, வைத்தியசாலையில் அனுமதிக்கும் போது, மலங்கழித்தலில் ஒழுங்கு மாற்றங்கள் நிகழ்வதுண்டு. ஆனால் அவை நிரந்தரமானவை அல்ல.

நோயின் தீவிரத்தைப் போலவே, தேவையற்ற அல்லது நீண்டகால மருந்துப் பாவனையும் குழந்தைகளின் உடல் நலத்துக்கு மிகப் பாதிப்பை ஏற்படுத்தவல்லது.

மலச்சிக்கலுக்கான காரணியைக் கண்டறிந்து அதை நீக்குவது சிகிச்சையின் முதற் படியாகும். முறையான உணவுப் பழக்கங்கள், போதியளவு நீர் அருந்துதல் என்பன



உறுதி செய்யப்படவேண்டும். குழந்தைகளுக்கு உணவுண்ணப் பழக்குவது போல் மலங்கழித்தலைப் பயிற்றுவிப்பதையும் பெற்றோர் முக்கியகடமையாக கருதுவது அவசியம்.

மலங்கழிக்கும் சூழல் வெட்கம், பயம், அருவருப்பு ஆகிய உணர்வுகளை தோற்றுவிக்காததாக அமைவது அவசியமாகும்.

மலச்சிக்கல் தொழிற்பாடு ரீதியானதெனினும் ஆரம்பத்தில் மருந்துப்பாவனை தேவைப்படலாம். எந்தவேளையிலும் மருத்துவரின் ஆலோசனையுடனேயே மருந்தைப் பெறவேண்டும்.

ஒரு தடவை கொடுத்த மருந்தை மருத்துவ ஆலோசனை இன்றி மீளமருந்துக் கடைகளில் பெற்று பயன்படுத்துவது பொதுவாக அவதானிக்கப்படுவதொன்று. இது குழந்தையின் இயல்பான மலங்கழித்தலை மிக பாரதூரமாகப் பாதிக்கும் ஒரு விடயமாகும்.

ஒழுங்கான மலங்கழித்தல் பயிற்சியும், ஆரோக்கியமான மலங்கழிக்கும் சூழலும் குழந்தையின் வயது தொழிற்பாடுகளுக்கு தகுந்தவையாக வழங்கப்படவேண்டும்.

மேற்குறிப்பிட்ட செயன்முறைகளால் மலச்சிக்கலைக் குணப்படுத்தப்பட முடியாதபோது வைத்திய ஆலோசனையை நாடுவது அவசியம். ஏனெனில் இந்த மலச்சிக்கலானது சில அரிதாகக் காணப்படுகின்ற நோய் நிலைமைகளாலும் ஏற்படலாம். நீண்டகால மலச்சிக்கலானது குழந்தையின் வளர்ச்சியில் பின்னடைவை ஏற்படுத்துகின்றது. உள ஆரோக்கியத்திலும் இந்த நிலைமை பெரிய தாக்கத்தை விளைவிக்கின்றது.

மலச்சிக்கல் எனும் நோய் நிலைமையைச் சரியாக ஆரம்ப நாட்களிலேயே அடையாளம் காண்பதாலும் சரியான முறைகளைக் கடைப்பிடிப்பதாலும் குழந்தையின் உடல் , உள ஆரோக்கியத்தில் நேர்முகமான பங்களிப்பைச் செய்ய முடியும்.

வைத்தியர் குமுதினி
கஜையழகன்
குழந்தை நலவைத்தியர்.

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.